
உ

குருபாதம்

# ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 42 ] ருத்ரோத்காரி ஆண்டு சித்திரைத் திங்கள் 10-5-83 [ இதழ்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த தேசிக பரமாசாரிய சுவாமிகள்

## குருபூஜை விழா 1 - 6 - 83

உ
குருபாதம்
# " ஞானசம்பந்தம் "
தருமையாதீனத் திங்கள் இதழ்

| மலர் 42 | 10-5-83 | இதழ் 6 |
|---|---|---|


தருமை ஆதீனக் குருமுதல்வர்



ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

## உட்பொருள்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| 1 | திருத்தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி திருக்கோயில் பெருவிழா அழைப்பிதழ் ... | க |
| 2 | தருமை வருக! குருவருள் பெறுக! ... | 255 |
| 3 | தருமைஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ... | 258 |
| 4 | வசையில் இசை ... | 271 |
| 5 | திருவருட்பாத் திரட்டு | 277 |
| 6 | அபிராமி அந்தாதி ... | 281 |
| 7 | சுமித்திரை - கம்பனைப் பாராட்டுதல் | 287 |
| 8 | ஒழுக்கச் சிதைவு ... | 290 |
| 9 | மழை வேண்டுமா? தவறுசெய்யோம் எனச் சபதம் செய்யுங்கள்! | 291 |
| 10 | கடிதங்கள் ... | 293 |
| 11 | ஸ்ரீ சபாநாயகர் கோயில் வேண்டுகோள் ... | 296 |
| 12 | எதிர்காலம் ... | 298 |
| 13 | நீறு பெற வாரீர்! ... | 304 |
| 14 | செய்திகள் ... | 310 |


உ
குருபாதம்

### ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

—[★]—

வந்த பொருளாசை
மண்ணாசை பெண்ணாசை
இந்தவகை யாசையெல்லாம்
என்மனத்தில் — வந்துமினிச்
சேராமல் வாழ
நினைகண்டாய் தென்கூடற்
பேராத சொக்கநா தா.

— சில பிரதிகளில்
காணப்படும் பாடல் 6

**ஆசிரியர் :-**
வித்துவான்
**இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**

**துணையாசிரியர் :-**
மகாவித்துவான்
**சி. அருணைவடிவேல் முதலியார்**

ஆண்டுச் சந்தா உள்நாடு ரூ. 12
ஆண்டுச் சந்தா சிலோன் ரூ. 23
ஆண்டுச்சந்தாவெளிநாடு ரூ. 25
ஆயுள் சந்தா உள்நாடு ரூ. 125
ஆயுள் சந்தா வெளிநாடு ரூ. 250



உ

குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்

## ஸ்ரீ ஞானாம்பிகை உடனாகிய ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயில்

# பெருவிழா அழைப்பிதழ்

பெருங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் ஆன்மாக்கள்மீது வைத்த எல்லையிலாப் பெருங்கருணையினாலே காணாத அருவினுக்கும் உருவினுக்கும் காரணமாய் நிகழ் குறியாம் சிவலிங்கமாதி திருவுருக்கொண்டு எழுந்தருளியிருக்கின்ற தலங்கள்பலவற்றுள், இந்திரன், அகத்தியர், தருமன் ஆகியோர்களால் பூசிக்கப்பெற்றதும், காவிரி முதலிய தீர்த்தங்களால் சிறப்புற்றதும், வில்வாரண்யம் என்னும் திருநாமம் உற்றதும் ஆகிய சிறப்புக்களை உடையது தருமபுரம். இத்தலத்தில் ஸ்ரீ ஆலவாய்ச்சொக்கநாதப்பெருமான் திருவருளையும், கமலை ஸ்ரீஞானப்பிரகாசதேசிகர் குரு அருளையும் நிரம்பப்பெற்றுத் திகழ்ந்த ஸ்ரீ குருஞானசம்பந்ததேசிக பரமாசாரிய சுவாமிகள், தம் குருமூர்த்திகளது அருளாணையின்படிச் சைவ பரிபாலனம் என்றும் நிகழ்ந்துவருவதற்குரிய ஞானபீடத்தை இங்கு நிறுவி வீற்றிருந்து, ஜீவசமாதி கூடிய கோயிலே ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில். இதன்கண் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ ஞானாம்பிகை உடனாகிய ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமிக்கு. ருத்ரோத்காரி ௵ வைகாசித்திங்கள் 9 ஆம் நாள் ( 23—5—1983 ) திங்கட்கிழமை தொடங்கிப் பெருவிழா நடைபெறும்.

இந்நாட்களில் திருநெறிய தெய்வத் தமிழ்மாநாடும், சமயப் பயிற்சி வகுப்பும் நடைபெறும். சிவநேசச்செல்வர்கள் யாவரும் வந்திருந்து திருவிழாக்காட்சியைத் தினமும் தரிசித்தும் சொற்பொழிவுகளைக் கேட்டும் நலம் பெறுவார்களாக.

திருக்கயிலாயபரம்பரைத் தருமையாதீனம்

தருமையாதீனம் மடாலயம், ருத்ரோத்காரி–வைகாசி. } **கார்பார் சொக்கநாதத்தம்பிரான்**

உ

சிவமயம்

தருமையாதீனத்தை நிறுவியருளிய

# ஸ்ரீ ஆதிபரமாசாரியமூர்த்திகள் சரிதம்

பாண்டிய நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் கார்கார்த்தவேளாள மரபில் ஸ்ரீ சுப்பிரமணியப்பிள்ளை மீனுட்சியம்மை என்னும் பெற்றேர்களுக்கு அரும்பெறற் புதல்வர் ஒருவர் சோமவார சுபதினத்தில் தோன்றினர். பிள்ளைத்திருநாமம் ஞானசம்பந்தர் என்பது. இளமையிலேயே கல்வியில் குறைவிலாது நிரம்பினர். பெற்றேர் தம் ஆன்மார்த்த மூர்த்தியாம் ஸ்ரீசொக்கலிங்கத்தை வழிபட மதுரைசென்ற பொழுது உடன்சென்ற ஞானசம்பந்தர் "உண்மை அம்மை அப்பர் அங்கயற்கண்ணியும், ஆலவாய் அரனுமே" என்று சொல்லிப் பெற்றேருடன் ஊர்திரும்ப மறுத்து மதுரையிலேயே இருந்தார்.

நாள்தோறும் பொற்ருமரைத் தீர்த்தத்தில் மூழ்கிக் காலந் தோறும் ஸ்ரீ சொக்கநாதரை வழிபட்டுவந்தார். பொற்ருமரைத் தீர்த்தக் கரையில் சிவனடியார் பலர் நீராண்ட புரோதாயம் ஆடி, தூயவெண்ணீறு துதைந்தபொன்மேனியும் தாழ் வடமும் உடையவர்களாய் நாயகன் சேவடி தைவரும் சிந்தை யுடன் அமர்ந்து நைந்துருகும் அன்போடு சிவபூஜை செய்தனர். அவ்வடியார்களது செயலில்ஒருநாள் ஞானசம்பந்தரதுஉள்ளம் ஈடுபட, முற்பிறப்பின் பூஜை உணர்வு அவருக்கு முகிழ்த் தெழுந்தது. ஆலவாய் அப்பனை, ஆன்மார்த்த மூர்த்தியாகப் பூஜிக்க அளவிலா ஆர்வங்கொண்டு அப்பெருமானை வேண்டி னர். அப்பெருமான் அவரது கனவில் தோன்றி, "முற்பிறப்பில் உன்னல் பூஜிக்கப் பெற்றுவந்த நாம் பூஜைப்பெட்டகத்துடன் பொற்ருமரைத் தீர்த்தத்துள் ஈசானத்திசையில் இருக்கிறேம்; மூழ்கிப் பெறுக" என்று அருளிச்செய்தார். ஞானசம்பந்தர், அங்ஙனமே மறுநாள் பொற்ருமரைத் தீர்த்தத்தில் மூழ்கி, ஆன்மார்த்த மூர்த்தியைப் பெற்று ஆனந்தபரவசம் உற்ருர். பின்னர், ஸ்ரீ சொக்கநாதர் சந்நிதியில் சென்று "பெருமானே! பூஜிக்கும்நெறியை அருள்புரியவேண்டும்" என்றுவேண்டினர். அன்றுஇரவு பெருமான் கனவில் தோன்றி, "திருவாரூர் ஞானப் பிரகாசரிடம் ஞானேபதேசமும் சிவபூஜையும் பெறுக" என்று

பணித்தருளி ஞானப்பிரகாசரது கனவிலும்சென்று, "உன்னிடம் வருகின்ற நம் ஞானசம்பந்தனுக்கு விதிப்படி சிவஞானோப தேசம்செய்து சிவபூஜையும் எழுந்தருளப் பண்ணிவைப்பா யாக" என்று சொல்லி மறைந்தருளினர்.

திருவாரூரில் சித்தீச்சரத்தில் தென்முகக்கடவுளின் திரு முன்பு சீடரின் வருகையை ஞானப்பிரகாசர் எதிர்நோக்கி யிருந்தார். அருளாணையின்படி ஞானசம்பந்தர், கமலையை அடைந்து குருமூர்த்தியைக் கண்டதும், காந்தம் கண்ட இரும்புபோல் அவர்வசமாகி, சிவதீட்சையும், சிவபூஜையும் பெற்றார். பின்பு அவர் நாள்தோறும் ஸ்ரீ சொக்கலிங்கத்தைப் பூஜித்துப் பாடியதே சொக்கநாத வெண்பா. அவர் செய்த குருத்தோத்திரமே ஞானப்பிரகாசமாலை. ஒருநாள், ஞானப் பிரகாசர் பூங்கோயில் வழிபாட்டினை முடித்து மீள்கையில் கைவிளக்கு எடுப்போன், அங்கு இல்லாமையைக்கண்டு,ஞான சம்பந்தர் தாமே அப்பணியினை மேற்கொண்டு செல்ல' சிவத்தியான உள்ளத்துடன் இல்லம் செல்லும் குருமூர்த்திகள் இல்லத்தை அணுகியபொழுது "நிற்க" என்று சொல்லி உள்ளே சென்றார். குருவாணை கடவாத ஞானசம்பந்தர் கைவிளக்கோடு வெளியிலே நின்றிருந்தார். மழை வந்தது. ஓர் அடியும் அப்புறம் பெயர்ந்திலர். மழை அவருக்கு மூன்றடி அப்பால்சூழ்ந்தே பெய்தது. மறுநாட்காலையில்குருபத்தினியார் கண்டார். குருமூர்த்திகள் கேட்டு வந்து, 'நீர் குவலயத்திற்கு உண்மை விளக்கும் குருவாயினீர்; தனியிடத்தில் இருந்து உம்மைநாடி ஓடிவரும் காரணர்க்கு உண்மை வைத்துச் சமய பரிபாலனம் புரிக' என்றருளினர். சீடர்,

"கனக்கும்பொதிக்கும்எருதுக்கும்தன்னிச்சை கண்டதுண்டோ
எனக்கும் உடற்கும் எனதிச்சையோ? இணங்கார்புரத்தைச்
சினக்கும் கமலையுள் ஞானப்பிர காச சிதம்பர இன்று
உனக்கிச்சை எப்படி? அப்படியாக உரைத்தருளே"

என்று வேண்டினர். அதுகேட்டுக் குருமூர்த்திகள் 'தருமபுரம் செல்க, எனப் பணித்தருளினர்.

ஞானசம்பந்தர் அன்று முதல் குருஞானசம்பந்தராகித் தருமபுரத்தை அடைந்து சமய பரிபாலனம் புரிந்தார்; ஞான நூல்கள் பல அருளினர்; ஆனந்தபரவசர் முதலிய பலர்வழி ஞான பரம்பரையை உலகில் நிலவச் செய்தருளினர். அவரே தருமபுர ஆதீன ஞானபீடத்தின் ஆதிபரமாசாரிய மூர்த்திகள்.

உ

# திருநாள் விபரம்

ஸ்ரீ வைகாசி

| தமிழ்த் தேதி | ஆங்கிலத் தேதி | கிழமை | திரு நாள் | விபரம் |
|---|---|---|---|---|
| 8 | 22—5—83 | ஞாயிறு | | காலை கணபதிஹோமம். நவக்கிரகஹோமம். ஹஸ்த நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் மாலை மணி 6க்குமேல் 7க்குள் விருச்சிக லக்னத்தில் அனுக்ஞை விக்னேஸ்வரபூஜை, வாஸ்துசாந்தி மிருத்சங்கிரஹணம், அங்குரார்ப்பணம், ரக்ஷா பந்தனம். |
| 9 | 23—5—83 | திங்கள் | 1 | ஹஸ்த நக்ஷத்திரம் கூடியசுபதினத்தில் காலைமணி 9-க்குமேல் 9-35க்குள் விருஷப லக்னத்தில் ஸ்ரீ ஞானம்பிகை உடனுகிய ஸ்ரீ ஞானபுரீசுவர சுவாமி மகத்துவஜாரோகணம். |
| 10 | 24—5—83 | செவ்வாய் | 2 | கற்பக விருக்ஷக்காட்சி. |
| 11 | 25—5—83 | புதன் | 3 | பூதம், பூதகி, இடும்பவாகனக் காட்சி. |
| 12 | 26—5—83 | வியாழன் | 4 | நந்தி, காமதேனு, குதிரைவாகனக்காட்சி. |
| 13 | 27—5—83 | வெள்ளி | 5 | சகோபுர ரிஷபவாகனக் காட்சி. |

| | | | | |
|---|---|---|---|---|
| 14 | 28—5—83 | சனி | 6 | யானை, அன்னம், ஆட்டுக்கடாவாகனக்காட்சி. |
| 15 | 29—5—83 | ஞாயிறு | 7 | இரவு மணி 9-45க்கு மேல் 10-45க்குள் மகர லக்னத்தில் திருக்கல்யாண வைபவம். புஷ்ப விமானம் வெள்ளிரதக்காட்சி. |
| 16 | 30—5—83 | திங்கள் | 8 | குதிரை, கிளி, யானைவாகனக்காட்சி. |
| 17 | 31—5—83 | செவ்வாய் | 9 | மாலை மணி 9க்குமேல் 10க்குள் கடக லக்னத்தில் மஹாரதாரோகணம் திருத்தேர் வடம்பிடித்தல். |
| 18 | 1—6—83 | புதன் | 10 | காலை ஸ்ரீ சபாநாயகர் தீர்த்தம் கொடுத்தருளல். பிறகு பஞ்சமூர்த்திகளும் ரிஷபாருடராய் எழுந்தருளிக் காவிரியில் தீர்த்தம் கொடுத்தருளல். இரவு துவஜாவரோகணம். |
| 19 | 2—6—83 | வியாழன் | | மௌன உற்சவம். |
| 20 | 3—6—83 | வெள்ளி | | ஸ்ரீ சண்டேசுவரர் உற்சவம் |
| 21 | 4—6—83 | சனி | | காலை உற்சவப் பிராயச்சித்தாபிஷேகம். மாலை மணி 5-15க்குமேல் 6-15க்குள் விருச்சிக லக்னத்தில் பஞ்சமூர்த்திகள் யதாஸ்தானம். |

# தருமையாதீனம் குருபூஜை விழா, சமயப் பயிற்சி வகுப்பு

தொடக்கம் 23—5—83 காலை 9-45 மணி அளவில்

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

## ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை

**தொடக்கவுரை :** சென்னை, திரு. கீ. இராமலிங்கனார் எம். ஏ.,

| தேதி கிழமை | முற்பகல் 10 to 11 | முற்பகல் 11 15 – to 12 - 15 | பிற்பகல் 2 – 30 to 3 – 30 | பிற்பகல் 3 – 30 to 4 – 30 |
|---|---|---|---|---|
| 23-5-83 திங்கள் | சிவஞான போதத்தில் பதி இயல்பு ச. தண்டபாணி தேசிகர் | | கம்பனில் தவம் இரா. இராதா கிருஷ்ணன் | நால்நெறிகள் ப. நீலா |
| 24-5-83 செவ்வாய் | சிவஞானபோதத்தில் பசு இயல்பு ,, | திருமுறைகள் சொ. சிங்காரவேலன் | கம்பனில் தொண்டு ,, | மணிவாசகர் காலம் கல்வெட்டு ஆதாரங்களுடன் என். சேதுராமன் |
| 25-5-83 புதன் | சிவஞானபோதத்தில் பாச இயல்பு ,, | சங்க நூல்கள் ந, ரா. முருகவேள் | கம்பனில் தியாகம் ,, | அறுவகைச் சமயங்கள் ந. ரா. முருகவேள் |

| | | | | |
|---|---|---|---|---|
| 26-5-83<br>வியாழன் | சிந்தனை அரங்கம்<br>(நிகழ்ச்சிநிரல் பார்க்க) | சிந்தனை அரங்கம்<br>(நிகழ்ச்சிநிரல்பார்க்க) | மேலைநாடுகளில்<br>சைவ சித்தாந்தம்<br>தி. ந. ராமச்சந்திரன் | உண்மை விளக்கம்<br>ஆறுறு தத்துவம்<br>சி. அருணைவடிவேல்<br>முதலியார் |
| 27-5-83<br>வெள்ளி | ,, | ,, | | சைவ வைணவ சமய<br>தத்துவங்கள்<br>S. K. இராமராசன் |
| 28-5-83<br>சனி | ,, | ,, | | மலபரிபாகம்,<br>இருவினை ஒப்பு<br>க. வச்சிரவேல்<br>முதலியார் |
| 29-5-83<br>ஞாயிறு | வேதம்<br>பி. இராமதாச ஐயர் | அவத்தைகள்<br>வி. சா. குருசாமி<br>தேசிகர் | சத்திநிபாதம்<br>,, | திருக்குறள்<br>கி. பழனியப்பனார் |
| 30-5-83<br>திங்கள் | உபநிடதங்கள்<br>சுவாமிநாத<br>சிவாசாரியார் | தமிழ் அருச்சனை<br>சுகி. சிவம் | ஆதீனக் கோவில்கள்<br>மு. கோவிந்தராசனார் | சொக்கநாதவெண்பா<br>மு. சிவச்சந்திரன் |
| 31-5-83<br>செவ்வாய் | ஆகமங்கள்<br>,, | சைவம் - வைணவம்<br>ஓர் ஒப்பீடு<br>,, | சிவபோகசாரம்<br>சொ. முத்தையன் | ஆதீனவரலாறு<br>இரா.செல்வக்கணபதி |

உ

குருபாதம்

# திருநெறிய தெய்வத் தமிழ் மாநாடு

---

## முதல் திருநாள்

23—5—83 திங்கட்கிழமை] [மாலை 6–30 மணி

### நக்கீரர் திருநாள்

வரவேற்புரை :

**வித்துவான் ஸ்ரீமத் இராமலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**
கட்டளை விசாரணை, வேளூர் தேவஸ்தானம்.

தொடக்கவுரை :

**திரு. B. S. மணிசுந்தரம்**
துணைவேந்தர், பாரதிதாசன் பல்கலைக்கழகம், திருச்சிராப்பள்ளி.

சிறப்புரை :

தமிழ்மொழிக்காவலர்
**திரு கீ. இராமலிங்கனார்.**
சென்னை.

தொடர் விரிவுரை :

'தமிழ்க்கடல்மணி'
**திரு. இரா. இராதாகிருஷ்ணன்** எம். ஏ.,
பேராசிரியர், தேசியக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

— திருமுருகாற்றுப்படை

இரவு 9 மணி

**வில்லிசை**

தருமபுரம், **திரு. சி. சிவசுப்பிரமணியன் குழுவினர்**

— ஸ்ரீ குருஞானசம்பந்தர்

## இரண்டாம் திருநாள்

24—5—83 செவ்வாய்க்கிழமை] [மாலை 6–30 மணி

## அருணகிரிநாதர் திருநாள்

வரவேற்புரை :

**வித்துவான் ஸ்ரீமத். சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள்**
தருமையாதீன சமயப் பிரசாரநிலையம், சென்னை.

தொடக்கவுரை :

கல்வெட்டாராய்ச்சி அறிஞர்
**திரு. என். சேதுராமன்** B. Sc., D. M. I. T.
இயக்குநர், இராமன் அண்ட் இராமன், கும்பகோணம்.

தொடர் விரிவுரை :

'தமிழ்க்கடல்மணி'
**திரு. இரா. இராதாகிருஷ்ணன்** எம். ஏ.,
பேராசிரியர், தேசியக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

— திருமுருகாற்றுப்படை

இரவு 9 மணி

**விகடம்**

நகைச்சுவைமாமணி, திருச்சேறை
**திருமங்கைதாசன்**

—❀—

## மூன்றும் திருநாள்

25—5—83 புதன்கிழமை] [மாலை 6–30 மணி

## குமரகுருபரர் திருநாள்

வரவேற்புரை :

வித்துவான்
**ஸ்ரீமத். மௌன மகாலிங்கத் தம்பிரான் சுவாமிகள்**
கட்டளை விசாரணை, ஸ்ரீ மௌன மடம், திருச்சிராப்பள்ளி.

தொடக்கவுரை :

பைந்தமிழ்ச்செல்வர்
**திரு. ச. சிவகுமாரன்** எம். ஏ.,
சென்னை.

தொடர் விரிவுரை

'தமிழ்க்கடல்மணி'
**திரு. இரா. இராதாகிருஷ்ணன்** எம். ஏ.,
பேராசிரியர், தேசியக் கல்லூரி, திருச்சிராப்பள்ளி.

— திருமுருகாற்றுப்படை

இரவு 9 மணி

**இன்னிசை**

செல்வன் எஸ். உமாமகேஸ்வரன்
செல்வி எஸ். புவனேஸ்வரி
மயிலாடுதுறை.

நான்காம் திருநாள்

26—5—83 வியாழக்கிழமை] [காலை 10-00 மணி

மெய்கண்டார் திருநாள்

## சமய, தத்துவ சிந்தனை அரங்கம்

வரவேற்புரை :

**ஸ்ரீமத். நெல்லையப்பத் தம்பிரான் சுவாமிகள்**
தருமபுரம்.

தலைமை :

காஞ்சிபுரம், தொண்டைமண்டல ஆதீனம் குருமகாசந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக பரமாசாரிய சுவாமிகள்**

சிந்தனைப்பொருள் :

"வைதிக சமயங்களில் முத்திநிலை"

முதன்மைச் சிந்தனையாளர் :

**டாக்டர் திரு. R. பாலசுப்பிரமணியன்** எம்.ஏ.,பி.எச்டி.,டி.லிட்
இயக்குநர்,
டாக்டர் இராதாகிருஷ்ணன் நினைவு தத்துவ ஆய்வுத்துறை
சென்னைப் பல்கலைக் கழகம், சென்னை.

இணைச்சிந்தனையாளர்கள் :

சித்தாந்தப்புலவர்மணி
**திரு. ந. ரா. முருகவேள்** எம். ஏ., எம். ஓ. எல்.
ஆசிரியர், திருக்கோயில், சென்னை.

**திரு. தி. ந. இராமச்சந்திரன்** பி. ஏ., பி. எல்.
வழக்குரைஞர், தஞ்சாவூர்.

சித்தாந்தக்கலைச்செல்வர்
**திரு. க. வச்சிரவேல் முதலியார்** பி. ஏ. எல். டி.
காஞ்சிபுரம்.

சித்தாந்தக்கலைமணி
**மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார்**
திருக்குறள் இருக்கை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.

சித்தாந்தக்கலாநிதி
**டாக்டர் திரு. ப. அருணாசலம்** எம். ஏ., பி. எச்டி.,
நாகர்கோயில்.

**புலவர் திரு. எஸ். கே. இராமராசன்**
பரமத்தி, வேலூர்.

## நான்காம் திருநாள்

26—5—83 வியாழக்கிழமை] [மாலை 6–30 மணி

### கருத்தரங்கம்

வரவேற்புரை :

**திரு. டி. என். அருணாசலம் பிள்ளை** பி. ஏ., பி. எல்.
தருமபுரம்.

தொடக்கவுரை :

**திரு. என் ஆர். பட்**
இயக்குநர், பிரஞ்சு இந்தியப் பண்பாட்டு ஆய்வு நிறுவனம்
பாண்டிச்சேரி.

பொருள் :

" சமய இலக்கியங்கள் "

விரிவுரைகள் :

சித்தாந்தப்புலவர்மணி
**திரு. என். ஆர். முருகவேள்** எம். ஏ., எம். ஓ. எல்.
ஆசிரியர், திருக்கோயில், சென்னை.

— சைவ இலக்கியங்களில் வைணவம்

**டாக்டர் திரு. தெ. ஞானசுந்தரம்** எம். ஏ., பி. எச்டி.
தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

— வைணவ இலக்கியங்களில் சைவம்

**புலவர் திரு. எஸ். கே. இராமராசன்**
பரமத்தி, வேலூர்.

— சைவ வைணவ இலக்கியங்களில் ஒருமைப்பாடு

இரவு 9–00 மணி

### மழலையர் கலைநிகழ்ச்சி

**செல்வி. நித்யகல்யாணி**
**செல்வன். காமகோடி**
} குழுவினர்

ஐந்தாம் திருநாள் [முற்பகல்]

27—5—83 வெள்ளிக்கிழமை] [காலை 10-00 மணி

## திருநாவுக்கரசர் திருநாள்

# சமய, தத்துவ சிந்தனை அரங்கம்

வரவேற்புரை :

**வித்துவான் திரு. இரா. செல்வக்கணபதி** எம். ஏ.,
துணைப்பேராசிரியர், த. ஆ. ப. கல்லூரி, தருமபுரம்.

தலைமை :

திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி குருமகாசந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள்**
(தவத்திரு. குன்றக்குடி அடிகளார்)

சிந்தனைப்பொருள் :

"சென்று நாம் சிறுதெய்வம் சேர்வோம் அல்லோம்
சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்" என்ற
அப்பர் திருவாக்கு

முதன்மைச் சிந்தனையாளர் :

**தவத்திரு. ஊரன் அடிகள்**
தலைவர், வள்ளலார் அறநிலையங்கள், வடலூர்.

இணைச்சிந்தனையாளர்கள் :

**டாக்டர். திரு. சொ. சிங்காரவேலன்** எம். ஏ., பி. எச்டி.,
அ. வ. அ. கல்லூரி, மன்னன்பந்தல்.

சித்தாந்தக்கலாநிதி
**டாக்டர். திரு. ப. அருணாசலம்** எம். ஏ., பி. எச்டி.,
நாகர்கோயில்.

**திரு. டி. என். அருணாசலம் பிள்ளை** பி. ஏ., பி. எல்.,
தருமபுரம்.

சித்தாந்தக்கலைச் செல்வர்
**திரு. க. வச்சிரவேல் முதலியார்** பி. ஏ., எல். டி.,
காஞ்சிபுரம்.

சித்தாந்தக்கலைமணி
**மகாவித்துவான் திரு. சி. அருணைவடிவேல் முதலியார்**
அண்ணாமலைநகர்.

பார்வையாளர் :

சென்னை, உயர்நீதிமன்ற நீதிபதி
**மாண்புமிகு. R. செங்கோட்டுவேலன்**

---

**ஐந்தாம் திருநாள் [பிற்பகல்]**

27—5—83 *வெள்ளிக்கிழமை]* *[மாலை 6–00* மணி

**கருத்தரங்கம்**

வரவேற்புரை :

செந்தமிழ்ப் புரவலர்
**திரு. இரா. இராஜசேகரன்** பி. எஸ்சி., பி. எல்.,
தாசில்பண்ணை, மேலையூர், பூம்புகார்.

தொடக்கவுரை :

**திரு. எஸ். வி. சிட்டிபாபு**
துணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக் கழகம்.
அண்ணாமலைநகர்.

தலைமை :

திருவண்ணாமலை ஆதீனம், குன்றக்குடி மகாசந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ தெய்வ சிகாமணி அருணாசல தேசிக பரமாசாரிய சுவாமிகள்**
( தவத்திரு. குன்றக்குடி அடிகளார் )

பொருள் :

" சைவ சித்தாந்தம் "

விரிவுரைகள் :

சித்தாந்தக்கலாநிதி
**டாக்டர். திரு. ப. அருணாசலம்** எம். ஏ., பி. எச்டி.,
நாகர்கோயில்
— சைவசித்தாந்தம் – மெய்கண்டாருக்குமுன்

**தவத்திரு. ஊரன் அடிகள்**
தலைவர், வள்ளலார் அறநிலையங்கள், வடலூர்.
— சைவசித்தாந்தம் – மெய்கண்டாருக்குப்பின்

இரவு 9–00 மணி
**பரதநாட்டியம்**
**செல்வி. ஆர். திருமகள் குழுவினர்**
பூம்புகார்.

—❦—

**ஆறும் திருநாள்**

28—5—83 சனிக்கிழமை] [காலை 10–35 மணி

**திருஞானசம்பந்தர் திருநாள்**

## சமய, தத்துவ சிந்தனை அரங்கம்

வரவேற்புரை :

**வித்துவான். திருமதி. ப. நீலா.** எம், ஏ.,
துணைப்பேராசிரியை, த. ஆ. ப. கல்லூரி, தருமபுரம்.

சிறப்புரை :

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம், கயிலை மாமுனிவர்
**ஸ்ரீமத். காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்**

சிந்தனைப் பொருள் :

“தடங்கொண் டதொர்தா மரைப்பொன் முடிதன்மேல்
**குடங்கொண் டடியார் குளிர்நீர் சுமந்தாட்டப்**
படங்கொண் டதொர்பாம் பரையார்த்த **பரமன்**
**இடங்கொண் டிருந்தான்** றனிடை மருதீதோ.”

முதன்மைச் சிந்தனையாளர் :

தருமையாதீனப் புலவர்
**மகாவித்துவான். திரு. ச. தண்டபாணி தேசிகர்**
திருக்குறள் இருக்கை, மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

இணைச்சிந்தனையாளர்கள் :

தருமையாதீனப்புலவர்

**மகாவித்துவான். திரு. சி. அருணைவடிவேல் முதலியார்**

திருக்குறள் இருக்கை; அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

சித்தாந்தக்கலைச்செல்வர்

**திரு. க. வச்சிரவேல் முதலியார்** பி. ஏ. எல். டி.,

காஞ்சிபுரம்.

**சிவஸ்ரீ. சுவாமிநாத சிவாசாரியார்**

திருவாவடுதுறை.

பார்வையாளர் மதிப்புரை :

சென்னை, உயர்நீதிமன்ற நீதிபதி

**மாண்புமிகு. R. செங்கோட்டுவேலன்**

—❀—

## ஆறும் திருநாள்

28—5—83 *சனிக்கிழமை]* *[மாலை* 6–30 மணி

## கருத்தரங்கம்

வரவேற்புரை :

**திரு. V. ஆறுமுகம் பிள்ளை** I. A. S. (ஓய்வு.)

தலைவர், ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றம், மயிலாடுதுறை.

சிறப்புரை :

சித்தாந்தக் கலைச்செல்வர்

**திரு. க. வச்சிரவேல் முதலியார்** பி. ஏ., எல். டி.,

காஞ்சிபுரம்.

பொருள் : " திருத்தொண்டர் புராணம் "

விரிவுரைகள் :

திருமுறை ஆராய்ச்சிக் கலைஞர்

**வித்துவான். திரு. க. வெள்ளைவாரணனார்**

தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

— பெரிய புராணத்தில் சைவ சித்தாந்தம்

தருமை ஆதீனப்புலவர்

**பண்டித வித்துவான். திரு. கு. சுந்தரமூர்த்தி** எம். ஏ.,

முதல்வர், செந்தமிழ்க்கல்லூரி, திருப்பனந்தாள்.

— பெரிய புராணத்தில் சமூகநலன்

இரவு 9 மணி

**பரத நாட்டியம்**

சென்னை, திருமதி. சுதாராணி ரகுபதி சிஷ்யை

**குமாரி. ஹிமஜா பாலசுப்பிரமணியன் – குழுவினர்**

சென்னை.

**ஏழாம் திருநாள்**

29—5—83 ஞாயிற்றுக்கிழமை] [மாலை 6–30 மணி

**சுந்தரர் திருநாள்**

**வரவேற்புரை :**

தருமையாதீனத் தமிழ்ப்புலவர், திருநெறிச் செம்மல்

**வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர்** எம். ஏ.,

முதல்வர், த. ஆ. பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

**தொடக்கவுரை :**

**திரு. R. சௌந்தரராசன்** B. com.,

சட்டமன்ற உறுப்பினர், முன்னாள் நல்வாழ்வுத்துறைஅமைச்சர்,

திருவரங்கம்.

**சிறப்புரை :**

அறநெறி அண்ணல்

**திரு. கி. பழநியப்ப பிள்ளை**

மதுரை.

**தொடர் விரிவுரை :**

சொல்லின் செல்வர்

**திரு. சுகி. சிவம்** பி. ஏ., பி. எல்.,

சென்னை.

— அடியார்க்கும் அடியேன்

இரவு 9 மணி

## திருக்கல்யாணத் திருநாள்

( திருநெறிய தெய்வத் தமிழ் மன்றத்தில் )

## இன்னிசை விரிவுரை

## குமாரி. கே. மைதிலி குழுவினர்

தஞ்சாவூர்.

— *மீனாட்சியம்மை திருமணம்*

( ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயிலில் )

விரிவுரை :

சித்தாந்தக் கலைச்செல்வர்

**திரு. க. வச்சிரவேல் முதலியார்** பி. ஏ., எல். டி.

காஞ்சிபுரம்.

— *திருக்கல்யாண தத்துவம்*

— ❖ —

## எட்டாம் திருநாள்

30—5—83 *திங்கட்கிழமை]* *[மாலை* 6–30 மணி

## சேக்கிழார் திருநாள்

வரவேற்புரை :

**டாக்டர். மு. சுவாமிநாதன்** எம். பீ., பி. எஸ்.,

மயிலாடுதுறை.

தொடக்கவுரை :

**திரு. T. V. R. சாரி**

நிகழ்ச்சி அமைப்பாளர், அகில இந்திய வானொலி நிலையம்,

திருச்சிராப்பள்ளி.

தொடர் விரிவுரை :

சொல்லின் செல்வர்

**திரு. சுகி. சிவம்** பி. ஏ., பி. எல்.,

சென்னை.

— *பிள்ளைக்கறியமுது*

இரவு 9 மணி

## திருமுறை இசையரங்கம்

சீகாழி திரு. எஸ். திருஞானசம்பந்தன்
திருச்சி திரு. எஸ். முத்துக்கந்தசாமி } குழுவினர்

—※—

## ஒன்பதாம் திருநாள்

31—5—83 செவ்வாய்க்கிழமை] [மாலை 6–30மணி

## காரைக்காலம்மையார் திருநாள்

வரவேற்புரை :

**வித்துவான். திரு. கா, ம. கண்ணப்பன்** எம். ஏ.,
தமிழாசிரியர், ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி
தருமபுரம்.

தொடக்கவுரை :

**திரு. வி. என். சிதம்பரம்**
அறங்காவலர் குழுத் தலைவர்,
ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசுவரர் திருக்கோயில். மதுரை.

தொடர் விரிவுரை :

சொல்லின் செல்வர்
**திரு. சுகி. சிவம்** பி. ஏ., பி. எல்.
சென்னை.

— இப்படியும் ஒரு தாயார்

இரவு 9 மணி

## இன்னிசை விரிவுரை

**திருமதி. ஆர். கௌரி குழுவினர்**
சென்னை,

— அப்பூதி அடிகள்

## பத்தாம் திருநாள்

1—6—83 புதன் கிழமை ] [காலை 8–30 மணி

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருநாள் ( குருபூஜைவிழா )

வரவேற்புரை :

**வித்துவான். திரு. மு. சிவச்சந்திரன்.** எம். ஏ., பி. எட்.,
துணைப் பேராசிரியர், த. ஆ. ப. கல்லூரி, தருமபுரம்.

சிறப்புரை :

திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடம், கயிலைமாமுனிவர்
**ஸ்ரீமத், காசிவாசி முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள்**

விரிவுரைகள் :

தருமை ஆதீனப் புலவர், திருவாசக உரைமணி
**வித்துவான். திரு. வி. சா. குருசாமி தேசிகர்.** எம். ஏ.,
முதல்வர், த. ஆ. ப. கல்லூரி, தருமபுரம்.
— மகன்மைநெறி

செந்தமிழ்ச் சிவநெறிச் செம்மல்
**திரு. அ. சங்கர நாராயணன்** எம். ஏ., பி. டி.,
மதுரை.
— தொண்டுநெறி

**வித்துவான். திரு. பழ. முத்தப்பன்** எம். ஏ.,
துணைப்பேராசிரியர், சி. பா. சு. தமிழ்க்கல்லூரி, மயிலம்.
— தோழமைநெறி

**புலவர். திரு. மு. வைத்தியநாதன்**
தமிழாசிரியர், திருச்சிராப்பள்ளி.
— அன்புநெறி

**வித்துவான். திரு. தா. குருசாமி தேசிகர்**
மதுரை.
— முத்திறவழிபாடு

காலை 10–00 மணி

**ஸ்ரீ சொக்கநாதப்பெருமான் சிறப்பு வழிபாடு**

குருபூஜை விழாமலர் :

**" சதமணிக்கோவையும், ஞான பஞ்சகமும் "**

பகல் 12-00 மணி

**ஸ்ரீ ஞானபுரீசுவரர் திருக்கோயில் வழிபாடு**

நண்பகல் 1-00 மணி

**மாகேசுவரபூஜை**

## குருபூஜைத் திருநாள்

1—6—83 புதன்கிழமை] [மாலை 4-00 மணி

வரவேற்புரை :

**வித்துவான் திரு. சொ. முத்தையன்** எம். ஏ.,
துணைப்பேராசிரியர், த. ஆ. ப. கல்லூரி, தருமபுரம்.

தொடக்கவுரை :

பல்கலை வித்தகர்
**திரு. மீ. ப. சோமசுந்தரம்**
தமிழ்ப்பழங்கலை இயக்குநர், சென்னை.

சிறப்புரை :

**திரு. M. V. ஜெயராமஐயர்**
வேங்கடேஸ்வரா கல்விநிலைய நிறுவனர், பெங்களூர்.

விரிவுரைகள் :

**குடவாயில். திரு. எம். பாலசுப்பிரமணியன்**
காப்பாளர், நுண்பாடப்பிரிவு, சரஸ்வதிமஹால். தஞ்சாவூர்.
— சோழர் கோயிற் பணிகள்

**வித்துவான் திரு. வே. மகாதேவன்** எம். ஏ.,
ஆடுதுறை.
— பல்லவர் கோயிற் பணிகள்

**திரு. எம். பாலசுப்பிரமணியன்**
அமைப்பாளர், ஸ்ரீ குருஞானசம்பந்தர் இறைபணி மன்றம்.
கோயம்புத்தூர்.
— பாண்டியர் கோயிற் பணிகள்

மாலை 7-00 மணி

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்
**ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிகஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள்**
குருமூர்த்த வழிபாட்டிற்கு எழுந்தருளல்.

இரவு 9-00 மணி

**தனி வயலின் இசை**

| | | |
|---|---|---|
| சிதம்பரம், செல்வன். D. சுவாமிநாதன் | } | குழுவினர் |
| ,, செல்வன். D. பாலசுப்பிரமணியன் | } | |

—※—

2—6—83 வியாழக்கிழமை] [காலை 9-00 மணி

**பட்டினப்பிரவேசத் திருநாள்**

வரவேற்புரை :

**திரு. சா. கிருஷ்ணமூர்த்தி.** எம். ஏ.,
துணைப்பேராசிரியர், த. ஆ. ப. கல்லூரி, தருமபுரம்.

சிறப்புரை :

சென்னை உயர்நீதிமன்ற நீதிபதி
**மாண்புமிகு. டி. என். சிங்காரவேலு**

விரிவுரைகள் :

**வித்துவான் திரு. இரா செல்வக்கணபதி.** எம். ஏ., பி. எட்.
துணைப் பேராசிரியர், த. ஆ. ப. கல்லூரி, தருமபுரம்.
— மெய்கண்டார்

**வித்துவான். திரு. மு. சிவச்சந்திரன்.** எம். ஏ., பி. எட்.,
துணைப் பேராசிரியர், த. ஆ. ப. கல்லூரி, தருமபுரம்.
— அருள்நந்திசிவம்

**வித்துவான். திரு. சொ. முத்தையன்** எம். ஏ.,
துணைப் பேராசிரியர், த. ஆ. ப. கல்லூரி, தருமபுரம்.
— மறைஞானசம்பந்தர்

**வித்துவான். திரு. சு. மு. சுந்தரராசன்** எம். ஏ.,
தமிழாசிரியர், சோமசுந்தரம் மேல்நிலைப்பள்ளி, திருவாரூர்.
— உமாபதிசிவம்

**டாக்டர் திரு. K. இராமலிங்கம்** M. D., F. C. C. P., F. I. C. A.
சென்னை.
— குருவழிபாடு

காலை 11-00 மணி

**ஸ்ரீ சொக்கநாதர் வழிபாடு**

நண்பகல் 1-00 மணி

**மாகேசுவரபூஜை**

**பட்டினப்பிரவேசத்திருநாள்**

2—6—83 வியாழக்கிழமை] [மாலை 6-30 மணி

**சமயப் பயிற்சி வகுப்பு நிறைவு விழா**

வரவேற்புரை :

**வித்துவான் திரு. கே. கணபதி**

தமிழாசிரியர், ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்நிலைப்பள்ளி, தருமபுரம்.

சிறப்புரையும் சான்றிதழ் வழங்கலும்

அறப்பணிச் செல்வர்

**டாக்டர். திரு. கே. அரங்கசாமிப் பிள்ளை** எம். பி., பி. எஸ்., சிதம்பரம்.

விரிவுரைகள் :

**டாக்டர். திரு. தெ. ஞானசுந்தரம்** எம். ஏ., பி. எச்டி., தமிழ்ப்பல்கலைக் கழகம், தஞ்சாவூர்.

— திருவருள்

**வித்துவான் திருமதி. ப. நீலா.** எம். ஏ., துணைப்பேராசிரியை, த. ஆ. ப. கல்லூரி, தருமபுரம்.

— குருவருள்

மாலை 7-00 மணி

**இன்னிசை**

தருமை ஆதீன இசைப் புலவர்

**சீகாழி. திரு. எஸ். கோவிந்தராசன் குழுவினர்**

இரவு 9-00 மணி

தருமையாதீனம் 26 ஆவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சண்முகதேசிகஞானசம்பந்தபரமாசாரியசுவாமிகள்**

**பட்டினப்பிரவேசம்**

உ
குருபாதம்

# ஞானசம்பந்தம்

மலர் 42 | ருத்ரோத்காரி – சித்திரை – 10—5—83 | இதழ் 6

திருச்சிற்றம்பலம்

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினய்! கூடலால வாயிலாய்!
நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— ஞானசம்பந்தர்,

திருச்சிற்றம்பலம்

## தருமை வருக! குருவருள் பெறுக!

சைவத்திருமுறைகள் பன்னிரண்டில் இறுதியில் வைத்துச் சிறப்பிக்கப் பெறுவது திருத்தொண்டர் புராணம் எனப்பெயரிய பெரியபுராணம். இறையருள் பெற்ற அறுபான்மும்மை நாயன்மார்களின் வரலாற்றுப் பெட்டகமாகத் திகழ்வது இந்நூல். இதன்கண் இடம்பெறும் அடியார்கள் 'ஓடும் செம்பொனும் ஒக்கவே நோக்கும்' மனப்பண்பினர். கூடும் அன்பினில் கும்பிடலேயன்றி, வீடும்வேண்டாத வீறுமிக்கவர்கள். இவர்கள் இறையருள் பெற்றவரலாறு பலவாயினும், அவற்றை மூன்ருகப் பகுத்துக் கூறுதல் மரபு. குருவை வழிபட்டும், இலிங்கத் திருமேனியைப் பூசித்தும், சங்கமர்க்குத் (அடியார்கள்) தொண்டாற்றியும் சிறந்த நிலை அவை.

திருஞானசம்பந்தரையே ஞானகுருவாகக் கொண்டு சிறந்த மங்கையர்க்கரசியார், அப்பரடிகளையே எல்லாமாய்க் கருதி

வென்ற அப்பூதி அடிகளார், சுந்தரர் திருவடி போற்றிச் சிறந்த பெருமிழலைக்குறும்பர் போன்ற அருளாளர்களின் வரலாறு குரு வழியே இறையருளைப் பெற்றுய்யும் வழிகாட்டிகளாக அமையக் காண்கின்றோம். இத்தகு குரு உபதேசநெறியில் மெய்கண்ட தேவர் வழி வழியே உபதேச பரம்பரையில் சிறந்து விளங்கும் அருள் ஞானப்பண்ணையாகத் திகழ்வது திருக்கயிலாய பரம் பரைத் தருமபுர ஆதீனம். 450 ஆண்டுகளுக்கு முன்னர் இவ் வாதீனத்தைக் குருவருளாணைவழித் தோற்றுவித்த அருளாளர் ஸ்ரீ குருஞானசம்பந்தர். இவர்கள் கோயில் கொண்டு அருள் வழங்கும் அருள்மிகு, ஞானம்பிகை உடனுய ஞானபுரீசுவரர் திருக்கோயில் பெருவிழாவும், இவர்களின் குருபூஜைப் பெரு விழாவும் தருமையாதீனத்தில் வரும் 23—5—83 முதல் 2—6—83 வரை வழக்கம்போல் மிகச் சிறப்பாக நடைபெறவிருப்பது சைவப்பேரன்பர்களுக்குப் பெரும் பேருகவே அமையும்.

இறைவனுக்குச் செய்யும் வழிபாடு, குருவுக்குச் செய்யும் பூஜை முதலியனவற்றல் உண்மையில் நாமே மகிழ்கிறோம் – சிறக்கிறோம் – உய்கிறோம். 'வாழ்த்துவதும் வானவர்கள் தாம் வாழ்வான்' என்பர் மணிவாசகர். 'பொன்னல் அணிபவர்க்கு அழகு. அணிபவரால் பொன்னுக்கு என்ன அழகு' என இதனை விளக்குவர் பட்டினத்துப்பிள்ளையார், நம்மை ஈன்று வளர்த்து ஆளாக்கிவிட்ட பெற்றோர்களுக்குச் செய்யும் நன்றிக்கடன் போல், நம் உயிரை வளர்த்துப் பக்குவப்படுத்தி. உய்யும் நெறி காட்டிய உத்தமப் பெரியோர்களுக்கு நாம் நன்றியுணர்வோடு விழாக் காண்பது நமக்குச் சிறப்பளிக்குமேயன்றி, இவற்றல் அவர்களுக்கு ஏதும் இலாபங்கள் இல்லை. இத்தகுஉணர்வோடு அருளாளர்களின் திருநாட்களைக் குருபூஜை விழாவாகக் கொண்டாடும் மரபு நமது தமிழ்நாட்டில் பன்னூறு ஆண்டு களாக நிலவி வருதலைப் பலரும் அறிவர்.

அறிஞர்கள் பலர் பங்கேற்க நிகழும் குருபூஜை விழாவின் சிறப்பு அங்கமாகத் திருநெறியத்தெய்வ தமிழ் மாநாடும், சமயப்பயிற்சி வகுப்பும் இவ்வாண்டும் சிறப்பாக அமைகிறது. மாநாட்டின் இடையே மூன்றுநாட்கள் 'சமயத்தத்துவ மாநாடு' ஒன்றற்குஏற்பாடாகியிருக்கிறது. மே 26, 27, 28 ஆகிய நாட்களில் காலை மாலை நிகழவிருக்கும் இம்மாநாட்டில் நமது சைவ வழி பாட்டுநெறி முறைகள், இந்து மதஞ்சார்ந்த பல்வேறு சமயங் களில் காணலாகும் 'வீடுபேறு' பற்றிய ஆய்வுகள், சிறுதெய்வ வழிபாடுகள் சைவத்திற்கு உடன்பாடானதா? என்பன பற்றிய

அறிஞர்களின் வாதங்கள் திருக்கோயிலுள்ளிருக்கும் திருமேனியை எல்லோரும் பூசிக்கலாமா? என்பதுபற்றிய ஆய்வுகள் யாவும் இடம் பெறுகின்றன. தமிழகத்தின் பல்வேறு சமயத் துறைசார்ந்த அருளாளர்களும், சான்றோர்களும் இம்மாநாட்டில் பங்கேற்பது பெருஞ்சிறப்பாகும். இன்று நாட்டில் நிலவும் வறட்சிநிலை, மக்களிடையே காணப்படும் பதட்டம் கலந்த பரபரப்பு, செய்ந்நன்றி போற்ருத வஞ்சம், மற்றவர்களுக்குத் திட்டமிட்டுத் தீங்குசெய்யும் கொடுமை இவற்றிலிருந்து விடுபடவும், நாட்டில் பசியும் பிணியும் நீங்கி வசியும் வளமும் சுரக்கவும் நம்மிடையே சிவபக்தி, குருபக்தி, அடியார்பக்தி போன்றன குறையாது போற்றப்படவேண்டும் என்பதைப் பலரும் உடன்படுவர். எனவே ‘பரபரக்கவேண்டா’ என்று அறிவுரைகூறி நம்வாழ்விற்கு அருள்வழிகாட்டிய தருமையாதீனக் குருமுதல்வரின் திருவடிகளைப் போற்றிச் செய்யும் குருபூஜைப் பெருவிழாவில் இயன்றவாறு பங்கேற்று, சமயத்திற்கும், நாட்டிற்கும், மக்களுக்கும் உரிய தொண்டாற்றுவது சைவர் அனைவருக்கும் உரிய கடமையாகும்.

குருபூஜைப் பெருவிழா ஜூன் முதல்நாள் அமைகிறது. அடுத்தநாள் சிவபூசை மாநாடும், மாகேஸ்வரபூசையும் நிகழ்கிறது. அன்று இரவு தருமையாதீனம் இருபத்தாருவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பட்டினப்பிரவேசமாக எழுந்தருளி அடியார்களுக்கு அருட்காட்சி வழங்கி ஆசீர்வதிப்பார்கள். 23—5—83 தொடங்கி காலை மாலை இருவேளைகளிலும் பல்வேறு அறிஞர்பெருமக்கள் பயிற்றுவிக்கச் சமயப்பயிற்சி வகுப்பு நடைபெறும். வகுப்பில் பங்கேற்கும் தக்க அன்பர்களுக்கு உணவும் உறையுளும் வழங்கப்படும். நாள் தோறும் மாலையில் திருநெறியதெய்வத் தமிழ்மாநாடும், இரவுசிறப்புக்கலைநிகழ்ச்சிகளும் அமைகின்றன. இத்தகு அரியவாய்ப்பை அன்பர்கள்உரியவாறு பயன் படுத்திக் கொண்டுநலம் பலபெற்றுச்சிறக்க ‘ஞானசம்பந்தம்’ அன்புடன் அழைக்கிறது.

குருவருள் பெற்றுக் குவலயம் வாழ்க !

உ
குருபாதம்

திருக்கயிலாய பரம்பரைத் தருமையாதீனம்
26 ஆவது குருமகாசந்நிதானம்
ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்
பட்டவிளாகம்
தூய நற்பயண அன்னை ஆலயத் திருவிழாவில்
வழங்கியருளிய

# ஆசியுரை

27—4—1983

தனம்தரும் கல்விதரும் ஒருநாளும் தளர்வறியா
மனம்தரும் தெய்வவடிவும் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனம்தரும் நல்லனஎல்லம் தரும் அன்பர் என்பவர்க்கே
கனம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே.

## சமயங்கள் பலவும் ஏன் ?

ஏசுநாதர் பிறந்த மாதம் டிசம்பர் இருபத்தைந்து. அதனைச் சிறப்பாகக் கொண்டாடுகிற நீங்கள், அவ்ஏசுநாதரை ஈன்றெடுத்த அன்னை மரியாளுக்கு உகந்த மாதங்களாகிய ஏப்ரல், மே ஆகிய இரு திங்களிலும் விழா எடுத்துச் சிறப்பிப்பது பாராட்டுதற்குரியது.

மக்களைத் தக்க நெறியில் செலுத்தி உய்விப்பதற்கே சமயங்கள் தோன்றின. மயிலாடுதுறை செல்வதற்குப் பல வழிகள் இருத்தல் போல இறைவனை அடைவதற்குச் சமயங்களும் பலவாக உள்ளன. அவரவர் விரும்பும் வழியில் சென்று மயிலாடுதுறையை அடைவது போல அவரவர் விரும்பும் சமய நெறியில் சென்று பரம்பொருளை அடைவதில் குறைவில்லை. இங்ஙனம் இந்நாட்டில் தோன்றிய சைவம், வைணவம், பௌத்தம், சமணம் போன்ற சமயங்களும் பிற நாட்டில் தோன்றிய கிறித்துவம், இசுலாம் போன்ற சமயங்களும்முழு முதற்பொருளாகிய பரம்பொருளை அடைவதற்குரிய நெறிகளையே படிமுறையால்

விளக்குகின்றன. மக்கள் அனைவரும் தம் விருப்பத்திற்கும் தகுதிக்கும் ஏற்ப ஒரு நெறியினைப் பின்பற்றி உய்திபெறுதல் தக்கதாகும்.

## எதனையும் கேட்கும் இறைவன் :

எல்லாச் சமயங்களும் இறைவன் எங்கும் உள்ளான் என்பதனைக் கூறுகின்றன. இக்கருத்திற்குப் பல எடுத்துக் காட்டுக்கள் கூறலாம். எனினும் இன்று கிறித்துவ சமயத்தைச் சார்ந்த ஓர் விஞ்ஞானியின் வரலாற்று நிகழ்ச்சியினை இங்குச் சிந்திப்பது பொருத்தமாக இருக்கும்.

மார்க்கோனி என்ற அறிவியல் புலவன் சிறுவனாய் இருந்த பொழுது தன் தந்தையோடு மாதா கோயிலுக்குச் செல்வது வழக்கம். அக்கோயிலில் தந்தையார் வழிபடும் பொழுது, 'பரமண்டலத்திலிருக்கும் பிதாவே!' என்று கூறுவதைக் கேட்ட சிறுவன் இக்குரல் பரமண்டலத்திலிருக்கும் பிதாவின் திருச்செவியில் விழுமா? என்று ஐயுற்றான். அம்மார்க்கோணி வளர்ந்தநிலையில் கம்பியில்லாமல் ஒலியைக் கேட்கும் வானொலி யினைக் கண்டுபிடித்தார். அவ்வமயம் பலரும் வந்து அவரைப் பேட்டி கண்டனர். அப்பொழுது அவர்கள், இக்கருவியைக் கண்டு பிடித்ததனால் நீங்கள் உலகிற்கு அளிக்கும் செய்தி என்ன? என்று கேட்டார்கள். அதற்கு அவர் தொலை தூரத்தி லிருந்து எழுப்பப்பெறும் ஒலி எங்கோ இருக்கும் வானொலிப் பெட்டியில் கேட்க முடியும் எனும் இதனால் என்சிறு வயதில் ஏற்பட்ட ஐயம் ஒன்று நீங்கியது என்றார். என் தந்தையார் பரமண்டலத்திலிருக்கும் பிதாவே! என்று அழைக்கும் ஒலி உறுதியாகப் பிதாவின் திருச்செவியில் விழும் என்பதை இக் கருவியைக் கண்டு பிடித்ததன் மூலமாக அறிந்துகொண்டேன் என்றார். இங்ஙனம் நாம் பேசும் ஒலி இறைவனின் காதில் விழும் என்றஉணர்வு எல்லோருக்கும் இருக்குமானால்தவறுகள் நிகழா. ஆசிரியர் பாடசாலையில் இருக்கின்றார், நாம் பேசும் பேச்சு அவர் காதில் விழுந்துவிடும் எனும் அச்ச உணர்வே மாணவர்களை நல்லவர்களாக உருவாக்குதல்போல மக்கள் நல்லவர்களாக வாழ இக்கடவுளுணர்வு உதவும்.

இன்று பலர் தாம்பேசும் பேச்சுக்கள் யார் காதிலும் விழாது என்ற மனநிலையில் நினைத்ததை எல்லாம் பேசுகிறார்கள். இவர்கள் இந்நிகழ்ச்சியினை அறிந்து, உணர்ந்து தம்மை நல்வழி யில் மாற்றிக்கொள்ள முற்படுவார்களாக!

## எதனையும் பார்க்கும் இறைவன் :

இறைவன் நாம்செய்யும் எல்லாச் செயல்களையும் பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்பதனையும் எல்லாச் சமயங்களும் விளக்குகின்றன. பையன் எங்கிருந்தாலும் பெற்றோர் அவனைக் கண்காணிப்பது போன்று இறைவனும் நம் செயல்களைக்கண்டு கொண்டே இருக்கின்றார். இக்கருத்திற்கு இஸ்லாமிய சமயத்தி லிருந்து ஒரு நிகழ்ச்சியினைச் சான்றாகக் காணலாம்.

ஓர் அரசன் தன் அரண்மனையின் மேல்மாடத்தில் இருந்த பொழுது ஒரு அழகிய இளமங்கை அவ்விடத்தைத் துப்புரவு செய்துகொண்டிருந்தாள். அவ்வரசன் அவளுடைய அழகில் மயங்கி அவளை அடைய எண்ணினான். அவளை அழைத்து எல்லாக் கதவுகளையும் மூடும்படிக் கூறினான். அவள் அரசனின் உள்ளக் கருத்தை உணர்ந்து கொண்டாள். அவளுக்கு மனம் இல்லையாயினும் அரசன் கூறுவதைத் தட்டமுடியாத நிலையில் வேறு வழியின்றி எல்லாக் கதவுகளையும் மூடிவிட்டு வந்தாள். அரசன் அவளைப் பார்த்து, "எல்லாக் கதவுகளையும் மூடி விட்டாயா?" என்று கேட்டான். அவள், "எல்லாக் கதவுகளை யும் மூடிவிட்டேன்; இரண்டு கதவுகளைமட்டும் என்னால் மூட இயலவில்லை" என்றாள். வியப்புற்ற அரசன் "ஏன்?" என்றான். "அரசே! அக்கதவுகள் இறைவனின் கண்கள்" என்றாள். உடனே அரசன் நல்லுணர்வு பெற்று அவளையே குருவாகக் கொண்டான்.

எனவே இறைவன் நாம் செய்யும் அனைத்துச் செயல் களையும் தவறாது பார்த்துக் கொண்டிருக்கின்றான் என்பதை உணர்தல் அவசியமாகும். யார் கேட்டால் என்ன? என்றோ, யார் கண்டால் என்ன? என்றோ மக்கள் இறுமாப்பாக நடந்து கொள்வது என்றும் துன்பங்களையே விளைவிக்கும் என்பதை உணர்ந்து அனைவரும் நல்லவர்களாக வாழ முற்படுவார் களாக!

## முருகன் பார்க்கிறார், கேட்கிறார், செய்கிறார்.

இறைவன் எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருக்கின்றார் என்பதும், எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருக்கின்றார் என்பதும் சைவசமயநெறியிலும் விளக்கப்படுவதோடுஎல்லாச் செயல்களும் செயற்படவும், தடைப்படவும் செய்கிறார் என் பதும் விளக்கப்படுகின்றன. முருகப்பெருமான் திருவுருவ

நிலையில் ஆறு முகங்கள் கொண்டிருக்கின்றார். நான்கு திசைகளையும் கீழ் மேல் திசைகளையும் அவர் பார்த்துக்கொண்டிருக்கின்றார் என்பதை ஆறுமுகங்களும் உணர்த்துகின்றன. அப்பெருமானின் திருச்செவிகள் பன்னிரண்டும் நாம் பேசும் பேச்சுக்களைக் கேட்டுக்கொண்டேயிருக்கின்றன. மேலும் அப்பெருமானின் திருக்கைகள் பன்னிரண்டும் அன்பர்களின் செயல்களுக்கேற்ப வாழ்வும் தாழ்வும் வழங்குகின்றன. என்பது கொண்டு இக்கருத்தை நன்கு தெளியலாம்.

### தவிர்த்து வாழுங்கள் :

இயேசுநாதர் நெறியினைப் பின்பற்றும் அன்பர்களே! நீங்கள் நல்ல முறையில் வாழவேண்டுமானால் களவு, பொய், அதிகாமம், கள்ளுண்டல் ஆகிய தீய பழக்கங்களைத் தவிர்த்து வாழுங்கள். குடிப்பழக்கம் குடியைக் கெடுக்கும். அக்குடிப் பழக்கம் ஏதோ தீவினையின் காரணமாக மீண்டும் வந்துள்ளது. ஆனால்மனிதன், தானே கட்டுப்படுத்தித் திருந்த வேண்டுமேயல்லாது அரசு சட்டம் மூலமாக மக்களைத் திருத்துதல் என்பது இயலாது. எனவே நீங்கள், வாரத்தில் சில புனிதமான நாட்களிலாவது, இது போன்ற விழாக்கள் எடுக்கும் காலங்களிலாவது இப்பழக்கங்களைத் தவிர்த்து வாழுங்கள்.

### குடிமக்கள் செழிக்க :

இங்கு முன்னே அமர்ந்துள்ள நம் குடிமக்கள் பற்றியும் சில செய்திகளைக் கூறுதல் அவசியம். நாம் ஆதீனத்தின் அருளாட்சியினை ஏற்கும் காலத்தில் குடிமக்களைப் பார்த்து இது வரையுள்ள குத்தகைப் பாக்கிகளைத் தராவிடினும் இனிமேல் வரும் குத்தகையினையாவது தவறாது அளந்து ஒத்துழைக்குமாறு கோரினோம். ஆனால் குடிமக்கள் இதனைச் சரியாக ஏற்கவில்லை. இங்கு இயேசுநாதர் கூறியது ஒன்று நினைவுக்கு வருகிறது. தான் விதைத்த விதைகளில் சில மேடுகளிலும், சில கருங்கல்லிலும், சில களர் நிலத்தும், சில நன்னிலத்தும் வீழ்ந்தன. மேடுகளில் வீழ்ந்தவை நீரின்றி முளைக்கவில்லை; கருங்கல்லில் வீழ்ந்தவை வெப்பத்தால் கருகின; களர் நிலத்தில் வீழ்ந்தவை உப்பின் கரியால் முளைக்காது போயின; நன்னிலத்து வீழ்ந்தவை சிலவே முளைத்துப் பயன் தந்தன. என்றுஇயேசுநாதர் கூறியதுபோல நாம் கூறிய அறவித்துக்கள் நன்னிலத்து வீழ்ந்துபயன்தர இத்துணைக் காலமாயிற்று. இன்று

இங்குக் கூடியுள்ள மக்கள் ஆர்வத்தோடும் பக்தியோடும் வரவேற்று ஆசியுரையினைக் கேட்கக் குழுமியுள்ளமை மகிழ்ச்சியைத் தருகிறது.

இங்கு ஆதீனத்துக்குச்சொந்தமாக இப்பட்டவிளாகத்தைச் சூழ்ந்து எழுநூற்றுஇருபது ஏக்கர் நிலம் உள்ளது. இப்பகுதியில் சுமார் ஈராயிரம் குடிமக்கள் இருக்கிறீர்கள். நீங்கள் அனைவரும் இந்நிலத்தினை நம்பியுள்ளீர்கள். பாசன வசதி குறைவாயினும் இந்நிலத்தில் கடுமையாக உழைத்தால் மிகுந்த பயனைப் பெறலாம். அரசு எப்படியிருப்பினும் மக்கள் யோக்கியர்களாக இருத்தல் அவசியம். அப்போது மழை பொழியும்; வளம் பெருகும்; வழிவழியாய் உங்கள் குடி செழித்து வளரும்.

## ஜப்பானைக் காணுங்கள்!

உழைப்பு என்று கூறினுல் ஜப்பானைத் தான் உதாரணம் கூறலாம். கீழை நாடுகளில் நூற்றுக்கு மேற்பட்ட சிறுசிறு தீவுகளால் ஆனது ஜப்பான்; வளமற்றது; அமெரிக்கரின் அணுகுண்டுகளால் பாலைவனமாகக்கப்பட்டது; அங்கு வாழும் மக்களின்பெரும் உழைப்பினுல் அது இன்று சோலைவனமாக்கப் பட்டுள்ளது. அங்கு வாழும் மக்கள் வேலைநிறுத்தம் செய்தால் உற்பத்திக்குப் பங்கம் வராதவாறு செய்கின்றனர். 8 மணிக்குத் தொழிற்சாலை ஆரம்பம் என்றுல் 7-45 க்குச் சென்று சரியாக 8 அடிக்கும் பொழுது தொழிலை ஆரம்பிக்கும் பழக்கத்தை மேற்கொண்டுள்ளார்கள். அதனுல் அவர்கள் அமெரிக்காவினையும் விஞ்சும் அளவிற்குப் பொருளாதார வளத்தைப் பெற்றுத் திகழ்கிறுர்கள். ஆனுல் சுதந்திரம்பெற்றுமுப்பத்தைந்து ஆண்டுகட்கு மேலாகியும் நம்மக்கள் உழைப்பின் உயர்வை அறியவில்லை. அரசும் இவ்வழியில் மக்களை நடத்திச் செல்லவில்லை. உழுதுண்போர்க்கும் உழுவித்துண்போர்க்கும், முதலாளிகட்கும் தொழிலாளிகட்கும், வியாபாரிகட்கும் நுகர்வோர்க்கும் உறவுநிலை பாதிக்குமாறு சட்டம் இயற்றி ஆட்சிசெய்தனரே அன்றி ஆக்கபூர்வமான செயல்களில் மக்களை ஈடுபடுத்தவில்லை.

பாலைவனமாக ஒப்படைக்கப்பட்ட ஜப்பான் நாட்டை, அந்நாட்டு மக்கள் தம் கடும் உழைப்பினுல் இன்று சோலைவனமாக்கியுள்ளனர். கத்தியின்றி இரத்தமின்றிச் சுதந்திரம் பெற்ற நிலையில்சோலைவனமாக ஒப்படைக்கப்பட்ட இந்தியாவை நாம் பாலைவனமாக்கிக்கொண்டிருக்கின்றேம். இது சரிதானு என்று சிந்தித்துப்பாருங்கள்.

**சமத்துவம், சுதந்திரம் :**

இன்று பலரும் சமத்துவம், சுதந்திரம் எனும் சொற்களை அடிக்கடிப் பேசி வருகின்றனர். சமத்துவம் உள்ள நாட்டில் சுதந்திரம் இல்லை. சுதந்திரம் உள்ள நாட்டில் சமத்துவம் இல்லை. சமத்துவம் பேசும் நாடு சுதந்திரத்தைப் பறிக்கிறது. எடுத்துக்காட்டாகச் சீனு ரஷ்யாவைப் பாருங்கள். சுதந்திரம் பேசும் நாட்டில் சமத்துவம் உண்டாவதில்லை. இந்தியாபோன்ற வற்றைக் காணுங்கள். சமத்துவம், சுதந்திரம் இவ்விரண்டுமே ஜப்பானில் உண்டு. காரணம் அங்கே உழைப்பும் உண்டு; உரிமையும் உண்டு. தாமரைமலரின் உயர்வு அப்பொய்கையின் வெள்ளமட்டத்திற்கு ஏற்ப உயர்வதுபோல மக்களின் உழைப் பிற்கு ஏற்ப நாடு உயரும். வள்ளுவரும், "வெள்ளத் தனைய மலர்நீட்டம் மாந்தர்தம் உள்ளத் தனைய துயர்வு" என்ருர். இதனை நன்கு உணர்ந்து நன்ருக உழைத்துத் தமக்கு உரிய பங்கை எடுத்துக்கொண்டு பிறருக்கு உரியபங்கைக் கொடுத்து வாழ அனைவரும் முற்படுவார்களாக !

**வாழ்த்து :**

ஆதீனத்துக்குச் சொந்தமான குடிமக்களில் கிறித்துவர், இசுலாமியர், இந்துமதத்தினர் ஆகியோர் இருக்கின்றனர். அவர்கள் யாவரையும் ஒரு படித்தாக ஆதீனம் கருதுகிறதே தவிர யாரையும் புறக்கணிப்பதில்லை. அவர்கள் அனைவரும் கடமையை மறந்து உரிமையைப் பெற முற்படாமல் தம் கடமையைச் செய்து உரிமையைப் பெற்று வாழ்வார்களாக!

குடிமக்கள் அனைவரும் வளம் பல பெற்று ஆதீனத்திற்கும் அறநிலையங்களுக்கும் தரவேண்டிய குறைந்த குத்தகையைத் தந்து நலமுடன் வாழ எல்லாம் வல்ல செந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச் சிந்திக்கின்ருேம்.

கடமையும் உரிமையும் ஒரு நாணயத்தின்
இருபக்கங்கள் ! மறவாதீர் !

# வசையில் இசை

'சித்தாந்தப் புலவர்மணி'

**திரு. ந. ரா. முருகவேள், M. A., M. O. L.**

**முன்னுரை :**

சமயவுலகில் அண்மைக்காலம் வரையில் அறிஞர்கள் தம்முள், ஒருவரையொருவர் இகலி எழுதும் மறுப்புரை நூல்கள் (Polemic Literature) பெரிதும் தோன்றி நிலவி வந்துள்ளன. இந்நாளில் அத்தகைய நூல்கள் போற்றப் படுவதில்லை. அதற்கு எத்துணையோ பல காரணங்களைக் கூறலாம். ஆயினும், மறுப்புரை நூல்கள் அறவே வெறுக்கத்தக்கன அல்ல. அவைகளிலும் போற்றத் தகுந்த பல சிறப்பியல்புகள் உண்டு. அவைகளில் ஒருசில அறிவுக்குப் பெருவிருந்தாய், ஆராய்ச்சித் திறனை வளர்த்துச் செழிப்பிக்கும் நலமுடையனவாகத் திகழ்கின்றன.

**நாயகரும், நாவலரும் :**

'சைவ சித்தாந்த சண்டமாருதம்' சிவத்திரு சோமசுந்தர நாயகர் (1846—1901) அவர்களைச் சைவவுலகம் நன்கறியும். "சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்" எனவரும் பெரியபுராணப்பாடலின் பொருள்குறித்து நாயகர் அவர்களுக்கும், யாழ்ப்பாணம் வடகோவைச் சபாபதிநாவலர் (1845 – 1903) அவர்களுக்கும், அக்காலத்தில் மிகப்பெரிய சொற்போர் நிகழ்ந்தது. நாவலர் அவர்கள் "ஞான சூடாமணி" என ஒரு நூல் எழுதினார்கள். அதனை மறுத்து நாயகர் அவர்கள், ஞான பேத விளக்கம், ஞானபேதத் தெளிவு, ஞானபேதத் துணிவு, ஞானபேத விளக்க நியாய ரக்ஷாமணி, ஞானசதுஷ்டய தர்ப்பணம் எனப் பல நூல்களை எழுதினார்கள்.

"சிவனடியே எனும் பனுவற் பொருள்சிதைய
இருஞானம் செப்பி, எங்கள்
தவமுதல்வர் சம்பந்தர் தமைச்சாமு சித்தர்
எனச் சாற்றி, நீடு
பவம்பெருக்கி, ஞானமொரு சிறிது முணரார்!
நிந்தை படிப்பார் தீமை
உவந்து! எரிவாய் நிரயம்உமி ழாதுஅவரை
எஞ்ஞான்றும் உண்மை தானே"

" எம்பெருமான் சம்பந்தன் இலகுசரா
சரப்பகுதிக் கெல்லாம் தானே
செம்பொருளா தலும்உணராரர்! சிவன்மகன்ஆ
தலும்உணராரர்! சிவனும் ஞானம்
உம்பர்வழுத்து ஒருநான்கு ஆதலும்உணராரர்!
உரைத்திடினும் கேளார்! நாளும்
தம்பெருமை யேபேசித் தருக்குறுவார்!
அவர்பாவம் சாற்றொ னாதே " 2

" இலக்கணம் அறியார்! இலக்கியத் தேர்ச்சி
எய்திலார் எட்டுணையேனும்!
எண்ணுவர் தாமே முற்றுணர்ந் தவராய்,
ஏழைநா வலர்கள் தாம்! என்னே?
அலக்கணுற் றிடர்ப்பட் டழிவதல் லால், மற்
றாவதுண்டோ? இனி, அந்தோ!
அரகர சிவஎன் செய்குவோம்? பாவத்து
அழுந்தியே எழும்புதல் இன்றிக்
கலக்கமுற் றழியும் கன்மமே வந்து
கலத்தலாற், சிவமணி யே! நின்
கால்மலர் வழுத்தும் பேறிழந் தனர்! அக்
கயவர்வாய் மதம்அடக் குதலே
விலக்கறும் விரத மாகவே கொண்டு
விளங்குகின் றேன்! எமை யுடையாய்!
வேதமும் விந்து நாதமும் கடந்து
மெய்யொளி பரப்பும் வேதியனே! " 3

என்றாற்போல, உரையும் பாட்டும் என்னும் இருதிறனாலும், நாயகர் அவர்கள் தமது மாற்றுரை மிக வன்மையாக அந்நூல்களால் மறுத்துரைப்பர்!

**மகாவித்துவான் சபாபதி முதலியார் :**

இங்ஙனம், நாவலர் – நாயகர் என்னும் இருவரும் தம்முள் நிகழ்த்திக் கொண்ட பெரும் சொற்போரின்கண் " ஆனை வெம் போரிற் குறுந்தூறு என " இடையிடையே சில அறிஞர்கள் கலந்து கொண்டனர். அவர்களுள் மகாவித்துவான் மதுரைச் சபாபதி முதலியார் அவர்களும் ஒருவராவர். அவர் ' பரிதிமாற் கலைஞர் ' எனப் பெயரிய சூரியநாராயண சாத்திரியார், B. A. அவர்களின் ஆசிரியராகத் திகழ்ந்தார். அவரால் 'ஞானசதுஷ்டய தார்ப்பண வச்சிர சூசிகை' (1893) என்னும் சிறுநூல், ஒன்று

வரையப்பட்டுள்ளது. நாயகர் அவர்களின் அருமை பெருமைகளை, நாம் அறிந்து கொள்ள அஃது ஓராற்றல் துணை புரிகின்றது. மதுரை மகாவித்துவான் சபாபதி முதலியார் அவர்கள், சோமசுந்தரநாயகர் அவர்களை அழகொழுக எழுதிக் காட்டும் ஒரு சொல்லோவியம் ( Pen - Picture ) போல, 'வச்சிர சூசிகை' என்னும் தமது மறுப்புரைநூலில், வசையிலும் இசை நலம் கெழும, இகழுரையும் ஒருவகையிற் புகழுரையாகப் பொலிய, நனிபெரிதும் புனைந்து, சிறப்புற வரைந்திருக்கின்றார்கள். அவ்வினிய நல்ல புனைவுப் பொன்னுரை - மறுப்பியல் மாண்புரை வருமாறு :-

**மறுப்பியல் மாண்புரை :**

> " சிறு கதைகளை நன்கு பிரசங்கிக்கவும், பரசமய நிராகரணம் செய்தற் குரியவாய பிரமாணங்கள்பலவற்றைத் திரட்டிக் கூறவும், தக்க ஆற்றலை யடைதற்குரிய புண்ணியஞ்செய்த இவர்.........தாம் வெளியிட்டுள்ள 'ஞான சதுஷ்டய தர்ப்பணம்' என்னும் நூலின்கண், அகங்காரத்தையே ஒரு வடிவமாகக் கொண்டு, பிறர் நிந்தையாகிய முடியைத் தரித்து, நீண்ட பிரசங்கமாகிய முகம் பளபளக்க, அஸாமஞ்சஸம் - பரிவசானம் - பரியாலோசனை - சாத்ருஸம் - அசங்கதம் - முதலிய வடமொழிச் சொற்களாகிய அரிதாரப் பூச்சிட்டு, இலக்கணக் கல்வியும் - சாத்திரக் கல்வியுமாகிய கட்டுப் பல்லும் கட்டுத்தாடியும் விகாரமாய்த் தோன்றியசையுமாறு பூண்டு, சற் சூத்திரரின் வேடமாகிய சட்டையைப் புனைந்து, தருக்குரையும் செருக்குரையுமாகிய இரண்டு கைகளையும் நீட்டி வீசி, சிபரீதவாதம் விதண்டாவாதம் என்னும் இரு கால்களை ஊன்றி, அக் கால்களில் தாம் நெடுநேரம் நின்று பிரசங்கம் பண்ணும்படி சிட்டையாகப்பாடஞ் செய்திருக்கும்பாடல்களையும், அவற்றின் விபரீதார்த்தங்களையும் மடமட என்று கம்பீரமாகக் கூறும் ஆரவாரமாகிய சலங்கைகள் கலகல என்று ஒலிக்கப்புனைந்து, சாதாரணமாகியசனங்களை மயக்கும் படாடோபப் பொலிவாகியஓர் ஊன்றுகோலைக்கையிற் பிடித்துக்கொண்டு, அப் புத்தகமாகிய நடன சாலையில் விகடக் கூத்து ஆடுகின்றனர் "

— மகாவித்துவான் சபாபதி முதலியார்

### மறுப்புரையின் மாட்சிமைத் திறன் :

இச் சொற்றொடரின் நீட்சியும் மாட்சியும் தாம், என்னென் போம்! மறுப்புரையே யாயினும், இஃதொரு வகையில் சீலத்திரு சோமசுந்தர நாயகர் அவர்களைப் பற்றிய அரும்பெருஞ் சொல் லோவியம் எனலாம் படியன்றோ, அழகியதாய் இனிது திகழ் கின்றது? சீலத்திரு நாயகர் அவர்கள் எழுதிய " ஞான சதுஷ்டய தர்ப்பணம் " என்னும் நூல், உண்மைப் பொருளை விளக்குவ தன்று என்பார், அதனை " நடனசாலை " என்றும்; அந்நூற்கண் உண்மையல்லாதன வற்றை உண்மைபோல வைத்துக் காட்டி விளக்கமுயலுகின்றார் என்பார், நாயகர் அவர்களைக் " கூத்தாடு கின்றார் " என்றும்; கூத்தாடுதலும் ஒரு சிறந்த கலையாதலின், அதுபற்றி நாயகரின் செயல் ஒருவகையிற் பாராட்டப்படுவ தற்கும் உரியதாம்போலும் என எவரும் மயங்கற்க, இஃது இழித்தற்குரியகருங்கூத்தே என்பார், வாளா " கூத்தாடுகின்றார் " என்னாது, " விகடக்கூத்து ஆடுகின்றார் " என்றும் அவர் குறிப் பிடுகின்றார்.

இம்மட்டோ ! கூத்தாடுவார்க்குரிய செயல்களெல்லாம் இவர்பாற் காணப்படுமோ என வினவுவார்க்கு, அவையெல் லாம் இவர்பால் இயல்பாக அமைந்து கிடந்தன என்பார், முடி தரித்தல் - அரிதாரம் பூசல் - பொய்த்தாடி புனைதல் - சட்டை தரித்தல் - சலங்கையணிதல் - கோல்ஊன்றல் - முதலியசெயல் கள் பலவற்றையும், நாயகர் அவர்களின் திறத்தில் இனிது பொருந்த ஏற்றிக் கூறி, அவர் நகையாடியிருக்குந்திறம் சாலவும் போற்றற்குரியதாகும்.

நீண்டு விரிந்து நெறி பிறழாது பொருந்திய முறையில், திருந்தச் செல்லும் இச்சொற்றொடரின் உருவகஅணி நலந்தான், எத்தகைய சுவை வாய்ந்து இன்பம் களிதுளும்பச் செய்கின்றது! கூறலுறும் பொருள்களையெல்லாம் சங்கிலிபோற் பிணைத்து வைத்து. ஓர் இயைபுபட இனிதமைத்து, உருவகம் செய்திருத் தலின், இதனை இயைபுருவகம் என்போமா? அல்லது, கூத்தா டுதல் என்னும் கருத்தைமுதன்மையாகத் தேர்ந்தமைத்து, அதற் குரிய எல்லாவற்றையும் நிரந்தினிதெடுத்து, நேர்பட வகுத்து முற்றுகத் தொடுத்து, உருவகம் செய்திருத்தலின், இதனை முற்று ருவகம் என மொழிவேமா? அல்லது இவ்விரண்டின் இயல்புமே இனிதமைந்து ஒருங்கு காணப்படுதலின், இதனை இயைபுமுற்று ருவகம் எனக் கொண்டு மகிழ்வேமா?

### எதிர்த்தாக்கு :

இதனை என்சொல்லிப் புகழ்ந்து போற்றுகேம்! இவ்வாறு சுவையமையச் செந்தமிழால் வசைகூறி வைதாலும், இதனைச் சான்றோர்கள் ஒருவகையில் வாழ்த்தும் இசையும் எனவே கொண்டு, மனக்களிப்பர் என்பதில் தடை என்ன? வசையிலும் இசை வளர்க்கும் இயல்புடைய இன்னோரனைய மறுப்புரை நூல்கள், அறிஞர்களாற் பெரிதும் உவந்து போற்றப்படுதற் குரியனவேயாகும். இஃதெங்ஙனமாயினும், மேலைச் சொற்றொடரானது, ஆலிவர் கோல்ட் ஸ்மித் (Oliver Goldsmith) என்பார், சாமுவேல் ஜான்சன் (Samuel Johnson) எட்மண்ட் பர்க் (Edmund Burke), டேவிட் கேரிக் (David Garrick) முதலிய தமதுநண்பர்களோடு, ஒருபோது பிணங்கி மாறுகொண்டு பழித்தெழுதிய "எதிர்த்தாக்கு" (Retaliation) என்னும் அரிய ஆங்கிலக் கவிதையின் நலங்களைப் பெற்றுள்ளமை, நம்மனோர் அறிந்தின்புறற் பாலது.

### நாயகரின் நலமிகும் சிறப்பு இயல்புகள் :

சீலத்திரு சோமசுந்தர நாயகர் அவர்கள், சிவகதைகளை மனமுருகச் சொல்லவல்லவர். திருஞானசம்பந்தரைப் போன்ற பெருமித இயல்பு உடையவர். அப்பெருமானைப் போலவே பர சமய நிராகரணமும், பரபக்க மறுப்பும்செய்து, சைவசித்தாந்தச் செந்நெறியைப் பரப்பி, வெற்றிக் கொடி நாட்ட முனைந்து பெரிதும் முயன்று அயராது உழைத்தவர். நெடுநேரம் நின்று, கேட்டார்ப் பிணிக்கும் தகையவாய், கேளாரும் வேட்பச் சொற் பொழிவாற்றும் பேராற்றல் பெற்றவர். வடமொழியில் பெரும் புலமை வாய்ந்தவர். அவர்தம் பேச்சிலும் நூல்களிலும் 'அசா மஞ்சஸம் – பரிவஸானம் – பரியாலோசனை' என்பன போன்ற வடசொற்கள் சில, இடையிடையே விரவி வரும். அவர்தம் தோற்றம் கம்பீரமான சிவவேடப் பொலிவழகு மீக்குத் திகழும். சுந்தரமூர்த்திசுவாமிகள் போல ஊன்றுகோல் ஒன்றும், அவர் தமது கையில் ஏந்திச் செல்வர் போலும். இலக்கியம் – இலக் கணம் – சாத்திரம் – கவிதையியற்றல் – மறுப்புரை வரைதல் முதலிய பலப்பலதுறைகளில், நாயகர் அவர்கள் ஒப்புயர்வற்றுச் சிறந்தவராவர். விவாதப் போரில் அவரை வெல்லுதல் அரிது. 'செறுநரும் விழையும் செயிர்தீர் செம்மல்;' எனும்படி விளங்கிய சோமசுந்தர நாயகர் அவர்களின் தூய சிறந்த நலமிகும் இயல் புகள் பலவும், மகாவித்துவான் மதுரைச் சபாபதி முதலியார் அவர்களின் மறுப்பியல் வசையுரையிலும், இசை பெருகித் திகழும்படி, புலப்படுத்தப் பெற்றிருத்தல் மகிழ்தற்கு உரியது.

**முடிவுரை :**

முற்காலப் புலவர் பெருமக்களின் இயல்புகள் - வாழ்க்கை வரலாறுகள் - முதலியவற்றையும், அக்காலத்தின் இலக்கியப் போக்கு - வளர்ச்சிமுறை - நடைநலம் - முதலிய பலவேறு செய்திகளையும், ஆராய்ந்து சுவைத்து இன்புறும் இயல்புடைய அறிஞர்களுக்கு, இதுபோன்ற அரிய மறுப்புரை நூல்கள் ஆராப் பெருவிருந்து ஆகும்.

சொல்லார் புகழ்ச்சோம சுந்தர நாயகரும்,
நல்லார் சபாபதி நாவலரும், — வல்லாராய்த்
தம்முள் மறுத்தியற்றும் சைவத் தமிழ்நூல்கள்,
மெய்ம்மை, அறி விற்காம் விருந்து !

---

## இறை அன்பு

"பக்தி என்பது மனநெகிழ்ச்சி; மன உருக்கம்; அன்பு என்பது ஆன்ம நெகிழ்ச்சி; ஆன்ம உருக்கம். எல்லா உயிர்களிடத்தும் கடவுள் வியாபித்திருத்தலை அறிதலே தெய்வ பக்தியாம்."

"காற்று வாசனை இரண்டும் கண்ணுக்குத் தெரியாது. காற்று சிவன்; வாசனை சக்தி; இவை இரண்டும் ஒன்றாய்க் கலந்து இருக்கின்றன. அதுவே தெய்வம்."

— திருவலம் சித்தர் சிவானந்த மௌன சுவாமிகள்.

— சத்தியகங்கை 15—3—83.

❀

## அறிந்துகொள்ள வேண்டியவை

இவ்வுலகம் மிகப் பெரிய மனநோய் மருத்துவமனை. இதில் வாழும் அனைவருமே பைத்தியம்பிடித்தவர்கள், சிலருக்குப் பணப்பைத்தியம்; சிலருக்குப் பெண்பைத்தியம்; சிலருக்குப் பட்டம் பதவியில் பைத்தியம்; சிலருக்கு இறைவனிடம் பைத்தியம். — சுவாமி விவேகானந்தர்.

— அமரபாரதி. மார்ச் 83

உ

குருபாதம்

தருமையாதீனம் பத்தாவது குருமகாசந்நிதானம்

**ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள்**

அருளிய

# திருவருட்பாத் திரட்டு

( பொழிப்புரையுடன் )

**வித்துவான் திருமதி. ப. நீலா** எம். ஏ.,

## 1. ஸ்ரீகாசி துண்டிராஜகணபதி திருவருட்பா

### காப்பு – வெண்பா

சீர்கொண்ட காசிநகர் சேர்துண்டி ராசனெனும்
பேர்கொண்ட ஐங்கரற்குப் பேசுபுகழ்த் — தார்கொண்ட
நற்றிருப்பாட்(டு) ஈரைந்து ஞாலமிசைத் தொண்டரெலாம்
கற்றிருப்பார் மேலாம் கதி.

(பொழிப்புரை) புகழ் நிறைந்த காசிநகரில் எழுந்தருளியிருக்கும் துண்டிராஜன் எனும் பெயர்கொண்ட ஐங்கரமுடைய விநாயகரின் புகழைப் பேசும் மாலையாகிய இந்த முத்திதரும் செல்வப்பாடல்கள் பத்தினையும் கற்ற உலகிலுள்ள தொண்டர்களெல்லாம் மேலாம் கதியினை அடைவார்கள்.

(கருத்து) இந்தப் புகழ்ப் பாடல்கள் மேலாம்கதிதருவன.

(குறிப்புரை) சீர்கொண்டகாசி – இறக்க முக்திதரும் தலம் இது என்பதும் புகழுக்கு ஒரு காரணம். பிறக்க – திருவாரூரும், தரிசிக்க – சிதம்பரமும், நினைக்க – திருவண்ணாமலையும் முத்தி தருவன என்பதைத் தொடர்பாக எண்ணலாம். கரம் – செய் கைக்குரிய உறுப்பு. ஐங்கரன்–படைத்தல், காத்தல், அழித்தல், அருளல், மறைத்தல் என்ற ஐந்தொழில்களையும் செய்பவன். புகழ்த்தார் – புகழாகிய மாலை. திருப்பாட்டு – செல்வமான பாட்டு. 'நல்' என்ற அடைமொழி முத்தியைத் தருவதாக அமையும். நற்றுள் – என்பதற்கு பிறவிப் பிணிக்கு மருந்தாகலின் நற்றுளென்றார் – பரிமே. ஞாலம் – உலகம் – மண்திணி ஞாலம் ( –மணிமே. (22. 45. 6.) திருக்குறள் 2. உரை.

தொண்டரெலாம் கற்று ஞாலமிசை மேலாம் கதியில் இருப்பர் எனக்கூட்டி முடிவுசெய்தலுமொன்று. அது இம்மைப் பயனுக்கு ஏற்றம் தருவதாக அமையும்.

ஓங்கார வடிவான உன்பாத தாமரையும்
உபயபரி புரமறைகளும்
உதிக்கின்ற செங்கதிர்கள் ஒருகோடி நிகரொளியும்
உத்தூள நீற்றின் ஒளியும்
பாங்கார் கசானனமும் முககரமும் வளர்புயப்
பவளாச லங்கள் நான்கும்
பாசமுட னங்குசம் கொம்போ ரிலட்டுகம்
பட்சமொடு வைத்த கரமும்
நீங்காத அருள்மாரி பொழியும்த்ரி யம்பகமும்
நிறையுமும் மதமாரியும்
நீள்சடா டவியும்வெண் பிறையும்ஒரு தொந்தியும்
நெஞ்சில்ஒரு காலும் மறவேன்
காங்கேயன் மகிழ்தமைய னேகங்கைநதி பெருகு
காசிவாழ் துண்டிராச
கணபதி யெனும்பெரிய குணமேரு வேஅருட்
கருணை நிதிக்கடவுளே. 1

(பொ-ரை) கங்கையின் மகனும் முருகன் மகிழுகின்ற மூத்தவனே! கங்கையாறு பெருகிவரும் காசியில் வாழ்கின்ற 'துண்டிராசகணபதி' எனும் குணமலையே! அருட்கருணையை நிதியாகக்கொண்ட கடவுளே! ஓங்கார வடிவமான உனது பாத தாமரைகளும், அவற்றின்மேல் இரண்டான சிலம்புகளாக வேதங்களும், உதிக்கும் கதிரவன் ஒருகோடி சேர்ந்தாலென ஒளியும், நீரின்றிப் பூசிய நீற்றின் ஒளியும், அழகாயமைந்த யானைமுகமும். தும்பிக்கையும், வளருகின்ற தோள்களாகிய பவளக் குன்றங்கள் நான்கும், பாசம் அங்குசம் கொம்பு மோதகம் இவற்றைப் பரிவொடு தாங்கிய கைகளும், விடாத கருணை மழை பொழியும் முக்கண்ணும், நிறைந்த மும்மதமாம் மழையும், நீண்ட சடைக்காடும், அதில் வெண்பிறையும், ஒப்பற்ற தொந்தியுங் கொண்ட இத்தோற்றத்தினை நெஞ்சில் வைப்பேன்-ஒருக்காலும் மறவேன்.

(க - து) உன் ஓங்கார வடிவம் மறக்கவியலாது.

(கு - ரை) விநாயகரின் வடிவம் ஓங்கார வடிவமென்பர். உபயபரிபுரமானதால் பாததாமரைகள் என நினைக்க. உபயம் -

இரண்டு. 'உபய குலோத்தமன் அபயன்'-கலி-பரணி. பரிபுரம்- சிலம்பு. பரிபுரச் சீறடி பாசாங்குசை (அபி. அந். 43.) பரிபுரமாகு சரணார விந்தங்கள் (இதே நூல். 15-1) என்று முருகனைக் குறிப் பிடுகிறார். உத்தூளனம்-தண்ணீரிட்டுக் குழைக்காமல்பூசும்நீறு. கசானனம் - கஜம் - யானை. ஆனனம் - முகம். முக்கரம் - தும்பிக்கை. தூம்பு - துளை. தூம்புகை தும்பிக்கை. காரணப் பெயர். 'தூம்புடைக் கையான் மொண்டு மஞ்சனத் தூநீராட்டி' (திருவிளை. வெள்ளையானை - 23.) அசலம் - மலை. பவளாசலம் - உருவகம். பாசம் - கயிறு. 'பாசந்தின்ற தேய்கால் மத்தம்' (நற் - 12). பாசக்கயிறு என வழக்கில் வெற்றெனத் தொடுத்தது. லட்டுகம் - கொழுக்கட்டை. லகாரம் தமிழில் முதலில் வாராத படியால் இலட்டுகம் என்பதாகநின்று கொம்புடன் சேர்ந்து கொம்போரிலட்டுகம் எனவந்தது. ஓர் - மிகச் சிறப்பான. திரியம்பகம் - முக்கண். விநாயகருக்கும் மூன்றுகண் உண்டு. 'முக்கணன் எனும் பெயர் யானைமுகக் கடவுள் முதலியோர்க்கு மூன்றுகண் உளவாதலின் காரணம் கருதியவழி மூன்று கண்ணினையுடையோர் பலர்க்கும் சேறலின்' - (நன் - எழுத் து 62) எனவரும். மும்மதம் - யானைமுகம் ஆனதால் கன்னமத மிரண்டுடன், விநாயகரும் ஆண்வடிவமானதால் பீஜமதமும் கொள்ளமதம் மூன்றாகும்.

'இல்லையானால் பஞ்சாக்கரத்தின் பேதமாகிய எட்டெழுத்து ஆறெழுத்து, நாலெழுத்து முதலியனவும் பஞ்சாக்கரமென வழங்கப்படுமாறு போல மும்மதத்தின் வகையாகிய ஒருமதமும் இருமதங்களும் மும்மதமென்றே வழங்கப்படும் என்க' (சிவ. சித்தி. காப்பு சிவ. சுவாமிகள் உரை) இச்சா ஞான கிரியா சக்தி களைக் குறிப்பதே மும்மதம். (மதமாரி, சடாடவி - உருவகம் சடை + அடவி - சடாடவி சடைக்காடு. கணம் - இனம், கூட்டம். பதி தலைவன். துண்டிராஜன் :-

அருளால் உருக்கொண்ட ஆனந்த வெள்ளமே
அனந்தசூரியர் உதயமே
ஆயிரங்கோடி சந்திரர் உதயமே இன்பமே
ஆனமழை பொழி மேகமே
திருவே பெருஞ்செல்வ மேகாம தேனுவே
சிந்தா மணிக்குவி யலே
தேனுவின் பாலுடன் கற்பகப் பூவில்எழு
செந்தேன் கலந்த கடலே

திருவான கற்பகச் சோலையே யெல்லாம்
தரும் பெரியபதும நிதியே
சங்கநிதியே உண்ண வுண்ணத் தெவிட்டாத
தண்ணமுதின் அதிமது ரமே
கருவூலமேயென் றுனைப்பாடி உருக அருள்
காசிவாழ் துண்டி ராச
கணபதி யெனும்பெரிய குணமேருவே அருட்
கருணை நிதிக் கடவுளே. 2

(பொ-ரை) காசிவாழ் துண்டிராசனே! அருளையே வடிவமாகக்கொண்ட ஆனந்தப்பெருக்கே! எண்ணிலா சூரியர்களின் உதயவொளியும், ஆயிரங்கோடி நிலவுகளின் தண்மையும் கொண்டு இன்பமழைதரு மேகமே! இம்மைக்கும் மறுமைக்கும் ஆகும் பெருஞ்செல்வமே! காமதேனு, சிந்தாமணிக் குவியல் எல்லாம் நீரே! காமதேனுவின் பாலுடன் கற்பகப்பூவின் தேனுங் கலந்தாலனைய கடலே! கற்பகச் சோலையே! சங்க, பதும நிதிகளாக இருப்பரே! உண்ணத் தெவிட்டாத குளிர்ந்த அமுதின் இனிமையே! நிதிநிறையறையே! என்றெல்லாம் உனைப்பாடி உருக அருள்வாயாக.

(க - து) உனைப்பாடி உருக அருள்க.

(கு - ரை) திரு - மெய்ப்பொருளாம் முத்திச் செல்வம். 'பொன்னும் மெய்ப்பொருளும் போகமும் திருவுமென' என்று சுந்தரர் வாக்கில் நிரல் நிறையாக வந்தது காண்க (சுந்தரர்-603). அருளை உருவாகக்கொண்ட என்பது காரணப் பொருட்டாக வந்தது என்றால் 'வழிபடும் அவரிடர் கடிகணபதிவர அருளினன்'- என்றவாக்குடன் பொருந்தி மகிழ்வுதரும் (ஞானசம் 1 - 123 ல் - 5). சிந்தாமணி நினைத்தைத்தரும் ஆற்றலுடையது 'கடல் பெற்றதோர்மணி சிந்தித்த நல்கும்' (பண்டாரமும் - 6) சங்கபதுமநிதிகள் - அவ்வடிவிலுள்ள குபேரனிடமானசெல்வம். அளவைக்குறிக்கும் பேரெண்களாகக் கூறலுமுண்டு. 'சங்கநிதி பதுமநிதி இரண்டுந்தந்து' (அப்பர் 6-938) கருவூலம்-நிதியறை-பண்டாரம். 'மூலபண்டாரம் வழங்குகின்றான் வந்துமுந்துமினே' (திருவா - 528) உனைப்பாடி உருக அருள் - 'பாடும்பணியே பணியாய் அருள்வாய்' என்பதை நினைவூட்டியது. (அருணகிரி கந். அனு - 2)

(தொடரும்)

கட்டுரை எண். 36

# அபிராமி அந்தாதி

புலவர். திரு. K. சந்தானராமன், M A., B. Lit.,
D. P. P. A,. D, U. N., I. U.

**திங்கட் பகவின் மணம்நாறும் சீறடி சென்னிவைக்க
எங்கட்கு ஒருதவம் எய்தியவா! எண்ணிறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவம் எய்துமோ! தரங்கக்கடலுள்
வெங்கட் பணி அணைமேல் துயில்கூரும் விழுப்
[பொருளே! 35**

**அ. தரங்கக் கடலுள் வெங்கட்பணி அணைமேல் துயில் கூரும் விழுப்பொருளே!**

(1) அலைகளையுடைய கடலின் கண் வெய்யதாகிய கண்களையுடைய அரவினை அணையாகக் கொண்டு அறிதுயில் செய்யும் மேலான பொருளே! என அழைக்கிறார். ( தரங்கம் – அலை. பணி – பாம்பு )

(2) அலைகடல் இடை அரவணையில் துயில்கூரும் செம் பொருள் எனப் பொதுவாகக் குறிப்பிட்டிருக்கிறார். ஆகவே, திருமால் வடிவம் எனவும், அவரை அதிட்டித்துச் செயலாற்றும் வைஷ்ணவி எனவும், அமுதக் கடலில் துயிலும் அம்பிகை எனவும், பாம்பின் வடிவில் துயிலும் குண்டலினி எனவும், பல வாறு பொருள் கொள்ளலாம்.

(3) அவளே விஷ்ணு வடிவில் இருப்பவள்! என்கிறது சகஸ்ரநாமம். ‘ விஷ்ணுரூபிணி ’ என்பது நாமம். முகுந்தன் என்னும் திருமாலாய் இருப்பவள் என்னும் பொருளில் ‘முகுந்தா’ என்ற நாமமும் உண்டு. ‘ பஞ்சக்ருத்யபராயணா ’ என்றவாறு, ஐந்தொழில் இயற்றும் அம்பிகை ‘ கோப்த்ரி ’ என்ற நாமத்தின் படிக் காத்தல் புரிகிறாள். கோவிந்தன் என்னும் திருமால் வடிவினள் ( கோவிந்தரூபிணி ) எனவும் சகஸ்ரநாமம் புகழு கிறது.

'அஷ்டமூர்த்தி' எட்டு வடிவினன் என்ற பெயர் இறைவனுக்கு இருப்பதுபோல் அன்னையினையும் 'அஷ்டமூர்த்தி' என சகஸ்ரநாமம் குறிப்பிடுகிறது. எனவே எட்டு வடிவங்களில் ஒன்றாகிய திருமாலின் வடிவமும் அம்பிகைக்கு உரியதாகிறது. அவ்வடிவத்திற்குரிய அலைகடல் அறிதுயில் அரவணை ஆகியவையும் அவளுக்கும் உரியனவாகின்றன.

(4) சைவநெறிப்படி திருமாலும் சக்தியே ஆவார். 'புருஷ சக்தி' அல்லது ஆண் சக்தி என அவர் அழைக்கப்படுவார். மாதொரு பாகனை விளங்கும் இறைவன் மாலொருபாகனை சங்கரநாராயணன் என்ற பெயருடன் விளங்குகிறன்.

சங்கரித்தலாகிய இலயசக்தி – துர்க்கை. கோபித்தலாகிய கோரசக்தி – காளி. இன்புறுதலாகிய போகசக்தி – கௌரி. ஆண்மையுறுதலாகிய புருஷசக்தி – திருமால்.

"இறுதி செய்திடலே சீற்றம் இன்பமே ஆண்மை என்னு
அறைதரு சக்திநான்காம் அரன்தனக்கு; ஐயை, காளி,
முறைதரு கவுரி; இன்னோர் மும்மையும் பெற்றோர் ஏனைய
பெறலருஞ் சக்தியான் இப்பெற்றியும் மறைகள் பேசும்"

என்ற கந்தபுராணப் பாடல் இக்கருத்தினைத் தெளிவாக எடுத்தியம்புகிறது. மற்றும் கந்தபுராணம் இக்கருத்தினைத் திருமால் வாய்மொழியாகவே குறிப்பிடுவதுடன் "இப்பெற்றியும் மறைகள் பேசும்" என்பதால் இஃது வேதப்பிரமாணமுடைய கருத்து எனவும் சாற்றுகிறது.

ஆகவே புருஷசக்தியாகிய விஷ்ணுவடிவில் விளங்கும் அம்பிகையே வெங்கட்பணியணைமேல் துயில் கூரும் விழுப்பொருள்.

(5) மறைகள் பேசும் இப்பெற்றியினைத் தமிழ்த் திருமுறைகளும் குறிப்பிட்டிருக்கின்றன.

"எரியலால் உருவம் இல்லை, ஏறு அலால் ஏறல் இல்லை
கரிஅலால் போர்வையில்லை, காண்டகு சோதியார்க்குப்
பிரிவிலாது அமரர்கூடிப் பெருந்தகைப் பிரான் என்று ஏத்தும்
அரியலால் தேவி யில்லை ஐயன் ஐயாற னார்க்கே"

என்ற திருவையாற்றுப் பதிகம் (அப்பர் தேவாரம்) அரியலால் தேவியில்லை எனத் திட்டவட்டமாய்க்கூறுகிறது.

"காரேறு நெடுங்குடுமிக் கயிலா யன்காண்
கறைக்கண்டன் காண், கண்ணோர் நெற்றியான் காண்,
போரேறு நெடுங் கொடிமேல் உயர்த்தி னன்காண்,
புண்ணியன் காண், எண்ணரும்பல் குணத்தினன் காண்,

நீரேறு சுடர்சூலப் படையினள் காண்
நின்மலன் காண் நிகரேது மில்லாதான் காண்,
சீரேறு திருமால் ஓர் பாகத்தான் காண்,
திருவாரூரன் காண் என் சிந்தையனே. — அப்பர்.

(6) "விண்மேவும் புலவருக்கு வேலை மருந்தானதை நல்கும் மெல்லியலே" என அபிராமிபட்டரும் பாடுமிடத்து மோகினி வடிவாகி அமுதளித்தவள் அம்பிகையே என்கிறார்.

தாருகாவனத்தில் இறைவன் இரவலராய் (பிட்சாடனராய்) வந்தபொழுது புருஷசக்தியாகிய திருமாலே மோகினியாகி வந்ததும், சக்தி அம்சமாக அத்திருமாலே இருந்து 'மகா சாஸ்தா' அவதாரத்தில் பங்கு கொண்டதும் இக்கருத்தினை விளக்கும் புராண வரலாறுகள் ஆகும்.

(7) அம்பிகை வைஷ்ணவி என்னும் பெயரோடு திருமாலை இடமாகக்கொண்டு தொழில்புரிபவள் ஆதலின் ஆதிசேடனில் துயில்பவளாகக் கூறினர். என்பார் திரு. கி. வா. ஜ. "பொங்கு மளிப் புணரித்துயில் வல்லி," "வலையவாளராமீது துயில்விடாத தான் என்பவை அவர்தரும் தக்கயாகப் பரணி மேற்கோள்கள் ஆகும்.

(8) வால்மீகி, இராமாயணத்தில் திருமாலின் அவதாரமாகிய இராமனை சீதை "ஸ்த்ரியம் புருஷ விக்ரஹம்" — அதாவது ஆண்வடிவிலுள்ள பெண்" என்று அழைப்பதாகக் குறிப்பிடுகிறார் திருமாலே சக்தி, அல்லது சக்தியே திருமால் என்பதை சீதை அறிந்ததால்தான் அங்ஙனம் அழைக்கிறாள் என உரையாசிரியர் திரு. சண்முகநாதன் அவர்கள் எடுத்துக் காட்டுகிறார். மேலும் அவர் எழுதும் தத்துவார்த்த உரை வருமாறு :-

வெங்கட்பணி அணை அல்லது ஆதிசேஷன் என்பது ப்ரம்ம சைதன்யம் என்னும் எல்லாம் ஒடுங்கியபின் பிரம்ம சைதன்யமே எஞ்சிநிற்கிறது. எஞ்சியதை 'சேஷம்' என்கிறோம். ஆகவேஎஞ்சிநிற்கும் ப்ரம்மசைதன்யமே வெங்கட் பணியணை என்னும் ஆதிசேஷன். இதனைக் கீழ்க் கண்டவாறு தெளிவாகக் கூறலாம்.

அனைத்தும் ஒடுங்கும் பிரளய காலத்தில் அழியாத தருமம் இடபத்தின்வடிவாகிஇறைவனைத்தாங்கும்பேறுபெறுவதுபோல் பிரளய காலத்தில் பிரம்ம சைதன்யம் ஆதிசேஷன்வடிவாகி அன்னைக்கு அணையாகிறது.

(9) சாக்தபரமான நூல்கள் அம்பிகையின் இருப்பிடம் அமுதக்கடல் (ஸாதா ஸிந்து) எனக்கூறும்.

அண்டங்கள் அனைத்துக்கும் அப்பாலுள்ள அமுதக் கடலில் மணித்தீவில் பஞ்சப்ரம்மங்களால் ஆகிய மஞ்சத்தின் மீது எழுந்தருளுகிறாள் அம்பிகை.

" ஆர் அமுது இன்கடல் வேலி செழுந்தரு
வாய்மணி பம்பிய தீவுஊடே
பாரகடம்பு அடர்கானில் அருங் கொடை
பாய்மணி மண்டல வீடு ஊடே
கோரசிவன் பரமேசன் உன்மஞ்சம் ஓர்
கூர் பரியங்கம் எனு மேலே
சீர் அடரும் பரஞானம் ஊறும் களி
தேவர் அருந்துவர் பூமாதே "

என்பது வீரைகவிராஜ பண்டிதரின் தமிழ் சௌந்தரியலகரிப் பாடல் ஆகும்.

சிவனை மஞ்சமாகக் கொண்டு எழுந்தருளுகிறாள். அதாவது அவன்மீது சாய்ந்து படுத்திருக்கிறாள். அவ்வாறு படுத்திருக்கும் பொழுது, அப்பெருமான் அணிந்திருக்கும் அணிகலனாகிய வெங்கட்பணிகளே ( பாம்புகளே ) அவளுக்குத் தலையணையாகிறது. இதனையே 'தரங்கங் கடலுள் வெங்கட்பணியணைமேல் துயில்' என்றார்.

(10) தரங்கக்கடல் என்பதும், அமுதக்கடல் என்பதும் குண்டலினி சக்தி துயில் கொள்ளும் மூலாதாரமேயாகும். மூலாதாரமாகிய அமுதக் கடலில் பாம்பின் வடிவத்தின்மீது 'சாந்நித்யம்' கொண்டு உறங்கிய நிலையில் இருக்கும் விழுப்பொருள் அம்பிகையே என்பது யோக நூல் வழியான விளக்கம் அதாவது :-

தரங்கக்கடல்-மூலாதாரம். வெங்கட்பணி அணை-அரவின் வடிவான குண்டலினி. துயில் கூரும் விழுப்பொருள் - அதனை இடமாகக் கொண்டு உறங்கிய நிலையில் இருக்கும் அம்பிகை.

### ஆ. திங்கட் பகவின் ...... ......எங்கட்கும் ஒருதவம் எய்தியவா!

(1) பிறைச் சந்திரனது நறுமணம் கமழும் நினது சிறிய திருவடியினை, எளியேங்களது தலைகளிலும் வைத்தருளிய தவப் பயனின் சிறப்புத்தான் என்னே என வியக்கிறார்.

(2) ஊடற் காலத்தில் சிவபெருமான் அன்னையினை வணங்குவதால் அவரது சடையில் இருக்கும் பிறைச் சந்திரனது நறுமணம் அவளதுதிருவடியில் ஏறிவிடுகிறது. அச்சிறப்புடைய நினது திருவடி எமது தலைகளிலும் சூட்டப்படுவது தவப்பயனே யாகும்.

(3) ஊடற்காலத்தில் கணவன் மனைவியின் காலில்வீழ்ந்து வணங்குவது என்பது ஒரு நூன்மரபு. அம்பிகையினை ஸ்ரீவித்யா உபாஸனை முறையில் வழிபடும் அடியவர்களின் தலையில் அன்னையின் திருவடிஎப்போதும் பதிந்திருக்கிறதென்பது சாக்த மரபு. ஸ்ரீ வித்யா உபாஸகர்களில் ஒருவராகிய சிவபெருமானது தலையிலும் அவளது திருவடி பதிவதால் அவரது தலையில் உள்ள பிறைச்சந்திரனின் நறுமணம் ஏறிவிடுகிறது.

(4) 'திங்கட்பகவு' என்றால் சந்திரனின் 'கீற்று' அல்லது 'பிளவு' என்பது பொருள். இங்கு திங்கட்பகவு என்ற பாடத் திற்குப்பதில் "திங்கட் பகையின்" என்றபாடம் இருக்கவேண்டு மென்று சிலரது கருத்து. அக்கருத்துப்படி சந்திரனின் பகை யாகிய தாமரைமலரின் மண நாறும்சீறடி எனப் பொருள்படும்.

(5) சிவபெருமான், நந்திதேவர், முருகன், அகத்தியர் முதலான பன்னிரு உபாஸகர்களுக்கு இந்தப் பேறுகிடைத்தது. அவர்களுக்குக் கிடைத்த தவப்பயன் எளியேங்களுக்கும் கிடைத்தது மிகவும் வியப்புக்குரியதாகும்.

(6) இங்கு 'ஒரு தவம்' என்பது ஒப்பற்ற தவத்தின் பய னாகிய அன்னையின்திருவடி சென்னிவைத்த சிறப்பினைக் குறித்து நின்றது. அல்லது கடுந்தவத்திற்குநிகரான ஸ்ரீவித்யா உபாஸனை யினைக் குறித்து நின்றது எனினும் ஆம்.

## இ. எண்ணிறந்த விண்ணோர் தங்கட்கும் இந்தத் தவம் எய்துமோ!

(1) எண்ணிலடங்கா வானவர் (தேவர்) களுக்கும்இந்தத் தவப்பேறு கிடைக்குமோ? கிடைக்காது. என்றவாறு.

(2) இங்கும் 'இந்தத்தவம்' என்றசொற்றொடர் 'ஸ்ரீ வித்யா உபாஸனை' குண்டலினியோகம் முதலிய சாக்த சாதனைகளை உணர்த்துகிறது. பெருந்தவம் இயற்றுவது போல ஒரு முகப் பட்ட சிந்தையுடன் பற்றற்ற நிலையில் உபாஸனையோ அல்லது யோகமோ இயற்றுவர். அத்தவசிகள் சாதகர்கள் என்றுஅழைக் கப்படுகின்றனர். அத்தகைய சாதகர்களாக ஆகும் வாய்ப்பு எளிதில் கிடைத்து விடுவது அல்ல. பல பிறவிகளில் பல தெய் வங்களை வழிபட்ட புண்ணியம் உள்ளவர்களுக்கே அந்தத் தவம் எய்தும் என்பதும் சாக்தர்களின் கருத்து.

(3) இந்தத்தவமும் அதன் பயனும் பெரிதும் மண்ணுல கிலேயே கிடைத்தற்குரியன.

மேலும் விண்ணோர் இவ்வடியார்களைப் போல் பிறபயன் கருதாது அன்னையினையே இலக்காகக் கருதி வழிபடுவோர்

அல்லர். தங்களது இடுக்கண் களையவேண்டியும், பதவிகள் நிலைத்திருக்க வேண்டியும் தான் வழிபடுகின்றனர். அதனால் எண்ணிறந்தவிண்ணவர்கட்கு எட்டாத இந்தத்தவம் எளியவர்களுக்குக்கிட்டுகிறது.

(4) மேலும் அடியவர்கள் பலர் வழிபட்டாலும் யோகம் இயற்றினாலும்மிகச்சிலருக்கே அத்தவத்தின்பயனாகிய திருவடிப் பேறு கிட்டுகிறது.

எண்ணிறந்தவிண்ணோர் தங்கட்கும் எய்தாத அந்தத்தவம் தமிழகத்தில் ஒரு அபிராமி பட்டருக்கும், வங்கத்தில் ஒரு இராமகிருஷ்ணருக்கும் தான் அண்மைக் காலத்தில் கிடைத்திருக்கிறது. இவ்வாறு அத்தவம் எய்துவோர் 'விரல் விட்டு' எண்ணத்தக்கவர்களாகவே உள்ளனர்.

(5) அடியார் எய்தும் அத்தவப்பயன் எய்திய பெருமிதத்தில் "எண்ணிறந்த விண்ணோர் தங்கட்கும் இந்தத்தவம் எய்துமோ?" என வினவினர் எனவும் கூறலாம்.

மணிவாசகரின் பாவைப் பெண்கள் "செங்கண் அவன் பால் திசைமுகன்பால் தேவர்கள்பால் எங்கும் இல்லாததோர் இன்பம் நம்பாலதாக" என்று பெருமிதத்துடன் கூறும் அடிகள் இங்கு ஒப்புநோக்கி மகிழற்குரியன.

(6) காவடிச்சிந்து பாடிய சென்னிக்குளம் அண்ணாமலை செட்டியார் அவர்கள் சங்கரநயினர் கோயில் அன்னைமீது 'கோமதி அந்தாதி' என்னும் நூலும் இயற்றியுள்ளார்கள்.

சைவசித்தாந்தப் பெருமன்றத்தைச் சேர்ந்த அம்மை திரு சங்கரனார் அவர்களதுஉரையுடன் வெளியாகியுள்ள அந்நூலில் அன்னையின் சந்நிதி எய்தி வழிபட்டு மகிழும் அந்தத்தவத்தின் பெருமையினை எங்கும் எய்தமுடியாது என்று எடுத்துக்கட்டப் பட்டுள்ளது.

"என்னதவம் புரிந்தாலும் பெரீர் இவ் அன்னம் பன்னூல்
சொன்னதவம் புரிவால் உமக்குஉய்வகை சொல்லுவன்,பொன்
உன்னத அம்புரிசை வரராசையுற்றுச் சிமிசை
சன்னதவம் புரி அன்பாகி தாள் தொழிற் சார்வர் மெய்யே."

குறிப்புரை :- அனனம் - பெருமை. சன்னதம் - சந்நிதி. அம்புரி - நல்லதைச்செய். மெய்யே - உண்மை நெறியாகும்.

தக்க குருவின்முலம் ஸ்ரீவித்யாஉபாஸனை உபதேசம் கிடைத்தல் இப்பாடலின் பாராயணப் பலம் ஆகும்.

# சுமித்திரை – கம்பனைப் பாராட்டுதல்

**செல்வி எம். பி. நிர்மலா** எம். ஏ.,

வருவாய்க் கோட்டாட்சியர், மயிலாடுதுறை.

" சுமித்திரை " என்று பெற்றோரால் இடப்பெற்ற எனது பெயருக்குத் தோழமையுடையவள் என்பது பொருளாம். கவிச் சக்ரவர்த்தி கம்பன் தனது காப்பியத்தில் என்பெயருக்கு ஏற்றாற் போல அருங்குணங்களோடு என்னைப் படைத்திருப்பதைக் காணும்போது நான் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன். என் கணவனின் அன்பை என்னோடும் பகிர்ந்துகொள்பவர்கள் என் தமக்கையர் பொன்கோசலை, தோகையியல் கைகேயி ஆகியோ ராவர். என் கணவர் தசரதச்சக்ரவர்த்தியின் இளந்தேவியாகிய நான் இராமகாதையில் இருகாண்டங்களில் மட்டுமே வருகி றேன். கம்பநாடன் தன் கவிதைச் சிறப்பால் கற்போர்மனதில் எனக்கும் சிறந்ததோர் இடம்பிடித்துக்கொடுத்திருக்கிறான். இப் பேருதவிக்கு நான் என்றென்றும் கவிச்சக்ரவர்த்திக்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சொல்லின் செல்வனும் அனுமனையும், ஆருயிரையும் அடைக்கலம் காத்தற்பொருட்டுத் தியாகம்செய்த சடாயுவை யும், பல அடைமொழிகளால், பாராட்டும் கம்பன், குடத்துள் விளக்காக இருக்கும் பெண்ணாகிய என்னையும், சிறப்பித்துக் கூறுவது என்னையே மெய்சிலிர்க்கச்செய்கிறது. செம்பொருள் கண்டார்வாய்ச்சொல்லும், நிறைமொழிமாந்தர்தம் சொற்களும் மாண்புடையன என்று குறள் கூறும். கம்பன் என்னை,

"சொல் மாண்புடை அன்னை சுமித்திரை" என்று பாராட்டு கிறான். எனக்குப் பலபடப் பேசும் வழக்கம் இல்லையே, சின் மொழி மடந்தையாகிய எனக்குக் கம்பன் ஏன் இத்தகைய சிறப்பினைத் தந்திருக்கிறான் எனச்சிந்திக்கிறேன். திகைத்துப் போகிறேன். "குணமென்னும்குன்றேறி நின்றாரும் வெகுளியைக் காத்தல் அரிது" என்றும், 'விற்பிடித்து நீர்க்கிழிய எய்தவடுப் போன்று கணம்தோன்றி மறைவது சீரொழுகுசான்றோர் சின மென்றும் சான்றோரால்கூட கடத்தலரியது சினம்' என்று தமிழ் நூல்கள் செப்பும். ஆயின் கடல் போன்ற துன்பம் வந்துற்ற காலையும் நான் சினந்து கூறவில்லை என்று என்னைக் கம்பன்

பாராட்டுகிருன். என் கண்கள்போல்வாராகிய இராமனும் என் மகனும் தண்டகாவனம் செல்வதற்கே சமைந்தார்கள் என்ற செய்தி, ஈர்வாள் போன்று என் உள்ளத்தைப் பிளந்தது; துணுக்குற்றேன். என் மனநிலையை,

"புண்தாங்கு நெஞ்சத்தளாய்ப் படிமேல் புரண்டாள்
உண்டாய துன்பக்கடற்கு எல்லை உணர்ந்திலாதாள்"

என்று நான் உற்றதுன்பத்தைச் சொல்லோவியமாக்கியுள்ள கம்பனை நான் எங்ஙனம் பாராட்டுவேன். விதியின் வலிமையை யுணர்ந்த நான் வாளாயிருந்துவிட்டேன். பிறரைச் சொல்லால் சுட்டு என்னபயன். இதற்காகத்தான் என்னைக் கம்பன் "சொல் மாண்புடை அன்னை சுமத்திரை" எனப் பாராட்டுகிருனே? என் மகன் இலக்குவனிடம் நான் கூறியதையும் அவனுக்கு நான் இட்ட கட்டளையை அழகுற அடுக்கிக்காட்டுகிருனே கம்பன்,

"ஆகாதது அன்ருல் உனக்கு அவ்வனம் இவ்வயோத்தி
மாகாதல் இராமன் அம்மன்னவன் வையம் ஈந்தும்
போகா உயிர் தாயர் நம்பூங்குழல் சீதை என்றே
ஏகாய் இனி இவ்வயின் நிற்றலும் ஏதம் என்ருள்"

என்றும்,

"பின்னும் பகர்வாள் மகனே இவன் பின்செல்; தம்பி
என்னும்படி அன்று அடியாரின் ஏவல் செய்தி
மன்னும் நகர்க்கே இவன் வந்திடின் வா; அதுஅன்றேல்
முன்னம் முடி என்றனள் வாள்விழி சோரநின்ருள்"

என்றும் வருகின்ற பாடல்களில் எவ்வளவு மாட்சிமையை ஏற்றிச் சொல்கிருன் கம்பன். என் சொற்களுக்கும் இவ்வளவு மாட்சிமையுண்டோ? 'மாமன்னன் திருமகனை ஏவலனுய் அனுப்பினேன்' என்று கூறுகின்ற கம்பன், தன் சொற்சித்திரத் தால் என்கடமையுணர்வையும் அன்புள்ளத்தையும் பெருமைப் படுத்திவிட்டானே! எண்ணிப்பார்க்க எவ்வளவு மகிழ்ச்சியாய் இருக்கிறது தெரியுமா?

கங்கைகாண் படலத்தில் என்னை முதன்முதலாகக் காணு கின்ற குகனின் வாய் மொழியாக, "அறந்தானே என்கின்ற அயல் நின்ருள் தனைநோக்கி ஐய அன்பின் நிறைந்தாளை உரை" என்று கம்பன் கூறுகிருன். என்னைப்பார்த்த உடன் என்னை; என் அன்பினை; எடைபோடும் கூர்த்தமதி அவ்வேடர் குலத் தலைவனுக்கு உண்டோ? என வியக்கிறேன். முதன்முதலில்

என் அன்புமகன் பரதனைப்பார்த்துத் தவருகப்புரிந்துகொண்ட குகன் என்னை உள்ளவாறு புரிந்துகொண்டது எங்ஙனம்? என வியப்படைகிறேன். கம்பன் குகனின் அகக்கண்களைத்திறந்து முதலில் பரதனைப் புரிந்துகொள்ளச்செய்து அதன்பின் என்னைக் காணச்செய்திருக்கிறுன். இத்தகைய சிறந்த புத்தியால் என்னைச் சிறப்பித்துள்ள கம்பனுக்கு என் பாராட்டுதலைத் தெரிவிப்பதில் தவறேதும் இல்லையென நினைக்கிறேன்.

இராமகாதையில் காவியத்தலைவனும் இராமனைப் பலமுறை 'எம்பிரான்' எனக் குறிப்பிட்டு மகிழ்கின்ற கவிச் சக்ரவர்த்தி எம்பிராட்டி என்று பாராட்டுகிருனே!

"இன்னா இடர் தீர்ந்து உடன் எழுஎன எம்பிராட்டி
சொன்னால் அதுவே துணையாம்"

என்றும், "யாவர்க்கும் தொழுகுலம்" என்றும், "பெரியாள்" என்றும், "தூய நங்கை" என்றும் சிறப்பு அடைமொழிகளால் பாராட்டி என்னைத் திணறடித்துவிட்டானே கம்பன். ஏனென்று அவனைக் கேட்டால் "தன்னலம் கருதாத நங்கை உனக்கு உயர்ந்த பட்டத்தினை அளித்துச் சிறப்பித்தல் என்போன்ற காவியப் புலவர்களின் கடமை அல்லவா என்று மிகுந்த அடக்கத்துடன் கூறிக்கொள்கிருன்

சிறுபாத்திரங்களின் குணங்களையும், செம்மையாகத் தன் கவி நயத்தால் சித்தரிக்கும் கம்பனின் திறனை நான் எவ்வாறு பாராட்டுவேன். என்னசெய்வேன், எனக்குத்தான் அதிகமாகப் பேசிப்பழக்கம் இல்லையே என்னைப்போன்ற சிறு பாத்திரங்களையும் உயர்த்தியதால் கம்பன் எவ்வளவு உயர்ந்துநிற்கிருன் என்பதை என்னுல் உணர்ந்துகொள்ளமுடிகிறது. என் கணவன் தசரதச் சக்கரவர்த்தியின் அன்பும், அருட்சக்கரவர்த்தியாம் இராமனின்பாசமும், கவிச்சக்கரவர்த்தியாம் கம்பனின்மதிப்பும் கிடைத்த எனக்கு வேறென்னவேண்டும்! இராமனைப்போல் புகழ்பெற்று வாழ்க! உன்காவியம் அமுதம்போல் அனைவர்க்கும் இன்பம் பெய்க என்று வாழ்த்தி அமைகிறேன்.

---

## அறிந்துகொள்ளவேண்டியவை!

ஆகாரங்களாலும், கிருமிகளாலும், சூழ்நிலைகளாலும், மனநிலைகளாலும் பிணிக்கப்படுவதே பிணி.

— சித்தமருத்துவம்.

# ஒழுக்கச் சிதைவு

## தருமை ஆதீனகர்த்தர் வருத்தம்

மழையை வேண்டி கும்பகோணத்தில் மூன்று நாட்கள் வருண ஜபம் நடத்தப்பட்டது. ரெட்டிராவ் குளத்தில் மார்பளவு நீரில் 21 வேத பண்டிதர்கள் நின்று கொண்டு தினசரி காலையில் 4 மணிநேரம் தண்ணீருக்கதிபதியான வருணனைத் துதிக்கிற வேதமந்திரங்களை உரக்கப் பாராயணம் செய்தனர். மாலையில் குளத்தினருகே "ராம மந்திர"த்தில் ஹோமங்கள் நடத்தப்பட்டன.

நேற்றிரவு ஹோமம் நடந்தபோது தருமபுரம் ஆதீனகர்த்தர் வருகை தந்து ஆசியுரைத்தனர். அப்போது அவர் அருளுரை வழங்குகையில், இது போன்று தமிழ் நாடெங்கிலும் ஜபங்கள், ஹோமங்கள் நடத்தப்பட்டால் மழை வரும் என்பதில் ஐயம் இல்லை என்று கூறினர். இருந்த போதிலும் மக்களிடையே பொதுவாக தினசரி வாழ்வில் அறவொழுங்கு குறைந்து, எல்லாத் துறைகளிலும் ஒழுங்கற்ற போக்குகளும், அதருமமும் வளர்வது வருந்தத்தக்கது என்றும், மனிதரின் மனமும் வெளிப்புறமுள்ள இயற்கையும் தொடர்புடையன ஆதலால், மனிதர் தீய சிந்தனைகளை வளர்த்துக்கொள்ளும்போது அதனலேற்படுகின்ற அசுத்தம் இறைவன் கருணையால் இயங்கும் புறவுலகின் இயற்கை நிகழ்ச்சிகளின் ஒழுங்கைக் கெடுக்கிறது. வறட்சி போன்ற விபரீதங்கள் நேருகின்றன என்றும்சொன்னர்.

மனிதர் ஒவ்வொருவரும் இதய சுத்தமாகக் கடமைகளை ஆற்றுவதிலும், இறைவனிடம்பக்தியும், பிராணிகள், மரம், செடி, கொடிகளிடத்து அன்பும் செலுத்துவதிலும் ஈடுபட்டால் தான் மகிழ்ச்சியான வாழ்க்கை சமுதாயத்துக்குக் கிடைக்கும் என்றும் அவர் கூறினர்.

பல கோயில்கள் விளக்கேற்றவும் அன்றுட பூஜை நடத்தவும் கூட பண வசதியற்ற நிலைமையில் இருப்பதைக் குறித்து அவர் வருத்தம் தெரிவித்தார். ஆலயங்களின் பராமரிப்பு முறையாக நடக்க அவற்றின் வருவாயை அரசு உறுதிசெய்ய வேண்டும் என்று சுவாமிகள் வலியுறுத்தினர்.

துவக்கத்தில் பஞ்சு சாஸ்திரிகளும், தமிழ்நாடு பிராம்மண சங்கத் தலைவர் காசிராமனும் வரவேற்புரைத்தனர். பிரபல வர்த்தகர் எஸ், ஆர். ஜி. ரங்கநாதன் செட்டியார் தலைமையில் ஒரு குழுவினர் வருண ஜபத்துக்கான ஏற்பாடுகளைச்செய்தனர்.

நன்றி. தினமணி ஏப்ரல் – 30.

# மழை வேண்டுமா? தவறு செய்யோம் எனச் சபதம் செய்யுங்கள்

## தருமபுரம் ஆதீனம்

குடந்தையில் மூன்று நாட்கள் நடை பெற்ற வருண ஜெபம் ஹோமம் பூர்த்தி விழாவில் கலந்துகொண்டு அருளாசிவழங்கிய தருமபுரம் ஆதீனம் குருமகா சந்நிதானம் சண்முக தேசிக ஞான சம்பந்த பரமாசாரிய சுவாமிகள் கூறியதாவது:

மழை இல்லாமல் கஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. இது உலகம் பூராவும் சங்கடம் தருகிறது.

இங்குள்ள எல்லோரும் இறைவனிடம் பிரார்த்தனை செய்துள்ளோம். வருணஜெபம் ஹோமம் செய்துள்ளோம். சகோதர சமூகத்தினர் இன்றுதொழுகை நடத்துகிறார்கள். இதுபோல் இன்னும் பல இடங்களில் செய்கிறார்கள்.

இங்கு 21 பிராமணர்கள்தண்ணீரில் நின்று வருணஜெபமும், கட பூஜையும், ஹோமமும், மூன்று நாட்களாகச் செய்கின்றனர். நமக்கு நன்மை வரவேண்டுமானால் நாம் நம் கடமையைச் செய்ய வேண்டும் என்று இந்த பூஜை நடக்கிறது. பூஜை செய்வதில் இருவகை உண்டு.

பலனைக் கருதாமலே பூஜை செய்வது ஒன்று. மற்றது பலன் கருதி செய்யும் பூஜை. பலன் கருதாமலே பூஜை செய்தால் பலனை வேண்டி பூஜை செய்ய வேண்டிய தேவை இருக்காது. எல்லா நன்மையும் தானே கிடைக்கும்.

காமியம் என்பது பலன்வேண்டி செய்வது. நிஷ்காமியம் என்பது பலன் எதிர்பாராமலே செய்வது. மனிதர்களாகிய நாம் அறிவில் குறை உடையவர்கள். அதனால் கடமையை மறந்து விடுகிறோம். அதை நினைவுபடுத்த சிறு தண்டனை கொடுத்தால் தான் திருந்துவோம்.

உயிர விரும்புகிறோம். ஆனால் நம் கடமையை மறந்து விடுகிறோம். நல்லார் ஒருவர் உளரெனின் அவர் பொருட்டு

எல்லாருக்கும் மழை பெய்யும் என்று யாராவது ஒருவர் நல்ல வராக இருப்பார். அவருக்காக மழை பெய்யும். ஆகவே நாம் தவறு செய்யலாம் என்று நினைத்து ஒவ்வொருவரும் தவறு செய்கிறோம். ஒரு அரசன் இருந்தானும் அவன் ஆயிரம் பேர் பால் கொண்டு வந்து ஒரு பாத்திரத்தில் ஊற்றும்படி கூறினனும் ஆயிரம் பேர் பால் ஊற்றும்போது நாம் ஒருவர் மட்டும் தண்ணீரை ஊற்றினல் தெரியவா போகிறது என்று ஆயிரம் பேருமே தண்ணீரை ஊற்றினர்களாம். அதுபோல் நினைத்து எல்லோருமே தவறு செய்கிறார்கள். இங்கு ஓமம் செய்ததற்கு பலன் இருக்கிறது. இதுமட்டும் போதாது. நாம் திருந்தி நடக்க வேண்டும். கடப்பாறையை விழுங்கிவிட்டு சுக்குக் காஷயம் சாப்பிட்டால் போதாது. தவறு செய்யவே மாட்டோம் என்று எல்லோரும் சபதம் எடுத்துக் கொண்டால் 10 நிமிடத்தில் மழை வரும்.

நம்மை திருத்தத்தான் இது போன்ற நிலைமைகள் எல்லாம் வருகின்றன.

நாம் முறையாக நடக்கத் துவங்கினல் மழை தானே வரும். அரசியல்வாதிகளுக்கு நாட்டைப்பற்றிக் கவலை இல்லை.

ஓட்டைத்தான்பார்க்கிருர்கள். திருக்கடையூரில்தான்செய்த தவறை உணர்ந்து எமதர்மன்பூஜை செய்ததால்தான் தருமபுரம் என்று ஆயிற்று. அப்படிப்பட்ட தர்மனே தவறி விட்டான் இந்த நாட்டில் மனிதர்கள் அடியார்களாகி, ஞானிகளாகி, ரிஷிகளாக வேண்டும்.

மரம் வளர்க்க வேண்டும். நீங்கள் எந்த அளவுக்கு நன்மை செய்கிறீர்களோ அந்த அளவுக்கு நன்மை அடைவீர்கள். எந்த அளவு தீமை செய்கிறீர்களோ அந்த அளவுக்கு துன்பமடைவீர்கள். மக்களும் சரியாக இல்லை. ரயிலும் தண்டவாளமும் சரியாக இருந்தால்தான் ரயில் ஓடும். இல்லாவிட்டால் ஓட்டம் நின்றுவிடும். அதுபோல் ஒன்றும் சரியாக இல்லை. அவ்வாறு சுவாமிகள் குறிப்பிட்டார்.

வேத விற்பன்னர்களுக்கு சம்பாவனை வழங்கினர். முன்னதாக பஞ்சு சாஸ்திரிகள் வரவேற்றார்

நன்றி. —தினமலர் மே – 3.

<u>கடிதங்கள்</u>

19 - Gin Street,
19—4—83.

ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் பொன்னார்திருவடிகளுக்கு, எங்கள் அன்புவணக்கங்கள். இன்று அஞ்சல்வழியின் வாயிலாக ஞானசம்பந்தம் கிடைக்கப்பெற்றோம். 3—4—1983 ஞாயிறன்று தாங்கள் செய்த அருள் உபதேசத்தை படித்து இன்புற்றோம். அன்று காலை நாங்கள் தருமபுரம் திருமடத்தில் இருந்தும் 10 மணி அளவில் உபதேச மொழிகளை கேட்பதற்கு முடியாமல் அவசரமாக சென்னை வரவேண்டி இருந்தமைக்கு மிகவும் வருந்தினோம். ஆனாலும் தங்களை அன்று தரிசிக்கும் படியான பாக்கியம் கிடைத்ததை எண்ணிப் பரவசமடைந்தோம். எங்களுக்கு பாக்கியம் கிடைக்கும்போது குரு அருளின் உபதேச மொழிகளை கேட்போம். ஆனாலும் ஒவ்வொருமாதமும் ஞானசம்பந்தம் மூலமாக அந்த இன்பத்தைப் பெறுவோம்.

இளையான்குடிமாற நாயனார் வரலாறு பற்றிய கருத்து எங்களைப் போன்ற இல்லறத்தார்களுக்கு மிகவும் முக்கியமான உபதேசமாகும். நாங்கள் அவரைப்போல் அறுசுவை உண்டி அளிக்க முடியாது எனினும், எங்களால் இயன்ற அளவு அடியார்களுக்கு அமுது செய்து போடும்படியான பூர்ணமான சக்தியையும், எண்ணத்தையும் எங்கள் வாழ்நாள் பூராவும் ஏற்படுத்தி தரவேண்டி, அந்த ஆண்டவனை வேண்டி, குருமகா சந்நிதானத்தின் பாதகமலங்களில் எங்கள் மனப்பூர்வமான வணக்கங்களைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். குருவருள் கூட்டுவிக்கும்போது நேரில் கேட்கும்படியான பாக்கியம் கிடைக்கப்பெறுவோம்.

சென்னை வாசிகளாகிய எங்களுக்கு, வெகுதொலைவில் இருக்கும் செல்வமுத்துக்குமரனுடைய பிரசாதமும், சங்காபிஷேகப் பிரசாதமும் எளிய முறையில் இங்கேயே கிடைக்கப் பெறுகிறோமோ, அதே மாதிரி குருமகாசந்நிதானத்தின் அருள் உபதேசத்தையும் ஞானசம்பந்தம்வாயிலாக நாங்கள் இருக்கும் இடத்திலேயே படித்துக் கேட்கச் செய்ததை எண்ணிப் பார்க்கும்போது, "என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே" என்ற பாடல்தான் நினைவிற்குவருகின்றது. ஆகவே எங்கள் பணிவான வணக்கங்களை மறுபடியும் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இப்படிக்கு,
**சாவித்திரி ராமமூர்த்தி குடும்பத்தினர்.**

'தமிழ்பேரவைச் செம்மல்'
'தமிழ்மொழிக் காவலர்'
'ஆட்சிச்சொற் காவலர்'
கீ. இராமலிங்கனுர் எம். ஏ.,

" தமிழ் மணம் "
8, கிழக்குப் பூங்காச்சாலை,
செனய் நகர்,
சென்னை 600 030.

இனிக்கும் அன்பின் எந்தை குருபரனுர் அவர்களின் செம்மை சிவணிய சேவடிமலர்களைச் சென்னிசூடி வரைந்து கொள்வது.

1. இம்மாதத்திய நமது "ஞானசம்பந்தம்", இன்று (19—4—83) கைசேர்ந்து களிப்பளித்தது, சுவைப் பொருள்கள் பல படித்துப் பயன்பெற்றேன்.

2 30—3—83ல், திருநெல்லிக்காவலில், குருதேவர் ஆற்றிய ஆசியுரையை ஓதி அகமகிழ்வு பூண்டேன். அறிவியல் கண் மட்டுமே கொண்டு காண்பவர்களுக்குங் கூட, உள்ளத்தில் ஊன்றிப் பதியும் பான்மையில், அறிவுசான்ற செய்திகள், அவ் வுரையில் அழகாக அமைந்து இலங்குகின்றன.

i 'இறைவன்', 'கடவுள்', 'இயவுள்' என்னும் சொற் களில் பொதிந்துள்ள பொருள், விதந்து விளக்கப்பெற்றுள்ளது. எத்திறத்தினரும் ஏற்றுக்கொள்ளற்பால, காட்டுகளும், எவரும் எளிதில் புரிந்துகொள்ளும் இனிய நடையும், அனைவரையும் ஆட்கொள்ளும் தகையன.

ii வாழ்வாங்கு வாழ்வதற்கு, நமது கோயில்களை நாம் பேணிக்காத்துப் பயன்படுத்திக் கொண்டாக வேண்டும், என்னும் உண்மை, விழுமிய வகையில் விரித்துரைக்கப் பெற் றுள்ளது. பெரும்பயன் விளைவிக்கும் பெருந்திருவுரை அது.

3. தலையங்கம் அரியதோர் அவணமாகத் திகழ்கின்றது, அண்மையில், சென்னையில் நடைபெற்ற, கலைவிழாவில், மக்கள் போற்றும், நம் முதலமைச்சர் மாண்புமிகு, எம். ஜி. இராமச்சந்திரன் அவர்களின், 'இந்து' (இந்தியப்) பண்பாட் டிற்கு அரண் அமைத்து விளம்பியுள்ள அரிய செய்தியைப் பதிவுசெய்து வைத்துள்ள பாங்குடையது அது. "இன வேறுபாடு கூடாது என்னும், வெறும் வாய்ப்பேச்சு போதாது, உண்மையாகவே, அதனைக் களைந்து எறியும் செயல்திட்டம் வேண்டும்" "கோயிலின் உடமைகள் உயிரினை மேன்மையுறச் செய்வதற்கே பயன்படுத்தப் படவேண்டும்" போற்றிச் செய லாக்கவேண்டிய பொருள் பொலிந்த பொன்னுரைகள் இவை.

4. 'நல்ல தமிழ்' என்னும் தலைப்பில் குறிக்கப்பெற்றுள்ள ஆட்சிச்சொற்கள், என் உள்ளத்துக்கு உகந்தனவாகின்றன.

இப்பகுதிக்குத் தொடர்ந்து சிறிது இடம் ஒதுக்கி வருவது இக்காலத்திற்கு ஏற்ற நல்ல தமிழ்ப் பணியாகும். நாட்டுப்புறங்களில், வழக்காற்றிலுள்ள, பொருத்தமான சொற்களைத் திரட்டி வெளியிட்டு வரலாம்.

5. குருபிரானுரின் திருமேனி நலத்தை அவ்வப்போது அறிந்துவரும் அவாவுடையேன். கண்டுசேவிக்கவாய்க்கும்நாள் என்றுவரும் என்று எதிர்நோக்கியிருக்கிறேன். குருபரனுரின் திருவடிகளுக்குப் பல்லாண்டு!

இங்ஙனம்,

அருள் நாடிக்கிடக்கும் அடியவன்,

24—4—83. **கீ. இராமலிங்கம்.**

*

K. V. Krishna Iyer,
Proprietor, Kaliyakudi Lodge.

Mayuram
20—3—83

தருமபுரம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் சமுகத்திற்கு K. V. கிருஷ்ணய்யர் மிகுந்த வணக்கத்துடன் எழுதிக் கொண்ட கடிதம். 19—3—83 சனிக்கிழமையன்று பொள்ளாச்சி திரு. மகாலிங்கம் அவர்கள் மணிவிழா உபசரிப்பு கூட்டத்தில் தாங்கள் அருளிய பேருரையை கேட்கும் பாக்கியம் பெற்றேன். தாங்கள் பேச்சின் மத்தியில்தான் நான் அவிடம் வந்தேன். பாமரர்களும் படித்தவர்களும் நன்கு புரிந்துகொள்ளும்படி தாங்கள் மிக உயர்ந்த தத்துவங்களை எளிய சொற்கள் மூலம் மனதில் பதியும் வண்ணம் உபதேசித்தீர்கள். மரம் பயிர் செய்வது உள்பட எல்லா காரியங்களையுமே லாப நோக்கோடு பார்க்காமல், மற்ற ஜீவராசிகளுக்கும் உதவும்படியான காரியங்களைச் செய்யவேணுமென்ற உயர்ந்தகருத்தை நன்கு உணர்த்தினீர்கள். சாலை ஓரங்களில் தென்னைக்குப் பதில் ஆலமரம் வளர்த்தால் மக்களுக்கு நிழலும் ஆரோக்யமும் கிடைப்பதோடு காக்கை முதலிய ஜீவராசிகளுக்கு ஆகாரமும் கிடைக்கிறது என்ற கருத்து என்னை மிகவும் கவர்ந்தது. இவ்விதமே அன்று தங்கள் உபதேசமொழிகள் எல்லாமே என்னை பரவசமடையச் செய்தன. இந்த கடிதம் மூலம் என் நன்றியையும் வணக்கத்தையும் தங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன். தாங்கள் இவ்விதம் பொது நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு அருளுரை வழங்குவதன் மூலம் ஏராளமான மக்கள் நல்வழிக்கு திரும்பி விடுவார்கள் என்று நிச்சயமாக நம்புகிறேன்.

தங்கள் உண்மையுள்ள'

**K. V. கிருஷ்ணன்.**

# அருள்மிகு சபாநாயகர் (ஸ்ரீ நடராஜா) கோயில்

## திருப்பணி கமிட்டி, சிதம்பரம்.

## வேண்டுகோள்

---

தென்னுற்காடு மாவட்டம், சிதம்பரம் வட்டம், சிதம்பரம் நகர் அருள்மிகு சபாநாயகர் (ஸ்ரீ நடராஜா) கோயில் பல்வேறு திருப்பணி மற்றும் கட்டுமான வேலைகளுக்கு பொது தீட்சதர்களின் தீர்மானப்படி ரூ. 39, 45, 690/- மதிப்பீட்டின்பேரில். கிழக்கு, வடக்கு, தெற்கு. மேற்கு ராஜகோபுரங்கள், ஆயிரங் கால்மண்டபம், வெளிதிருமதில், உள்திருமதில், அம்மன் திருக்கோயில், திருமாளிகைப்பத்தி மண்டபம், நூற்றுக்கால் மண்டபம், தேர்மண்டபம், வடக்கு, கிழக்கு மணிமண்டபம், வடிகால் அமைத்தல், மின் இணைப்பு முதலிய பல்வேறு திருப்பணிகள் நடத்துவதற்கு இந்து அறநிலைய ஆட்சித்துறை நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, அரசுமான்யமாக இது வரையில் ரூ. 9, 50. 000/- ம், ஆணையர் பொதுநல நிதியிலிருந்து ரூ. 20, 000/- அபிஷியல் டிரஸ்டியிலிருந்து ரூ. 15, 000/-ம் பிற ஆலய உதவிநிதி ரூ. 4, 75, 000/-ம் பொதுமக்கள் நன்கொடை ரூ. 14, 73, 694—03 ம் பெற்று, இதுவரையில் ரூ. 28, 66, 977—12 செலவு செய்து கிழக்கு, வடக்கு, தெற்கு, மேற்கு இராஜ கோபுரங்கள் திருப்பணி, வடிகால் திட்டம், அம்மன் கோயில், திருமாளிகைப்பத்தி, நடவானப்பந்தல், தளவரிசை, கொடி மண்டபம் கட்டுதல் முதலிய பல்வேறு திருப்பணி வேலைகள் ஆடூர் ரத்தினசபாபதி பிள்ளை டிரஸ்டு மூலமாகவும், நடவானப் பந்தல் அமைத்தல், திரு. வலிவலம் தேசிகர் அவர்கள் மூலமா கவும், முகப்பு மண்டபம் சிவகாமி மகளிர் மன்றத்தாரும் திருமூலநாதர், அம்மன் கோயில் உதவுசுவர், துர்க்கை அம்மன் அகிலாண்டேஸ்வரிகோயில் திருப்பணி, மதுரை கருமுத்து. சொக்கலிங்கம் செட்டியார் அவர்களாலும், முக்குறுணி விநாயகர் கோயில் திருப்பணி திரு. பொன்னம்பலம் பிள்ளை அவர்களாலும், மீனுட்சி சுந்தரேஸ்வரர் கோயில் திருப்பணி

திரு. சுப்பராயப் பிள்ளை அவர்களாலும், திருமூல விநாயகர் திருப்பணி தமிழ்நாடு கூட்டுறவு வங்கி ஊழியர்களாலும், திருப்பணி செய்து முடிவடைந்துள்ளன. பாண்டியநாயகம் சன்னதி, நவலிங்க சன்னதி திருப்பணி திரு. பாலசுப்ரமணிய செட்டியாரும் அவர்கள் சகோதரர்களாலும், நால்வர் சன்னதி தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களாலும், ஆயிரங்கால் மண்டபத் திருப்பணி ஆடூர் ரத்தினசபாபதி பிள்ளை டிரஸ்டாலும் நடந்து வருகின்றன.

மேலும் வெளி திருமதில், உள்திருமதில், நூற்றுக்கால் மண்டபம் சிவகங்கை சுற்றுபுறக் கோயில்கள், மூன்று பக்கங் களிலும் கிராதிகள் அமைத்தல், பேரம்பலம், நிர்த்தன சபை, தேர் பாதுகாப்பு, கிழக்கு, வடக்கு மணிமண்டபம், மடப்பள்ளி, பிரகாரம் தளவரிசை, மின் இணைப்பு பொருத்தல் முதலிய பல திருப்பணிகளை தொடர்ந்து நடத்த நிதி தேவைப்படுகிறது.

1975 ம் ஆண்டில் திருப்பணி வேலைகள் ஆரம்பித்து சென்ற ஏழு ஆண்டுகளாக தொடர்ந்து நடந்துவருகின்றன. திருப்பணி வேலைகளை 1984ம் ஆண்டுக்குள் முடித்து மகா கும்பாபிஷேகம் நடக்க இருக்கிறபடியால் அன்பர்கள் அனைவரும் மனமுவந்து தங்களால் இயன்ற பொருளுதவி கொடுத்து ஸ்ரீமத் நடராஜ மூர்த்தியின் திருவருளைப் பெற வேண்டிக் கொள்கிறோம்.

இத்திருக்கோயிலுக்கு செலுத்தப்படும் நன்கொடைக்கு, வருமானவரியிலிருந்து இந்திய அரசாங்கத்தாரால் விலக்கு அளிக்கப்பட்டிருக்கிறது.

**நன்கொடை அனுப்பவேண்டிய முகவரி :-**

1. திரு. ஜி. வாகீசம் பிள்ளை,
செயலாளர்,
அருள்மிகு சபாநாயகர் ( ஸ்ரீ நடராஜா ) கோயில்
திருப்பணி கமிட்டி,
99, கனகசபை நகர், சிதம்பரம் 608 001.

2. திரு. ஆர். பாலசுப்ரமணிய செட்டியார்,
பொருளாளர்,
அருள்மிகு சபாநாயகர் ( ஸ்ரீ நடராஜா ) கோயில்
திருப்பணி கமிட்டி, ஸ்ரீ நடராஜா ஜுவல்லரி மார்ட்,
கடைத்தெரு, சிதம்பரம் 608 001.

உ

# எதிர்காலம்

★


**ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்**

ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்.


(ருத்ரோத்காரிஞு வைகாசிமீ 1உ முதல் 31உ முடிய)

(15—5—1983 முதல் 14—6—1983 முடிய)

| | | | |
|---|---|---|---|
| ல/ | பு | சூ செ சந் | சுக் ரா |
| | இராசி | | |
| | | | |
| கே | கு | சனி | |

| | | | |
|---|---|---|---|
| | கே | | |
| ல/ செ | அம்ஸம் | | பு |
| சூ சு | | | |
| | கு | ரா சனி | சந் |

ஸ்ரீ ருத்ரோத்காரிஞு சித்திரைமீ 31உ ஸ்திரவாரம் மிருக சிர்ஷ நக்ஷத்திரம் தைதுலை கரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 54 நாழிகை 36 வினுடிக்கு மீனலக்கினத்தில் ஸ்ரீ லோகரட்சகரான சூரியபகவான் லோக சுபிட்சார்த்தத்தை முன்னிட்டு மேஷராசியிலிருந்து ரிஷபராசி சங்கிரமணமாக வைகாசி மாதப் பிரவேசம் செய்தருளுகின்றார். மறுதினம் வைகாசி மீ 1 உ பானுவாரம் விஷ்ணு புண்ணிய காலமாகும் சங்கிரமண காலகிரகஸ்திதியின் பலனுவது லோகில் எங்கும் சுபிட்சம் நிலவும். சர்வேஸ்வரனுடைய அருளில் அனைத்து மாந்தர் ஜீவன்களுக்கும் உய்வு ஏற்படும். கால் நடைகளில் கௌமாரியால் க்ஷீணம்காணும். ஆன்றோர்களால் தேசங்களில் ஆங்காங்கு வறட்சி நிவாரணங்களுக்கான பணிகள் தெய்வ புண்ணியகாரியங்கள் நடைபெற்றுவரும். தேசங்களில் பொது நல சேவாகர்த்தர்களால் நீர்பாசனத்திற்கான முன்னேடித்

திட்டங்கள்பலஏற்பட்டுச்செயல்படும். தேசங்களில் மன்னர்கள் ஆளுநர்கள் நீதியாகச் செங்கோல் ஆட்சிசெய்து பிரஜைகளை இரட்சிப்பார்கள்.

உலகில் உள்ள திருமடங்கள் சர்வேஸ்வரனின் அருளினல் பரமாசாரிய சுவாமிகளாகவந்து சிவனருளில் பிரகாசிக்கின்ற சிவஞான குருமகா சந்நிதானங்கள் லோகம்நீடிக்க கர்த்தாவாகி திருவருள் பாலிப்பார்கள். சமூகஇளையோர்கள். சிவசமய ஆசார விதிமுறைகளை பயின்றுவர திருவருள் பிரசாதம் வழங்குவர். சாஸ்திரம், கலாச்சாரம், தெய்வசிந்தனை, தெய்வபிராத்தனையால் வருகிறசுபிட்சம் ஆகிய நல்விஷயங்களை எடுத்தியம்பி பிரஜைகளுக்கு அனுக்கிரகம் செய்தருள்வார்கள் தேசங்களின் நித்தியம் ஆறுகால பூஜைகள் விசேஷ வசந்தோர்ச்சவங்கள் க்ஷேத்திர ஐதீகங்களின்படி சிறப்பாக நடைபெறும்.

## சூரிய கிரஹணம்

குறிப்பு :- ருத்ரோத்காரிஹு வைகாசிமீ 28உ (11-6-83) சனிக்கிழமையன்று அமாவாஸ்யை, மிருகசிர்ஷ நக்ஷத்திர இராகுகிரஸ்த கிருஷ்ணவர்ணம் கௌபேரபர்வா. இது தென்னிந்தியாவில் கீழ்குறிப்பிட்ட இடங்களில் குறிப்பிட்டுள்ளபடி தெரியும்.

### இது இந்தியன் ஸ்டான்டர்ட் மணிப்படி

| | ஸ்பர்ஸகாலம் மணி - நிமி | மத்தியகாலம் மணி - நிமி | மோட்சகாலம் மணி - நிமி |
|---|---|---|---|
| திருவனந்தபுரம் | 8 — 51 | 9 — 07 | 9 — 23 |
| இராமேஸ்வரம் | 8 — 49 | 9 — 11 | 9 — 33 |
| மதுரை | 9 — 04 | 9 — 10 | 9 — 16 |
| நாகப்பட்டினம் | 9 — 02 | 9 — 13 | 9 — 25 |

கிரஹணம் தெரியும் இடங்களில் மட்டும் புண்யகாலம் உண்டு. மோக்ஷத்திற்குப்பின் ஸ்நானம் செய்து பிறகு போஜனமும் பிரதமைதிதி சிராத்தமும் செய்ய வேண்டியது. உரோகிணி, மிருகசீரிஷம், திருவாதிரை, சித்திரை, அவிட்ட நக்ஷத்திரங்களில் பிறந்தவர்கள் சாந்தி செய்து கொள்க.

1. மேஷம் :- அசுவதி - பரணி. கார்த்திகை - $\frac{1}{4}$

( சு. சே. சோ. லா. - லி. லு. லே. லோ. - அ. )

மேஷராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் கெடியாக வரும். நல்ல காரியங்களில் அதிக செலவும் ஆகும். நல்ல வசனம், பிறருக்கு உறுதி வாக்களித்தல் அதன்படி செய்தல் ஆகும். மே 31௳ க்கு மேல் சில நன்மைகள் ஏற்படும். எல்லா காரியங்களும் குறிப்பிட்டபடி நடக்கும். தோப்பு வனங்களில் நல்லன ஏற்படும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். மே 15, 16, 17, 22, 23, 24, 25, 31, ஜுன் 1, 2, 3, 4, 7, 8, 9, 12, 13, தேதிகள் விசேஷ நன்மைகள் ஏற்படும். மே 26, 27, 28, தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

2. ரிஷபம் :- கார்த்திகை $\frac{3}{4}$ - உரோகிணி - மிருகசீர்ஷம் $\frac{1}{2}$

( இ ஊ. ஏ. - ஒ. வ. வி. வு. - வே. வோ. )

ரிஷபராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் தனவருமானங்கள் தக்க சமயத்தில் கணிசமாக வரும். நெருக்கடியாக அவசிய செலவினங்களும் ஏற்படச் செய்யும். ஆபரணங்களின் பிராப்தியையளிக்கும். புத்திரர் புத்திரிகளுக்கு நல்லன ஏற்படும். தாம்பத்தியவாழ்வில் சுமுகம் நிலவும். மே 17, 18, 19, 24, 25, 26, 27, ஜுன் 2, 3, 4, 5, 10, 11, 14, தேதிகள் தனுதாயதி நற்பலன்களை அளிக்கும். மே 28, 29, 30, தேதிகளில் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

3. மிதுனம் :- மிருகசீர்ஷம் $\frac{1}{2}$ - திருவாதிரை - புனர்பூசம் $\frac{3}{4}$

( கா. கி. - கு. க. ஸ. ச்சா. - கே. கோ. ஹ. )

மிதுனராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். பண வருமானங்களில் நல்ல ஸ்திதியை ஏற்படுத்திவரும். சகோதரர் சகோதரிகள், நலனில் சம்பிரதாய சுப விசேஷங்களில் அவசிய செலவும் ஏற்படும். ஜுன் 5 தேதி முதல் வீடு வாகனங்களில் நல் சௌகரியங்களும். பண ஆதாயங்களும் தரும். தாரபுத்திரர் களின் சுகம் நன்ருக இருந்து வரும். மே 15, 16, 19, 20, 21, 26, 27, 28, 29, 30 ஜுன் 5, 6, 7, 8, 9, 12, 13, தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும் மே 31 ஜுன் 1, 2 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

( ஹி. - ஹு. ஹே. ஹோ. ட. - டி. டு. டே. டோ. )

கடகராசி 9 பாதங்களும் சுபமான பலனைத்தரும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானங்கள் பலவிதங்களில் வரச் செய்யும். இரத்தின பரீக்ஷைசெய்தல் இரசவாதம் போன்ற அபூர்வ விஷயங்களில் சிந்தை செல்லும். அரச கண்யம் தரும். நல்லோர் பிரபலஸ்தர் சந்திப்பு அளவளாவல் ஆகிய மகிழ்ச்சி தரும் சம்பவங்களை உண்டுபண்ணும். எல்லாகாரியங்களும் நன் முறையில் நடந்துவரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம்நன்ருக இருந்துவரும். மே 17, 18, 19, 22, 23, 29, 30, 31 ஜுன் 1, 7, 8, 9, 10, 11, 14, தேதிகளில் தனுதாயம், அரசாங்கத்திலிருந்து நற் செய்திவருதல், சுபம் ஏற்படுதல் ஆகும். ஜுன் 2, 3, 4, தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

( ம. மி. மு. மே. - மோ. ட. டி. டு. - டே.)

சிம்மராசி 9 பாதங்களும் சுபபலனுக நடக்கும். பணவருமா னங்களில் நல்ல ஸ்திதியை ஏற்படுத்தும். மனோபலத்தில் எல்லா காரியங்களையும் நடத்தும். வீடு வாகனங்களில் சீர்திருத்தம் ஏற்படும். புத்திரர் புத்திரிகளுக்கு சுபம் ஏற்படும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம்நிலவும். மே 15, 16, 17, 20, 21, 24, 25, 31 ஜுன் 1, 2, 3, 4, 10, 11, 12, 13 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களை யளிக்கும். ஜுன் 5, 6 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதி களில் மத்திமபலன் தரும்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

( டோ. ப. பி. - பு. ஷ. ண. ட. - பே. போ. )

கன்னியாராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் நல்ல பணவருமானங்களை ஏற்படுத்தி வரும். பூஷணங்களின் பிராப்தியை தரும். நல்ல புத்தி சாதுரியம் தரும். வித்தியாவியாபாராதிக்கலைத்துறைகளில்நல்லனஏற்படும் வீடுவாகனங்களில் நல்ல அனுபோகம் இருந்துவரும். தாரபுத் திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும். மே 15, 16, 17, 18, 19, 22, 23, 26, 27, 28 ஜுன் 3, 4, 5, 6, 12, 13, 14, தேதிகளில் தனுதாயம், காரிய ஜெயம். சுப நிகழ்ச்சி ஏற்படும். ஜுன் 7, 8, 9 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

7. துலாம்:- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

(ர. ரி. - ரு. ரே. ரோ. தா. - தி. து. தே.)

துலாராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். நல்ல பணவருமானம் தரும். இராசிக்கு ஓர் விபத்து ஏற்பட்டு உடன் தப்பும். பிதா அல்லது சிறிய தந்தைக்கு வாயுபீடிதம் ஏற்பட்டு ஜுன் 4 உ அளவில் குணமாகும். வித்யா வியாபாராதிகளில் கலைத்துறையில் மேன்மைஸ்திதியாகும் உத்யோகத்தில் உயர் வளிக்கும் தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றுக இருந்துவரும் மே 17, 18, 19, 20, 21, 29, 30 ஜுன் 5, 6, 7, 8, 9, 14 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். ஜுன் 10, 11, தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை.

(தோ. - ந. நி. நு. நே. - நோ. ய. யி. யு.)

விருச்சிகராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்பாபிவிருத்தியில் பணவருமானங்களில் நல்ல ஸதிதியை ஏற்படுத்தி வரும். சகோதரர் மாதா இவர்கள் நலனில் நற்காரி யங்களைச் செய்தல் ஆகும். நீர், இயந்திர சாதனங்களினுல் செலவுடன் நன்மை ஏற்படும். மே 31 உ முதற்கொண்டு வாகன பிராப்தியில் கால் நடைகளில் நல்லன ஏற்படும். விடுமனை களில் நல்லன வரும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றுக இருந்து வரும். மே 20, 21, 22, 23, 26, 27, 28, 31 ஜுன் 1, 2, 7, 8, 9, 10, 11 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். ஜுன் 12, 13 தேதிகள் சந்திராஷ்டமம் மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

(யே, யோ. பா. பி. - பு. த. ப. ட. - பே.)

தனுர்ராசி 9 பாதங்களும் சுபபலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் நல்ல பண வருமானத்தை ஏற்படுத்தும். சகோ தரருக்கு மேன்மைஸ்திதி ஏற்படும். வீடுவாகனங்களில் நல்ல சௌகரியம் தரும். வித்தியா வியாபாராதிகளில் கலைதுறையில் ஜுன் 4 உ முதல் விசேஷ பயன்களை தந்துகொண்டிருக்கும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்றுக இருந்து வரும். எல்லா காரியங்களும் ஜெய பிராப்தியாக நடந்து வரும். மே 15, 16, 22, 23, 24, 25, 29, 30 ஜுன் 3, 4, 10, 11, 12, 13 தேதிகளில் தனு தாயாதி நற்பலன்களையளிக்கும். மே 18, 19 ஜுன் 14 இத் தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன்தரும்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½
( போ. ஜ. ஜி. - கி. கு. கே. கோ. - கா. கி. )

மகரராசி 9 பாதங்களும் மிச்சிர பலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் நல்ல பணவரவுகள் வந்துகொண்டிருக்கும். இரும்பு இயந்திர சாதனங்களில் விருத்தி பலன் ஏற்படும். வித்தியா வியாபாராதிகலைத்துறைகளில் பிரசித்தம்தரும். ஞாயிற்றுக் கிழமை சூரியார்ச்சனைசெய்ய, வயிற்றில் அழற்சி போன்ற நலிவுகள் நீங்கும். தாம்பத்திய வாழ்வில் சுமுகம் நிலவும் மே 15, 16 17, 18, 19, 24, 25, 26, 27, 28, 31 ஜுன் 1, 2, 5, 6, 10, 12, 13, 14 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும் மே 20, 21 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன்தரும்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾
( கு. கே, - கோ. ஸ. ஸி. ஸு. - ஸே. ஸோ. தா. )

கும்பராசி 9 பாதங்களும் மிச்சிரபலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பணவருமானம் வரும். நெருங்கிய உறவினர் ஒருவர் மனவேறுபாட்டினுல் விலகுவர். வித்தியா வியாபாராதிகள்கலைத்துறையில் ஜுன் 4உ முதல்நன்மைகளைஏற்படுத்தி வரும். வீடு வாகனங்களில் நவீனம்ஏற்படும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்துவரும் மே 17, 18, 19, 20, 21, 26, 27, 28, 29, 30 ஜுன்3, 4, 7, 8, 9, 14 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். மே 22, 23 தேதிகள் சந்திராஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திமபலன் தரும்.

12. மீனம்:- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.
( தி. - து. ஸ. ச. த. - தே. தோ. ச. சி. )

மீனராசி 9 பாதங்களும் சுபபலனுக நடக்கும். குடும்ப அபிவிருத்தியில் பண வருமானம் அரச கண்யத்தில் வந்துகொண்டிருக்கும். எழுத்து, கணிதம், விஞ்ஞானத்தில் உயர்ந்த ஸ்திதியாகும். மனேபலத்தினுல் எல்லாகாரியங்களையும் நடத்தி வரும். வீடு வாகனம் இவற்றில் மே 31 முதல் நல்ல சௌகரியம் தரும். நீர் இயந்திரசாதனம் அமைத்தல் நவீன பொருள்களின் அனுபோக பிராப்தி ஆகுதல் ஆகும். தாரபுத்திரர்களின் சௌக்கியம் நன்ருக இருந்து வரும். மே 19, 20, 21, 22, 23, 29, 30, 31, ஜுன் 1, 2, 5, 6, 10, 11 தேதிகளில் தனுதாயாதி நற்பலன்களையளிக்கும். மே 24, 25, தேதிகள் சந்திரரஷ்டமம். மற்ற தேதிகளில் மத்திம பலன் தரும்.

# நீறு பெற வாரீர்!

வித்துவான் திரு, கா. ம. கண்ணப்பன் எம். ஏ.,

[தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் 1—5—1983 ஞாயிற்றுக்கிழமையன்று உபதேசித்தக்கருத்துக்களையொட்டிஎழுதப்பெற்ற கட்டுரை.]

மே முதல் தேதி! அன்றுமுதல் ஞாயிறு தொழிலாளர்தினம். அடியேனைப் பொறுத்தவரை அது தொண்டர்தினம்!

கோயில் மணி ஒலித்தது! நாதசுர இசை...........கெட்டி மேளம்.........திருக்கோயிலில் தீபாராதனை!

ஸ்ரீ ஞானபுரீசர்திருக்கோயிலில் வழிபாடுமுடிந்தது. அடுத்து அருள்மிகு துர்க்காம்பிகை திருக்கோயிலில்வழிபாடு. பதினெட்டுக் கரங்களோடு-துர்க்கையாகவும் இலக்குமியாகவும்-அருள் வழங்கும் அன்னையின் சந்நிதியிலே... கோபூஜை கஜபூஜை.

நாள்தோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் காலை வழிபாட்டின் மிகச்சிறந்த அங்கங்கள் இவை!

தருமபுரீசர்திருக்கோயில் வழிபாடுமுடிந்து திருமடத்திற்குத் திரும்பும் நேரத்தில் ஆதீனப்பண்டாரக் கட்டில் பச்சைக் கம்பளங்கள் பரப்பப்பட்டுவிட்டன.

சித்திராசனத்தில் எங்கள் எழில்குரு! செய்ய சடை! அக்கமணி! நீற்றொளி! அருள்ஞானச் சுடராய் இனிய முறுவலோடு......... தம்மை வணங்கி வழிபடும் அன்பர்களுக்குத் திருநீறு அளிக்கின்றார்கள்!

ஆசீர்வாதத்துடன் – ' அன்பர்கள் எல்லா நலமும் பெற்றுச் சிறக்கவேண்டும் ' என்ற நல்லாசியோடு – அவர்கள் அளிக்கின்ற திருநீறு ...... பேயாய்அலைகிறஇந்த மனத்துக்குத்தாயாய் இருந்து அமைதி தருகிறது!

ஓம் சாந்தி!

பிரார்த்தனையுடன் கூட்டு வழிபாடு நிகழ்கிறது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் உபதேசிக்கத் தொடங்குகின்றார்கள்! திருத்தொண்டர் புராணத்தில் மெய்ப்பொருள் நாயனார் வரலாறு.

' இனிய வரலாறு; கேட்போமே! ' – மனத்தில் சர்க்கரைப் பந்தல் அமைத்தேன். அதில்தேன்மாரியும் சேர்ந்துபொழிந்தது. வரலாற்றோடு தத்துவமும் மேற்கோளும் இழைந்து, இயைந்து

வந்தன ! வரலாற்றை மட்டும் கேட்டுவிட்டுப் போகவா திரு மடத்திற்கு வந்தோம் !

"மேல்நிலையில் உள்ள மகான்கள் எல்லாவற்றையும் பிற ருக்குக் கொடுத்துவிட்டுத், தான் ஒன்றும் வைத்துக் கொள் ளாமல் இருப்பார்கள் "

குருநாதரின் உபதேசம் இனித்தது !

" பைத்தியக் காரர்களும் அப்படித்தான் ".

மனம் மயங்கியது !

ஏதோ சித்தாந்தத்தத்துவம் ஒன்றைவிளக்கத்தான் இப்படிப் பலமான அஸ்திவராம் போடுகின்றூர்கள் ! குருவின் திருவடி களில் – மகிழ்ந்து பணிந்து கிடக்கும் அடியேனுக்குப் புரிய வெகுநேரம் ஆகவில்லை.

" உயிர்கள் மூன்று திறத்தன; கேவலம், சகலம், சுத்தம்"

கேவலநிலையில் – இருளுக்குள்ளே இருளாய் – தாழ்ந்த பொருளுடன் – அதாவது ஆணவத்துடன் – தனித்து விளங்கும் உயிர் அஞ்ஞானி.

ஒளியில் ஒளியாய் – தூய்மையான பரம் பொருளோடு – ஒன்றிய – ஞானநிலையில் – மிகவுயர்ந்த நிலையில் – சுத்தநிலையில் உள்ளவர்கள் ஞானிகள். அவர்கள் ஞான தானம் பண்ணு கிறார்கள் !

இரண்டும் கெட்டானுய் – பதி, பாசம் என்றவற்றுள் எந்தப் பொருளைச் சார்கின்றதோ அதன் தன்மையைப் பெற்றுக் – காட்டினுல் காணும் நிலை உடையது. சகலநிலை.

இப்படி விளக்கம் அருளும் போதே, "மேல்நிலையில் உள்ளவர்களைப்பற்றியும் கவலை இல்லை; கீழ் நிலையைப்பற்றியும் கவலை இல்லை. இந்த இரண்டும் கெட்ட சகலரைப் பற்றித்தான் சிந்தித்துப் பெரிதும் நெறிப்படுத்தவேண்டி இருக்கிறது " என்ற தமது ஞான ஆதங்கத்தைக் குறிப்பாக வெளிப்படுத்தினுர்கள். தம் ஞானகுருவும் அந்தப்புனித கைங்கரியத்தைத்தானே இடை யருது புரிந்துவருகின்றூர்கள் !

ஆய்வுள்ளம் தொடர்கின்றது. 'அவன் மிகவும் ஆணவக் காரன்; அவனவன் கர்மாவை அனுபவித்தே ஆகவேண்டும்; அந்த ஆள் மாயையில் சிக்கிக்கிடக்கிருர்' ' அவன் கேவல மானவன் ' – உலகியலிலே சைவ சித்தாந்தக் கலைச்சொற்கள் 'எப்படி ஒட்டி உறவாடுகின்றது என இவ்வாறு எடுத்துக் காட்டினுர்கள்.

'ஆமாம்'என்று அசைபோட்டதுமனம்!" மக்கள்பேச்சோடு ஒன்றியது சைவசமயம்; மக்கள் வாழ்வோடும் அது ஒன்றிநிற்கிறது " என்ற ஆய்வுக்கருத்தை மனத்தில் பதிக்கின்றார்கள்.

அடுத்துத், "தெரிந்த ஒன்றைக் கொண்டு தெரியாத - எளிதில் புரியாத கருத்துக்களை - சமய உண்மைகளை நம்முன்னோர் விளக்கியுள்ளனர்: உவமைகள் வாயிலாக வெளிப்படுத்தினர் '' என்னும் கருத்தினைத் தெளிவித்தார்கள்.

கடவுள் பிரகாச மானவர் - இதை எப்படிப் புரியவைப்பது? சூரியனைப்போலப் பிரகாசமானவர்! ஒரு சூரியனைப்போல...... சொல்லுகிறவருக்கு இன்னும் விளக்கமாக - பொருத்தமாகச் சொல்ல வேண்டும் என்று தோன்றுகிறது.

'பலகோடி சூரியப்பிரகாசன்'-சொல்லி முடிக்கிறார். எப்படி எளிமைப்படுத்தி விளக்கியிருக்கிறார்கள் நம்முன்னோர்கள்! இதுபோலவே பேரின்ப நிலையை விளக்க முற்பட்ட பெரியோர்கள் - மக்களால் அறியப்படுவதும் நுகரப்படுவதும் ஆகிய சிற்றின்பநிலையைக்கொண்டுவிளக்கத்தலைப்பட்டனர். நிலையற்ற சிற்றின்பத்தைக் கொண்டு நிலையான பேரின்பத்தை விளக்கிய திருக்கோவையார், மணிவாசகரால் அருளிச்செய்யப்பெற்றது! இங்ஙனம் அகத்துறை வாயிலாகச் சமயத்துறையை மகாவித்துவான் மீனாட்சி சுந்தரம்பிள்ளையும் விளக்கியுள்ளார்.

சமய, விசேட, நிர்வாண தீட்சைகளை விளக்க முற்படுகிறார் ஆசிரியர். அகப்பொருளில் அரன்பொருளை இயைக்கிறார்!

உற்றார்உறவினர், தோழியர்பாங்கர் முதலியோரைப்பிரிந்து தலைவியும் தலைவனும் தனித்துச் சந்திப்பதற்க்க 'சமயம்' ஆகும். தலைவியின் கையைத் தொடுவது - மெய்தீண்டுவது அந்தச்சந்திப்பின் 'விசேஷம்'. உடலில் பொருந்திய கலையை (ஆடையை) முற்றிலுமாக நீக்குவது 'நிர்வாணம்'. இது அகத்துறையில்!

தான் தனியாகுவது சமய தீட்சை; சற்குரு தன் திருக்கரத்தால் தீண்டித்தம் தூய சக்தியைச் சீடருக்கு அளிப்பது விசேட தீட்சை: கலைக்கட்டுக்களிலிருந்து நெகிழ்விப்பது நிர்வாண தீட்சை - இது சைவ சமயத்துறையில்!

சீகாழிக்கோவையில் இக்கருத்தை விளக்கும். இருபொருள் அமைந்த இனிய பாடல் இதோ:

"சமைய விசேட நிர்வாணம் என்றுநம் சண்பைப்பிரான்
அமைய உரைத்ததுஉணர்ந்தாய் கொல்நீதனி ஆகுவதே
சமையம், நின் அங்கைதொடல் விசேடம்; தரித்த கலை
அமைய நெகிழ்த் திடலே நிர்வாணம் மெய்யாமீதுவே"

இப்படிச் சிறந்த எடுத்துக் காட்டுக்கள் வாயிலாகச் சைவ சித்தாந்தச் செந்நெறியை விளக்கி – அந்நெறியில் வாழ்ந்து காட்டிய – திருநீறு என்னும் சாதனத்தை மெய்ப்பொருளாகக் கொண்டு வாழ்ந்த – மெய்ப்பொருள் நாயனுர் தொண்டு மனத்தை விளக்கியருளினுர்கள்.

சேதிநாட்டுத் திருக்கோவலூர்! அதனை அரசோச்சிய அருளரசர் மெய்ப்பொருளார்! அவர் மலாடர்கோமான்.

உபதேசம் என்ற புண்ணியநதி கிளை ஆருகப்பாய்கிறது. குறிப்புகள் சொல்லும் போதே சேதிநாடு, மலாடர் கோமான் என்ற சொல்பொருள் ஆய்வும் முகிழ்க்கிறது. சோதிராயர் பற்றிய குறிப்பினையும் திருமுனைப்பாடு பற்றிய செய்திகளையும் அருளுகிருர்கள்.

மலைநாடு உடையவர் மலாடர். சேரநாட்டிலிருந்து சேலம் முதலிய மலைப்பகுதி வழியாகத் தமிழ்நாட்டு அகப்பகுதி அடைந்தோர் மலைநாடு உடையார் என வழங்கப் பெற்றனர்.

சோழன் நாடு – சோணுடு என மருவுதல்போல, மலையமான் நாடு – மலாடு என ஆகிறது. மலாடு உடையார் மலாடர் ஆகின்ருர். மலாடர் பின் மிலாடர் என ஆயிற்று என்றும் மலைய மான், நத்தமான். சுருதிமான் என்ற பிரிவினர் உடையார் என்ற இனத்தாரின் பிரிவினர் என்பதையும் மலையமான் என்பார் மலாடர் கோமானின் இனத்தார் ஆகலாம் என்பதையும் ஒப்பிட்டுத் தெளிவித்தார்கள்.

மலாடர் கோமானுகிய மெய்ப்பொருளார் அப்படி என்ன தொண்டுசெய்தார்? 1. அன்போடு சிவனடியாருக்குத் தொண்டு செய்தார். 2. திருநீறு அணிந்தவர்களைச் சிவனுகவே கண்டார். 3. திருக்கோயில் எங்கணும் பூசை சிறப்பாக நீடித்து நடக்க வேண்டும் எனக்கருதி ஆவனசெய்தார். 4. தேடிய செல்வம் முழுதும் மன்றுள் ஆடும் பெருமானது அன்பர்க்கே ஆவன ஆகும் என்று குறைவறக்கொடுத்தார். இவ்வளவு தொண்டு களையும் வழிவழியாக இடையருது செய்தார்.

இப்படி வகைப்படுத்திக் கொண்டு ஒவ்வொன்ருக விவரித் தார்கள்.

"கோயில்களைச் செம்மையாகப் பராமரிக்க வேண்டும்! சிவபூசை முட்டுப்படக் கூடாது" – இந்த இனிய நெறியை நம் முன்னேர்கள் சரிவரச்செயற்படுத்தி வந்தமையால் தான் தேவைக்கேற்ற மழைபெய்தது! மக்கள் நலம் பெற்ருர்கள்; ஆனல் இன்றைய நிலை ...... ? என உபதேசித்து " முன்னவனுர்

கோயில் பூசைகள் முட்டிடின் மன்னர்க்குத் தீங்குறும்; வாரி வளங்குன்றும்" என்ற திருமூலர் சொல்லை ஆதாரமாக்கினார்கள், இதனைச் சிந்தித்துச் செயற்படுவது நம் கடமை.

முத்தநாதன் அடுத்தநாட்டு அரசன். அவன் மெய்ப் பொருளார் புகழ் கண்டான்; பொறாமை கொண்டான்; போரில் வெல்ல முயன்றான்; முயற்சியினால் தோல்வியே கிடைத்தது! வஞ்சத்தால் வெல்லக் கருதினான், தவவேடம் பூண்டான்.

மெய்யெலாம் நீறு பூசினான்; சடைமுடிகள் தரித்துக் கொண்டான்; கையில் புத்தகக்கட்டு. அதனுள்ளே கத்தியை மறைத்து வைத்தான். 'மைபொதி விளக்கே என்ன மனத்தினுள் கறுப்பு வைத்தான்' – இது அவன் பொய்த்தவவேடம்.

அது என்ன மைபொதி விளக்கு! விளக்கின் தொடக்கநிலை கருமை; பின் சிவப்பாக எரிகிறது; வெண்மையாகத் தெரிகிறது. கறுப்பு வெண்மைக்கு ஆதாரம். முத்தநாதனின் கறுப்பு (வஞ்சகம்) அவன் வெண்ணீறுபூச – தவவேடம் கொள்ளக் காரணம் ஆயிற்று – இப்படிச் சீரிய விளக்கம் நல்கினார்கள்.

முத்தநாதன் பொய்த்தவவேடம்கொண்டு திருக்கோவலூரைச் சார்ந்தான்; அரண்மனையுள் நுழைந்தான், தடைபல கடந்தான். அந்தப்புரவாயிலில் தனித்தடையாகநின்ற தத்தன் என்ற நாயனாரின் மெய்க்காவலன் தடுத்தான்; முத்தநாதன் பொருட்படுத்தாமல் உள்ளே நுழைந்தான்; அங்கே ... தேவியார் கதும் என எழுந்தார். கணவரை எழுப்பினார். நாயனார் உறக்கம் நீத்து எழுந்தார்; அடியவரைக்கண்டார்; மகிழ்ந்து வணங்கினார். 'உங்கள் நாயகனார் முன்னம் உரைத்த ஆகமநூல்; மண்மேல் எங்கும் இல்லாதது; இயம்பக்கொண்டுவந்தேன்' என்றான் முத்தநாதன். 'தனி இடத்தில்தான் உபதேசிப்பேன்' என்று நிபந்தனையும் விதித்தான்.

மன்னர் உடன்பட்டார். தேவியாரை அந்தப்புரத்திலே இருக்குமாறு சொல்லித் தனியிடத்தில் ஆகமம் கேட்கும் ஆவலில் சென்றார் நாயனார். முத்தநாதன் புத்தகம் அவிழ்ப்பதைப்போல பாவனை செய்தான். இருக்கையில் அமர்ந்துள்ள தன்னை வணங்கும் நாயனாரைப் புத்தகத்தின் இடையில் மறைத்து வைத்திருந்த கத்தியை எடுத்து..... ...

சேக்கிழாருக்கும் அந்தக் கொடிய செயலை விவரிக்க மனம் வரவில்லை; எங்கள் குருமணியும் அதேநிலையில்–எடுத்துக்கூறத் தயங்கியவாறே "தான்முன் நினைத்த அப்பரிசே செய்ய" (தான் முன்பு என்ன நினைத்து வந்தானோ அதனையேசெய்ய) என்று சேக்கிழார் வாக்கையே அருளினார்கள். ஏன்? கத்தியால் குத்திக் கொன்றார் அல்லது கொல்லமுயன்றார் என்று கூறலாகாதா?

அடியவரைப்பற்றி - இலட்சிய நெறியாளர்களைப்பற்றிச் சொல்லும்போது - அப்படிச் சொல்லலாமா? - நல்லொழுக்கம் பொருந்திய பெரியார் தவறியும் தீயசொல்லார்

"ஒழுக்கம் உடையார்க்கு ஒல்லாவே தீய
வழுக்கியும் வாயால் சொலல்"

என்ற வள்ளுவர் நெறியை ஒப்பிட்டு - சேக்கிழார் தொடரை எங்கள் குருமணி விளக்கிய பாங்கு மெய்சிலிர்க்க வைத்தது.

தத்தன் உள்ளே புகுந்தான்; முத்தநாதனைக்கொல்ல வாளை எறிந்தான். நாயனார் குருதிசோர நின்றார்; நீண்டகையால் தடுத்தார்; "தத்தா! நமர்" என்றார். அதுமட்டுமா? "தவவேடம் கொண்ட இவரை நம்மக்களிடமிருந்து காத்து நம் எல்லை தாண்டி விட்டுவருக" எனப் பணித்தார்; தத்தனும் ஆணைப்படி செய்தான். தத்தன் மீண்டுவந்து செய்தி சொல்லும் வரை நாயனார் ஆவி பிரியவில்லை! ஏன்? எதனால்?

குருமணி விளக்கம் அருளினார்கள். 'உயர்ந்த லட்சியம் இருந்தால் - அந்த லட்சியம் நிறைவேறும்வரை உயிர் பிரியாது' மேலும் சான்றுதருகின்றார்கள். வடக்கிருந்து உயிர்துறக்கும் நிலையிலிருந்த கோப்பெருஞ்சோழனது ஆவி பிரியவில்லை - இப்படி இனிய ஒப்பீட்டைச் சிந்தனைக்கு விருந்தாக்கினார்கள்.

மெய்ப்பொருளார் குத்துப்பட்ட நிலையிலும் - எதிரியின் வஞ்சகத்துக்கு ஆளாகிய நிலையிலும் 'தொழுது வென்ற' மனப் பக்குவத்தையும் தேசபிதா காந்தியடிகள் துப்பாக்கியால் சுடப் பட்டபோது 'ராம் ராம்' என்று கூறிநின்ற மனப்பக்குவத்தையும் ஒப்பிட்டார்கள்.

தத்தன் மீண்டுவந்து செய்தி சொன்னான்; தான் உயிர் துறக்கும் தருணத்திலும் உண்மையான ஊழியனை - அவன் ஊழியத்தைப்-பாராட்டும் நோக்குடன் "இன்று எனக்கு ஐயன் செய்தது யார்செய வல்லார்" என நாயனார் கூறியமையைக் குறிப்பிட்டார்கள். நாயனார் அரசியல் ஆயத்தார், உறவினர் முதலியோர்க்குத் தாம்நின்ற உயர்நெறியை மக்களும் பின்பற்ற வேண்டும் என்னும் நெறியுடன், "பரவிய திருநீற்றன்பு பாது காத்து உய்ப்பீர்" என்றார்.

அருளாளர் காட்டிய அந்த உயர்நெறி இந்த நூற்றாண்டுக் கும் தான்! உலகம் முழுமைக்கும்தான்; எல்லா மக்களுக்கும் தான்!

நீறு அணிவோம்; திருநீற்றினையும் ஞானகுருவின் திருக்கரங் களால், பெற்று அணிவோம். அடுத்தமாதம் முதல் ஞாயிறன்று!

# செய்திகள்

## ஆயில்யத்திருநாள் ஆலய வழிபாடு

திருக்கடவூரில் :

தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் ஆண்டு ஜன்ம நட்சத்திர ஆயில்யத் திருநாள் ஆலயவழிபாடு, திருக்கடவூர் அமிர்தகடேசுவரசுவாமி திருக்கோயிலில் மிருத்யுஞ்சய ஹோமம் ஏகாதச ருத்ரஜபம் முதலியவற்றுடன் 21—4—83 வியாழன் அன்று மூர்த்திக்குச் சகஸ்ரநாமார்ச்சனையும் நடைபெற்றது. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றி ஜன்மநட்சத்திர விழாமலராக 'ஸ்ரீ குருஞான சம்பந்தர் அருள் வரலாறு' என்ற நூலை வெளியிட்டு அன்பர்கட்கு அருட்பிரசாதம்வழங்கி ஆசீர்வதித்தார்கள்.

பிரான்மலையில் :

மாதந்தோறும் நடைபெறும் ஜன்மநட்சத்திர வழிபாட்டு முறையில் பாண்டிய நாட்டு திருக்கொடுங்குன்றம் (பிரான்மலை) திருப்புத்தூர் ஆகிய திருத்தலங்களில் 21—4—83 வியாழனன்று ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றக் கூட்டுவழிபாட்டுடன் நிகழ்வுற்றது. சுவாமி அம்பிகைக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நிகழ்வுற்றன. அன்பர்கள் திருமுறை ஓதித்திருக்கோயில் வலம் வந்தனர். அவ்வத்தலங்களில் தலத்திருப்பதிகப் பாராயணம் நடைபெற்றது. காலை மாலை இருவேளைகளிலும் திரு. கமல தியாகராஜன் வழிபாட்டில் கலந்துகொண்டார்; சமய விரிவுரைகள் நிகழ்வுற்றன. திருக்கொடுங்குன்றம் திருப்புத்தூர்...... திருப்பதிகங்கள் என்ற தலத்திருப்பதிக வெளியீடு அன்பர்கட்கு வழங்கப்பெற்றது. பக்தர்பலர் விழாவிற்கலந்துகொண்டு பயன் பெற்றனர்.

## வசந்த நவராத்திரி விழா

தருமையாதீனம் ஸ்ரீ ஆனந்த பரவசர் பூங்காவில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி அருள் வழங்கும் ஸ்ரீ வனதுர்க்காதேவிக்கு வசந்த நவராத்திரிவிழா 14—4—83 வியாழக் கிழமையன்று தொடங்கிச் சிறப்பாக நடைபெற்றது. இந்நாட்களில் ஸ்ரீ வனதுர்க்காதேவிக்கு உலகநலன் கருதி விசேஷ

அபிஷேக ஆராதனைகளும் நவசக்தி அர்ச்சனை மூலம் லட்சார்ச்சனையும் சப்தசதி, மகாமந்திர அர்ச்சனையும் நிகழ்த்தப்பெற்றன. 21—4—83 வியாழனன்று சப்தசதி பூஜாஹோமமும் 22—4—83 வெள்ளிஇரவு லட்சார்ச்சனைப்பூர்த்தியும்நிகழ்வுற்றன. தேவியின் சந்நிதியில் தேவிமகாத்மியம் அபிராமி அந்தாதி பாராயணங்கள் நடைபெற்றன. இந்நாட்களில் ஸ்ரீலஸ்ரீமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடு ஆற்றி அன்பர்கட்கு அருள் பிரசாதம் வழங்கினார்கள். பக்தர்பலர் வழிபாட்டில் கலந்துகொண்டு பயன்பெற்றனர்.

## ஸ்ரீ உமாபதிதேவர் நாயனார் குருபூஜை

சந்தானகுரவருள் நான்காமவராகிய ஸ்ரீ உமாபதிதேவ நாயனார் குருபூஜைவிழா சித்திரை அஸ்தநாள் கூடிய 25—4—83 திங்களன்று நடைபெற்றது. தருமை ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீசர் திருகோயிலில் எழுந்தருளியுள்ள சமயாசாரியர், சந்தானாசாரியர் களுக்குக் காலை 9 மணியளவில் அபிஷேக ஆராதனைகள் நிகழ்வுற்றன. தருமையாதீனத்தின்சார்பில் சிதம்பரம் கொற்றவன்குடி ஸ்ரீ உமாபதிதேவ நாயனார் திருமடத்தில் பகலில் அபிஷேக ஆராதனைகளும், மாலை 6மணி அளவில் தில்லைத்திருக் கோயிலில் ஸ்ரீ நடராஜப்பெருமானுக்கு சகஸ்ரநாம அர்ச்சனையும் நடைபெற்றன. தருமை ஸ்ரீ ஞானபுரீசர் திருக்கோயிலில் மாலை 7 மணி அளவில் வித்துவான் திரு. மு. கோவிந்தராசன் அவர்கள் 'போற்றிப் பஃறொடை' பற்றியும் வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், எம். ஏ. 'வினா வெண்பாப்' பற்றியும் சொற்பொழிவாற்றினர். பக்தர் பலர் கேட்டுப் பயன் பெற்றனர்

## குருவருளும் அருளுபதேசமும்

ஒவ்வொரு ஆங்கிலமாதத்திலும் முதல் ஞாயிற்றுக்கிழமை அன்று காலை சரியாகப் 10 மணிக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனைக்கூட்டம் தருமையாதீனத் திருமடத்தில் நடைபெற்றுவருகின்றது. இம்மாதம் 1—5—1983 அன்று 24 ஆவது வழிபாட்டுக் கூட்டம் நிகழ்வுற்றது. வழிபாட்டின் போதும் கயிலைமாமுனிவர் ஸ்ரீமத் காசிவாசி சுவாமிகள் கலந்துகொண்டு உபதேசம்கேட்டு மகிழ்ந்தார்கள். வழிபாட்டுக் கூட்டத்தின் முதல்அங்கமாகக்கூட்டுப்பிரார்த்தனை நிகழ்வுற்றது.வழிபாட்டில் கலந்துகொண்ட அறிஞர் திரு. மு. அருணாசலம் அவர்கள் சரித்திரகால சமய நிகழ்வுகள்பற்றிக்கூறித் திருமூலர் கி. பி. 400 முதல் 500 வரையான காலத்தினர் என்றும், அவர் 3000 ஆண்டு வாழ்ந்தார் என்பது, 3000 ஆண்டு வாழ்ந்து அனுபவம் பெற்றால்

தான் இத்தகைய பாடல்களைப் பாடமுடியும் என்னும் கருத்தினது என்றும், சுருக்கமாக எடுத்துரைத்தார். தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் தம் உபதேசத்தின்போது, சைவ சித்தாந்த சாத்திரக் கருத்துக்களை எடுத்து விளக்கி மெய்ப்பொருள் நாயனர் வரலாற்றில் பொதிந்துகிடக்கும் தத்துவங்களை வழங்கியருளினர்கள். "ஒருவருக்குக் குருவாய்ப்பதும் வினைக்கு ஈடாக அமைவதே" என்று கூறித் திருவிளையாடல் புராணம் இந்திரன் பழிதீர்த்த படலத்தின் வரலாற்றை எடுத்துக்கூறிக், குருவிற்குத் தக்க மரியாதை தந்து ஆணைவழி ஒழுகிநடக்க வேண்டும்' என்றும் தக்களடுத்துக்காட்டுகள்மூலம் விளக்கினர்கள் உயிரினும் சிறந்த ஒண்பொருளாம் வழிபாட்டின் பெருமையை விளக்கினர்கள். அருளுபதேசக் கூட்டத்தின் நிறைவில் 'கயிலைமா முனிவர்' ஸ்ரீமத். காசிவாசி சுவாமிகள் தம் உரையில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்படும் ஒருவன் முதலில் தன் செல்வத்தையும், அடுத்துக் குழந்தையையும், அடுத்து மனைவியையும் இறுதியில் உயிரையும் விட்டுவிடத் துணிகிற நிலைமை பற்றிக்கூறிக் குங்குலியக் கலையர், இளையான்குடிமாறர் முதலியோர் சிவனருள்வெள்ளத்தில் மூழ்கித் தம் செல்வம் தந்தோர் எனவும், சிறுத்தொண்டர் தம் மகவினைத்தந்தார் எனவும், இயற்பகையார் மனைவியைத் தந்தவர் எனவும், மெய்ப்பொருள் நாயனர், ஏனதிநாதர் முதலியோர் தம் உயிரையே தந்தனர் என்றும் குருவருளாணை வழி விளக்கினர்கள். மயிலாடுதுறை நகரப் பெருமக்களும் அறிஞர்களும் அன்பர்களும் கலந்துகொண்டு கேட்டுப்பயனுற்றனர்.

அடுத்த அருளுபதேசக் கூட்டம் 5—6—83 அன்று நிகழ்வுற இருக்கிறது. அன்பர்கள் குருவழிபாடாற்றி, உபதேசம் பெற்றுப் பயனுறுவார்களாக.

## ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூஜைவிழா

**தருமபுரத்தில் :**

தருமையாதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் சதயநாள் குருபூஜைவிழா 7—5—83 சனிக்கிழமையன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. காலை சமயாசாரியர், சந்தானசாரியர்களுக்கு விசேஷ அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றன. ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் எழுந்தருளி வழிபாடு ஆற்றினர்கள். இரவு 7 மணியளவில் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில் வித்துவான் திரு. மு. கோவிந்தராசனர் 'திருநாவுக்கரசர் அருள் வரலாறு' பற்றியும், வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,

திருநாவுக்கரசுவரர் 'திருத்தொண்டின் நெறி' என்பது பற்றியும் வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம். ஏ., 'திருநாவுக்கரசர் அற்புத விளக்கங்கள்' பற்றியும் சொற்பொழிவு ஆற்றினர். இரவு ஆதீன ஓதுவா மூர்த்திகளின் பண்ணிசைப் பாராயணத்துடன் திருவீதியுலா நடைபெற்றது.

திருவாமூரில் :

ஸ்ரீ திருநாவுக்கரசு சுவாமிகள் அவதரித்த திருத்தலமாகிய திருவாமூரில் ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜைவிழா, தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் திருவுளப்பாங்கின் வண்ணம் 5, 6, 7—5—83 ஆகிய மூன்று நாள்களிலும் சிதம்பரம் கனகசபைநகர், ஸ்ரீ அப்பர் சுவாமிகள் குருபூஜை விழாக்குழுவினரால் மிகச் சிறப்பாக நடைபெற்றது; திருமுறை இசையரங்கம், கருத்தரங்கம் 'கௌசிகம்' என்ற பண்ணுராய்ச்சி, இசையுரை, வழக்காடுமன்றம், முதலிய பல நிகழ்ச்சிகள் சிறப்பாக அமைந்தன. 7—5—83 சதயநாளன்று ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தில் எழுந்தருளி சிவவழிபாடு ஆற்றினுர்கள். ஸ்ரீதிருநாவுக்கரசு சுவாமிகளுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நிகழ்வுற்றன. திருவையாறு ஸ்ரீ ஐயாறப்பர் கோயில் ஓதுவார் திரு. எம். முருகையா தேசிகர் அவர்களுக்குத் 'திருமுறைக் கலாநிதி' என்னும் பட்டம் வழங்கிப் பொற்கிழி அளித்து ஆசியுரை வழங்கினுர்கள். வழிபாட்டிற்கு வந்திருந்த அன்பர்களுக்கு அருட்பிரசாதம் வழங்கினுர்கள். நண்பகல் மாகேசுவரபூசை நடைபெற்றது. இரவு 10மணியளவில் அப்பர் சுவாமிகள் திருவீதியுலாக் காட்சி, திருமுறைப்பாராயணத்துடன் சிறப்பாக நடைபெற்றது.

## நாயன்மார் குருபூஜைத் திருநாள்

தருமையாதீனம், ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலில், பங்குனி நிறைவு நாளில் 13—4—83 அன்று தொகையடியார்கள் திருநாளும் வருடப்பிறப்பன்று 14—4—83 தில்லைவாழந்தணர் திருநாளும், சித்திரைத் திருவாதிரை 18—4—83 அன்று விறன்மிண்டர் திருநாளும், சித்திரை-சித்திரை 26—4—83 அன்று இசைஞானியார் திருநாளும் சித்திரைச் சுவாதி 22—4—83 அன்று திருக்குறிப்புத் தொண்டர் திருநாளும் சிறப்பாக நடைபெற்றன. குருபூஜைத் திருநாட்களில் ஸ்ரீ நடராஜமூர்த்திக்கு விசேஷ அர்ச்சனை வழிபாடு நிகழ்த்தப் பெற்றது. வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், எம். ஏ., பெரியபுராணம் வாசித்து நாயன்மார் வரலாறு கூறினுர். தேவாரபாடசாலை, ஆகமபாடசாலை ஆசிரியர்களும் மாணவர்களும், அலுவலர்களும் அன்பர்

களும் கலந்துகொண்டு கேட்டுப் பயனுற்றனர். புராண விரிவுரைக்குப்பின் அன்பர்கட்குப் பிரசாதம் வழங்கப்பெற்றது.

*சீகாழியில் :*

தருமையாதீனத்துக்குச்சொந்தமான சீகாழி ஸ்ரீ சட்டைநாத சுவாமி தேவஸ்தானத்தில் 17—4—83 ஞாயிறன்று தொடங்கிச் சித்திரைத்திருவிழா நிகழ்வுற்றது. 18—4—83 இரண்டாம்திருநாள் அன்று திருமுலைப்பால் விழா. அன்று காலை தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் தரிசனத்துக்கு எழுந்தருளி இருந்தார்கள். ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிகள் சிவிகையில் எழுந்தருளியவுடன் அவர்கள் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீகுருமகா சந்நிதானத்தில் சீகாழித்தலப் பெருமை, அருளாளர் தோன்றிய தலங்களில் வாழும்மக்கள், அத்தலத்தை வழிபட்டும் போற்றிக் காத்தும் ஆற்றவேண்டிய கடமைகள் பற்றி அருளி திருமுலைப் பால்விழாத்தத்துவத்தைவிளக்கிஆசியருளினார்கள். குன்றக்குடி திருவண்ணாமலையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் அற்புதவிளக்கச் சொற்பொழிவுகளைத் தொடங்கிவைத்தார்கள். திருச்சுற்று வலம் வரும் போதுஅற்புத விளக்கச் சொற்பொழிவுகள் நடைபெற்றன. முன்னதாக அற்புத விளக்கச் சொற்பொழிவுதொடங்கும்முன் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் குன்றக்குடி ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருக்கரங்களால் திருவாரூர் திரு. மு. திருஞான சம்பந்த தேசிகர் அவர்களுக்குப் பொன்னாடைபோர்த்துவித்துப் பணமுடிப்பும் வழங்கிஆசியருளினார்கள். திருவிழா நாட்களில் மாலையில் கருத்தரங்கம், பட்டி மன்றம், வழக்காடுமன்றம், கவியரங்கம், பொம்மலாட்டம், திருமுறைவிழா முதலிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

*திருக்கடவூரில் :*

தருமை ஆதீனத்திற்குச் சொந்தமான திருக்கடவூர் ஸ்ரீ அமிர்த கடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் 17—4—83 ஞாயிறன்று தொடங்கிச் சித்திரைப் பெருவிழா நடைபெற்றது. 22—4—83 கால சம்ஹாரத்திருநாள் அன்று தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் எழுந்தருளி வழிபாடாற்றி அன்பர்களுக்குப் பிரசாதம் வழங்கியருளினார்கள். விழாநாள் களில் சொற்பொழிவுகளும், திருமுறை விழாவும், பொம்மலாட்டமும் நிகழ்வுற்றன.

*திருப்பனந்தாளில் :*

தருமையாதீனத்திற்குச் சொந்தமான திருப்பனந்தாள் ஸ்ரீ அருணஜடேசுவர சுவாமி தேவஸ்தானத்தில் 17—4—83 ஞாயிறு தொடங்கிச் சித்திரைப் பெருவிழா மிகச்சிறப்பாகநடை

பெற்றது. விழா நாள்களில் சொற்பொழிவுகள், பொம்மலாட்டம் இன்னிசை நிகழ்ச்சிகள் ஆகியன நிகழ்வுற்றன. அன்பர்பலர் சுவாமிதரிசனம் செய்தும் நிகழ்ச்சிகளில் பங்குகொண்டும் பயனுற்றனர்.

திருவையாற்றில் :

தருமையாதீனத்திற்குச்சொந்தமான திருவையாறு ஸ்ரீ ஐயாறப்பர் திருக்கோவிலில் சித்திரைப்பெருவிழா 17—4—83 ஞாயிறன்று தொடங்கி நடைபெற்றது. தன்னைத்தான் அருச்சித்தல், சகோபுரக்காட்சி, ஏழூர்வலம் வரல் முதலிய விசேஷத்திருநாட்கள் நிகழ்வுற்றன. உற்சவ நாட்களில் சமய விரிவுரைகள் நிகழ்வுற்றன. அன்பர் பலர் இறைவழிபாடு ஆற்றியும் சொற்பொழிவுகளைக் கேட்டும் பயனுற்றனர்.

## சீகாழி ஸ்ரீ முத்துச்சட்டைநாதருக்குச் சிறப்பு வழிபாடு

தருமையாதீனத்திற்குச் சொந்தமான சீகாழி சட்டைநாத சுவாமிக்குச் சிறப்பு வழிபாடு 6—5—83 வெள்ளியன்று மிகச் சிறப்பாக நடைபெற்றது. காலையில் ஸ்ரீ முத்துச்சட்டநாதசுவாமி யதாஸ்தானத்திலிருந்துபுறப்பாடு ஆகி, வலம்புரிமண்டபத்திற்கு எழுந்தருளலும், அபிஷேக ஆராதனைகள் நடைபெற்றபின், இரவு புறப்பாடாகி யதாஸ்தானத்திற்கு எழுந்தருளலும், அதன் பின் புழுகாப்புத் தரிசனமும் நிகழ்வுற்றது. தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில்எழுந்தருளிவழிபாடாற்றினார்கள் தரிசனத்தின்போது வந்திருந்த அன்பர்பலருக்கு அருட்பிரசாதம் வழங்கினார்கள். அன்றுமாலை 5 மணியளவில் தருமையாதீனம் ஸ்ரீ குருஞானசம்பந்தர் உயர்பள்ளி தமிழாசிரியர் வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன், எம். ஏ., 'ஆபதுத்தாரணர்மாலை' என்ற பொருளில் சொற்பொழிவு ஆற்றினார். அன்பர்பலர் வந்திருந்து சொற்பொழிவு கேட்டும், சுவாமி தரிசனம்செய்தும் பயன் பெற்றனர்.

## திட்டக்குடியில் திருமுறை மாநாடு—சிவபூசை மாநாடு

பெண்ணாகடம் சமயப்பேரவை,திருமுறைக்கழகம், முதலியவற்றின் சார்பில் திட்டக்குடி அருள்மிகு வைத்தியநாத சுவாமி கோயிலில் திருமுறை மாநாடும் சிவபூசைமாநாடும் 'திட்டக்குடி தலமாண்பு' நூல் வெளியீட்டு விழாவும் 12—3—83 அன்று சிறப்பாக நடைபெற்றது. சிவபூசைச் செல்வர்கள் 61பேர் இரவு முழுமையும் நான்குகால சிவபூசை செய்தனர். திருமுறை ஊர்வலம் நிகழ்ந்தது. அறிஞர் பலர் திருமுறை விழாவில் கலந்து கொண்டு உரையாற்றினர். நூல்வெளியீடு, திருமுறைகளை

ஆலயத்திற்கு வழங்கல் ஆகிய சிறப்பு நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 13—3—83 அன்று சிவபூசை நிறைவுக்குப்பின் ஆலய வழிபாடும் மாகேசுவர பூசையும் நிகழ்வுற்றன. விழாக்களில் அன்பர் பலர் கலந்து கொண்டு பயனடைந்தனர்.

## ஸ்ரீ குருஞானசம்பந்தர் பணிமன்றம்

கோவை :

கோயம்புத்தூர் ஸ்ரீகுருஞானசம்பந்தர்பணிமன்றக்கிளையின் சார்பில் 15—4—83 முதல் 18—4—83 வரை மாணவர்களுக்கான சமயப்பயிற்சி வகுப்புகள் நடைபெற்றன. பெரிய நாயக்கன் பாளையம் அரங்கசாமி நாயுடு பெண்கள் மேனிலைப்பள்ளியில் இப்பயிற்சி, மாணுக்கர் 16 பேருக்கும் மாணுக்கியர் 10 பேருக்கும் ஆக 26 பேருக்கு அளிக்கப்பட்டது. திருவாளர்கள் அரங்க தாமோதர நாயுடு, பி. எஸ். முத்தையா, எஸ். ஷண்முகம், சொ. அரியநாயகம், இராம. ஏகப்பன், அரங்க. இராசேந்திரன், இராம. கிருஷ்ணமூர்த்தி, டாக்டர். சத்தியமூர்த்தி ஆகியோர்கலந்து கொண்டு உரையாற்றினர். 9-ஆம் வகுப்புக்குரிய மாணவர்கள் கலந்துகொண்டனர். சமயப்பயிற்சி-16வகுப்புகளில் நிகழ்ந்தன. மாணவர்கள் சமய அறிவுபெற நன்முயற்சியாக இது அமைந்திருந்தது

## சென்னை தருமபுர ஆதீன சமயப்பிரசார நிலையம்

## 1983 - மார்ச்

### நாயன்மார் குருபூஜை

எறிபத்த நாயனுர், காரி நாயனுர், கோச்செங்கட் சோழ நாயனுர், நேசநாயனுர், கணநாத நாயனுர், முனையடுவார்நாயனுர் காரைக்காலம்மையார் இவர்களின் குருபூஜை முறையே மார்ச் 1, 9. 13, 20, 22, 24, 30 தேதிகளில் நிலைய பூஜைமடத்தில் நடைபெற்றது. புலவர் திரு. K. ஆறுமுகம் பெரியபுராணம் வாசித்து விளக்கவுரை நிகழ்த்தினுர்கள். ஸ்ரீ அப்பர் குருகுலமாணவர்களும், நிலைய அன்பர்களும் கேட்டுப்பயன் பெற்றனர்.

### சோமவாரக் கயிலைப் பிரார்த்தனை

1983 மார்ச் 7, 14, 21, 28 ஆகிய சோமவாரத் தேதிகளில் நிலைய பூஜைமடத்தில் கயிலைப் பிரார்த்தனை நடைபெற்றது. நிலைய ஓதுவார், ஸ்ரீ அப்பர் குருகுலமாணவர்களுடன், கயிலைப் பதிகங்கள்பாடி, தீபாராதனை செய்து, பஞ்சபுராணம்பாடி.

வழிபாடு செய்யப்பெற்றது. பிரார்த்தனையில் நிலைய அன்பர் களும் கலந்து கொண்டார்கள்.

## சிவஞானபோதம் விரிவுரை

1983 மார்ச் 17 ஆம் தேதி மாலை 6-00 மணிக்கு நிலைய நூலக அரங்கில் திரு. N. R. முருகவேள் அவர்களின் சிவஞான போத விரிவுரைத் தொடக்க விழா நடைபெற்றது. விழா ஆரம்பத்தில் நிலைய சுவாமிகள் எல்லோருக்கும் வரவேற்புக்கூறி, ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானத்தின் ஆசியுரையைப் படிக்கச் செய்தார்கள் விழாவிற்குத் தலைமை வகித்த சென்னை உயர்நீதி மன்ற நீதிபதி திரு. R. செங்கோட்டு வேலன் அவர்கள் பேசுகையில், சைவ சித்தாந்தம் தெரிந்து கொள்ள த்வைதம், அத்வைதம், விசிஷ் டாத்வைதம் ஆகியவற்றைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்றும், இந்த நான்கு முறைகளையும் திரு. N. R. முருகவேள் அவர்கள் நன்கு அறிந்தவர் என்றும், ஆகவே அவர்களின் விரிவுரையை எல்லோரும் தொடர்ந்து வந்து கேட்டுப் பயன் பெற வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்கள். விரிவுரை யைத் தொடக்கி வைத்த திரு. P. திருஞானசம்பந்தபிள்ளை அவர்கள் பேசுகையில், சைவ சித்தாந்தத்திற்கு இலக்கணம் வகுத்த மெய்கண்டதேவர், சிவஞான போதத்தில் உள்ள பன்னிரண்டு சூத்திரங்களில் விரிந்த கருத்துக்களை அமைத்துக் கூறியுள்ளார் என்று சொன்னார்கள்.

இந்து சமய அறநிலையத்துறை முன்னாள் ஆணையர் திரு. M. K. பாலசுப்பிரமணியம் அவர்கள், தனது வாழ்த்துரையில் தருமையாதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் சென்னை வாழ் மக்களின் நலம் கருதி திரு. N. R. முருகவேள் அவர்களின் சிவஞானபோதம் விரிவுரை நடைபெற ஏற்பாடு செய்திருக் கிறார்கள், அதை எல்லோரும் அவசியம் கேட்க வேண்டும் என்று கூறினார்கள்.

பின்னர் திரு. N. R. முருகவேள் அவர்கள் சிவஞானபோதம் விரிவுரையைத் தொடங்கி, மெய்கண்டாருடைய வரலாற்றைக் கூறி, அவர் இயற்றிய சிவஞான போதம் திருக்குறளைப்போல் சுருக்கமாகக் கூறி விளங்கவைக்கும் பேருண்மையினைக் கூறு கின்ற தத்துவ நூல் என்றும், அதில் பல அதிகரணங்கள் வருகின்றன என்றும், இதற்கு உரைநூலாக விளங்குவது சிவ ஞான சித்தியார் என்ற நூலாகும் என்றும் கூறி, சூத்திரங்களின் விளக்கங்களையும் தத்துவங்களையும் அடுத்து வரும் வகுப்புக்

களில் காண்போம் என்று கூறினர்கள். திரு. M. R. தாமோதர முதலியார் அவர்கள் எல்லோருக்கும் நன்றிகூற, விழா இனிது நிறைவுற்றது.

## வேளூர் கிருத்திகைப் பிரசாதம் வழங்கும் விழா

இவ்விழா 20—3—83 ஆம் தேதி மாலை நிலயத்தில் நடைபெற்றது. ஸ்ரீ செல்வமுத்துக் குமாரசுவாமி படத்திற்கு அர்ச்சனை செய்தபிறகு நிலைய ஓதுவார் திரு. T. S. தண்டபாணி தேசிகரும், திரு. N. இராமமூர்த்தி அய்யரும் வேளூர்ப் பதிகங்களும் முருகன் நாமாவளிகளும் பாராயணம் செய்தார்கள். விழாவில் சிறப்புரையாற்றிய திருமதி. R. கௌரி அவர்கள், அப்பர் சுவாமிகளின் தேவாரத்தில் வருகின்ற "சீற்றமாயினதேய்ந்தறுங் காண்மினே", "புள்ளிருக்கு வேளூர் உருகிநைபவ ருள்ளங் குளிருமே" என்கிற வரிகளுக்கு விளக்கம் கூறினர்கள். கிருத்திகைப்பிரசாதம் அன்பர்கட்கு வழங்கப்பட்டது.

## மாதாந்திர சமயப் பிரசார வழிபாடு

இவ்வழிபாடு 27—3—83 மாலை சென்னை திருவல்லிக்கேணி திருவேட்டீசுவரன்பேட்டையில் உள்ள ஸ்ரீ செண்பகாம்பிகை சமேத ஸ்ரீ திருவேட்டீசுவரர் ஆலயத்தில் சிறப்பாக நடைபெற்றது. சுவாமிக்கும் அம்பாளுக்கும் விசேஷ அபிஷேக அர்ச்சனை செய்யப்பெற்றது. வழிபாட்டின் போது நிலைய ஓதுவார் திருமுறைப் பாராயணம் செய்தார்.

வழிபாட்டிற்குப் பிறகு சமயப்பிரசாரக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்குநிலையசுவாமிகள் தலைமைவகித்தார்கள். முதலில் பேசிய திரு. K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள் திருவேட்டீஸ்வரன் பேட்டையிலுள்ள கோயில் புராதீனமானது என்றும், வழிபாட்டிற்கும், கோயிலைத் தூய்மையாக வைத்துக் கொள்வதற்கும் தருமையாதீனமே மிகவும் சிறப்புடையது என்றும், அரசாங்கத்தாரால் கோயிலுக்குப்பரிசு கொடுக்க வேண்டுமென்றால், தருமையாதீனக் கோயிலுக்கே கிடைக்கும் வாய்ப்புஉண்டு என்றும், ஏனையகோயில்களுக்கு அவ்வாய்ப்பு இல்லையென்றும் கூறினர்கள். அடுத்து திரு. A. J. இராமசாமி முதலியார் அவர்கள், திரு. செ. சுந்தரன் அவர்கள், திரு. N. ராசு அவர்கள், ஆகியோர் உரையாற்றினர். நிலைய சுவாமிகள் எல்லோருக்கும் நன்றி கூறியபின் கூட்டம் இனிதுநிறைவுற்றது.